பக்கங்கள்: 24 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

கண்கவர் ஆடைத் தெரிவுகளுக்கு
சரவணா ரெக்ஸ்
இல.526,529 பருத்தித்துறை வீதி, நல்லூர்,யாழ்ப்பாணம்.
தொ.பே.: 0778448045
இல.171, பிரதான வீதி, நெல்லியடி.
தொ.பே.: 021 226 2992

விடியல் 01 வள்ளுவர் ஆண்டு 2048 புரட்டாதி 08, ஞாயிற்றுக்கிழமை 24.09.2017 கதிர் 322

# முன்னேற்றத்தை நேரில் வந்து பார்க்க ஐ.நா.ஆணையருக்கு மைத்திரி அழைப்பு



## இலங்கையின் நடவடிக்கைகளுக்கு அவர் பாராட்டும் தெரிவித்தாராம்

நியூயோர்க்,செப்ரெம்பர் 24

ஐ.நா.மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கை தொடர்பாக நிறைவேற்றப்பட்ட முன்மொழிவுகள் முழுமைப்படுத்தப்பட்டுள்ளமையை நேரில் காண்பதற்காக அடுத்த வருடம் இலங்கைக்கு விஜயம் செய்யுமாறு ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சயிட் அல் ஹுசைனுக்கு இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அழைப்பு விடுத்தார்.

பக்கம் 22 »

அளப்பு அருணாசலம்



இப்ப... கைகொடுக்கிறார்... பிறகு... கால் வாருவார்...!

## சுன்னாகத்தில் நேற்றிரவு மூன்று கடைகள் தீயில்!

சுன்னாகம், செப்.24

சுன்னாகம் சந்திப் பகுதியில் நேற்று முன்னிரவு மூன்று கடைகளில் தீ பற்றிப் பரவியது.

இலத்திரனியல் கடை ஒன்றில் ஏற்பட்ட மின் ஒழுக்கினால் இந்தத் தீ பரவியதாக முதலில் கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

ஒரு கடையில் ஏற்பட்ட தீயினால் பக்கத்தில் இருந்த இரு கடைகளுக்கும் தீ பரவியதாகத் தெரிவிக்கப்பட்டது.

பக்கத்திலிருந்து ஒரு புடைவைக் கடை மற்றும்

பக்கம் 03 »

## கட்சியின் முடிவை மீறி அமைச்சர் பதவி ஏற்ற குணசீலனிடம் விளக்கம் கோருகிறது ரெலோ

வவுனியா, செப்.24

கட்சியின் முடிவை மீறி மாகாண சபை அமைச்சர் பதவியை ஏற்றமைக்காக குணசீலனிடம் விளக்கம் கோருவதற்கு ரெலோ முடிவு செய்துள்ளது.

ரெலோ கட்சியின் தீர்மானத்துக்கு மாறாக – அது முதலமைச்சருக்குச் செய்த பரிந்துரைக்கு முரணாக – கட்சியின் முடிவை மீறி – வடக்கு மாகாண முதலமைச்சருடன் சேர்ந்து செயற்பட்டு, மாகாண அமைச்சர் பதவியை ஏற்றமைக்காக, அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை ஏன் எடுக்கக்கூடாது என்பதற்கு ஏதேனும் காரணங்கள், விளக்கங்கள் இருக்குமானால் அவற்றை எழுத்தில் தெரிவிக்கும்படி குணசீலனைக் கோருவது என ரெலோ தீர்மானித்துள்ளது.

நேற்று வவுனியாவில் நடைபெற்ற அக்கட்சியின் தலைமைக் குழுக் கூட்டத்தில் இவ்வாறு தீர்மானிக்கப்பட்டதாக அறியவந்தது.

கட்சியின் தலைவரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன்

பக்கம் 03 »

## இடைக்கால அறிக்கையில் ஆக்கபூர்வமான அம்சங்கள்

நிறையவே உள்ளன என்கிறார் எதிர்க்கட்சித் தலைவர் தவராசா



யாழ்ப்பாணம், செப்.24

“கடந்த வாரம் அரசமைப்புப் பேரவையாகக் கூடிய நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட வழிகாட்டல் குழுவின் இடைக்கால அறிக்கையில் ஆக்கபூர்வமான – முன்னேற்றகரமான – வரவேற்கத்தக்க– பல்வேறு அம்சங்கள் உள்ளன. ஆகையால் எடுத்த எடுப்பில் அதை நிராகரிப்பதை விடுத்து, அதில் உள்ள நல்ல அம்சங்களைச் சீர்தூக்கிப் பார்த்து,

பக்கம் 03 »

## முதல்வர் விக்கிக்கு ரெலோவின் ஆதரவு இந்த மாகாண ஆட்சி வரை மட்டுமே!

வவுனியா, செப்.24

வடக்கு மாகாண சபையின் தற்போதைய ஆட்சிக் காலம் முடியும் வரை – அடுத்த ஒரு வருடத்துக்கு – முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரனுக்கு ஆதரவு வழங்குவது, ஆனால் அதற்குப் பின்னர் அவரை அனுசரித்துச் செயற்படுவதுமில்லை; அவருடன் அணி சேருவதுமில்லை – இப்படி ஒரு பொதுவான இணக்கப்பாடு வவுனியாவில் நேற்று மாலை நடைபெற்ற ரெலோவின் தலைமைக் குழுக் கூட்டத்தில் எட்டப்பட்டதாக அறியவந்தது.

தற்போதையநிலையில்

பக்கம் 03 »

## தேர்தல் ஒழுங்குகள் குறித்து அவசரமாக தமிழரசுக் கட்சியுடன் பேச ரெலோ முயற்சி

வவுனியா, செப்.24

உள்ளூராட்சி தேர்தல் ஒழுங்குகள் மற்றும் புதிய அரசமைப்புக்கான வழிகாட்டல் குழுவின் இடைக்கால அறிக்கை ஆகியவை குறித்து இலங்கைத் தமிழரசுக் கட்சியுடன் விரைந்து – அவசரமாக – பேச்சு நடத்தி முடிவுகளை எடுப்பது என ரெலோவின் தலைமைக்குழு நேற்று மாலை நடைபெற்ற தனது கூட்டத்தில் தீர்மானித்தது.

இந்த அவசரப் பேச்சுக்கான இடம், திகதி, நிகழ்ச்சி நிரல் மற்றும் விடயங்கள் குறித்து பரிசீலித்து, இயன்ற விரைவில் பதிலளிக்குமாறு கோரும் கடிதம் ஒன்றை இன்று ஞாயிற்றுக்கிழமை இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர்

பக்கம் 03 »

## வடக்கு நிலைமை குறித்து ஆளுநர் பொலிஸ் உயரதிகாரிகளுடன் ஆய்வு

யாழ்ப்பாணம், செப்.24

வடமாகாணத்தில் இடம்பெறும் குற்றச்செயல்களைத் தடுப்பது சம்பந்தமான ஆலோசனைக் கூட்டமொன்று நேற்று முற்பகல் 10 மணிக்கு யாழ். சுண்டுக்குளியில் அமைந்துள்ள ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்றது.



கலந்துரையாடலில் வட மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் ரொசான் பெர்னாண்டோ, வவுனியா மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தேசபத்து தென்னக்கோன், கிளிநொச்சி சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி பாலித சிறிவர்த்தன, அதிகாரி கந்தவத்த, மன்னார் உதவி பொலிஸ் அத்தியட்சகர் சிறிவர்த்தன மற்றும் ஆளுநரின் செயலாளர் எல்.இளங்கோவன், அந்தரங்கச் செயலர் ஜே. எம். சோமசிறி உட்படப் பல

பக்கம் 03 »

## பேரறிவாளனின் பரோல் விடுதலை மேலும் ஒரு மாதத்துக்கு நீடிப்பு!

சென்னை, செப்.24

ராஜீவ்கொலைவழக்கில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டு கடந்த 26 ஆண்டுகளாக சிறைவைக்கப்பட்டிருந்த நிலையில் கடந்த மாதம் 24ஆம் திகதி ஒரு மாத பரோலில் விடுவிக்கப்பட்டிருந்த பேரறிவாளனின் பரோல் விடுதலை மேலும் ஒரு மாதம் நீடிக்கப்பட்டது.

நேற்று அவரது முன்னைய பரோல் விடுதலை முடிவடைய இருந்த நிலை

பக்கம் 03 »



காலைக்கதிர் Kalaikkathir



# ஈழத்தமிழர் தேசம் அமைக்க பொது வாக்கெடுப்பு நடத்துக!

## ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் வைகோ கோரிக்கை

ஜெனீவா,செப்.24

ஈழத்தமிழர் தேசம் அமைப்பதற்கான பொது வாக்கெடுப்பு ஒன்றை நடத்துமாறு ஜெனீவாவில் நடைபெறும் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் பிரதான அரங்கத்தில் நேற்று முன்தினம் உரையாற்றிய மறுமார்லர்ச்சி தி.மு.கழகத்தின் தலைவர் வைகோ கோரினார்.




நேற்றுமுன்தினம் அவர் ஆற்றிய உரையின் விவரம் வருமாறு:-

இலங்கை அதிபர் மைத்திரிபால சிறிசேனா, 2016 நவம்பர் 27 ஆம் திகதியன்று, ஐ.நா.வின் புதிய பொதுச்செயலாளர் அன்டோனியோ குட்டரெஸ் அவர்களின் உதவி நாடி ஒரு கோரிக்கை விடுத்துள்ளார்.

2015 செப்ரெம்பர் மாதம் இலங்கை அரசு ஒப்புக்கொண்ட மனித உரிமைகள் கவுன்ஸிலின் 30/1 தீர்மானத்தை நிறைவேற்றும் பொறுப்பில் இருந்து இலங்கையை விடுவிக்குமாறு மிகத் தந்திரமாகக் கேட்டுக் கொண்டுள்ளார்.ஆனால், அன்டோனியோ குட்டரெஸ் மனித உரிமைகளின் பாதுகாவலர் ஆவார்.

இந்தியாவில் ஏழரைக் கோடித் தமிழர்கள் வாழுகின்ற தமிழ்நாடு மாநிலத்தின் சட்டமன்றத்தில்,2013 மார்ச் 27 ஆம் திகதியன்று ஒருமனதாக ஒரு தீர்மானம் நிறைவேற்றப் பட்டது. இலங்கைத் தீவில் தமிழர் தாயகத்தில் வாழும் ஈழத்தமிழர்களிடமும், உலகம் முழுமையும் வாழ்கின்ற புலம்பெயர் வாழ் ஈழத் தமிழர்களிடத்திலும், சுதந்திரத் தமிழ் ஈழ தேசம் அமைப்பதற்கான பொதுவாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்பதுதான் அத்தீர்மானம் ஆகும்.

1979 ஆம் திகதி ஆண்டு மே 10 ஆம் திகதி, அமெரிக்க நாட்டில் உள்ள மசாசூசெட்ஸ் மாநிலத்தின் சட்டமன்றத்தின் மக்கள் பிரதிநிதிகள் சபையில், ஒரு தீர்மானம் நிறை வேற்றப் பட்டது.

மிகப் பழங்காலத்தில் இருந்து இலங்கைத்தீவில், தமிழர்களும் சிங்களவர்களும் முற்றிலும் வேறுபட்ட மொழிகளையும், மதம், பண்பாடு, வாழுகின்ற பிரதேசங்களையும் கொண்டு இருந்தனர். பிரித்தானியர்கள் அத்தீவை வெற்றி கண்டபிறகு, தங்கள் நிர்வாக வசதிக்காக இரண்டு பகுதிகளையும் பிரித்தானியர்கள் ஒன்றாக இணைத்தனர். எனவே, தமிழர்களுக்கு இழைக்கப்படுகின்ற அநீதிகளுக்கு முடிவு கட்டவும், அவர்கள்படும் துன்பங்களில் இருந்து விடுவிக்கவும் அமெரிக்கக் குடியரசுத் தலைவரையும், அமெரிக்க நாடாளுமன்றத்தையும் வலியுறுவத்துவது என இந்த மசாசூசெட்ஸ் சட்டமன்றம் தீர்மானிக்கின்றது. இந்தத் தீர்மானத்தின் பிரதிகளை, அமெரிக்கக் குடியரசுத் தலைவருக்கும், ஐ.நா. சபையின் பொதுச் செயலாளருக்கும் அனுப்புவதெனவும் தீர்மானிக்கின்றது.

மேலும், மசாசூசெட்ஸ் மாநிலத்தின் ஆளுநர் எட்வர்டு ஜே. கிங் அவர்கள், 1979 மே 22 ஆம் திகதியை ஈழத்தமிழர் நாள் என்று அறிவித்தார் என்பதையும் இந்த மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

ஆனால் பிற்காலத்தில், அதே அமெரிக்க அரசாங்கம், முன்பு வகுக்கப்பட்ட நியாயமான கோரிக்கைகளுக்கு எதிராகச் செயல்பட்டு, இந்தியாவுடன் இணைந்து, ஈழத் தமிழர் இனப்படுகொலையை இலங்கை நடத்துவதற்குத் துணை போயிற்று என்பதையும் வேதனையுடன் சுட்டிக் காட்டுகின்றேன்.

மனித உரிமைகள் கவுன்ஸிலின் உறுப்பினர்நாடுகள், பொது வாக்கெடுப்பின் மூலமாகத் தமிழ் ஈழதேசத்தை அமைக்க முன்வர வேண்டுகிறேன். - என்றார்.

(உ)

## எந்த அகதிக்கும் இலங்கையில் இடமில்லை என்கிறார் பிரதமர்

கொழும்பு,செப்.24

எந்த நாட்டில் இருந்து வந்தாலும், அடைக்கலம் கோரும் அகதிகளை இலங்கை ஏற்றுக் கொள்ளாது என்று இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.



ரோஹிங்யா அகதிகள் தொடர்பான இலங்கையின் நிலைப்பாடு சம்பந்தமாக, அரசாங்க நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் நேற்று முன்தினம் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நல்லாட்சி அரசாங்கத்தின் வெளிவிவகாரக் கொள்கையில் எந்த அகதிகளையும் ஏற்றுக் கொள்ளும் முடிவு எடுக்கப்படவில்லை.

எந்தவொரு நாட்டினதும் எந்தவொரு குடிமகனும், குடிவரவு நடைமுறைகளுக்கு அமைவாக இலங்கைக்குள் நுழையலாம்.

மியான்மாரின் ரோஹிங்யா அகதிகள் இலகுவாக பங்களாதேஷ் அல்லது தாய்லாந்துக்குள் நுழையலாம்.

ஆனால் அவர்கள் இங்கு வருவதற்கான நோக்கம், ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட முயற்சியாகத் தெரிகிறது. இலங்கை அரசாங்கம் அத்தகைய சூழ்ச்சிகளை அனுமதிக்காது - என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(உ)

## மன்னார் விபத்தில் இளைஞன் சாவு!

மன்னார்,செப்.24

மன்னார்- யாழ் பிரதான வீதி, மாந்தை சந்தியில் நேற்று பிற்பகல் 2.30 மணியளவில் இடம் பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார் என மன்னார் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



ஆத்திமோட்டைப் பகுதியைச் சேர்ந்த 19 வயதான சண்முகப்பிள்ளை இந்துசன் என்ற இளைஞனே உயிரிழந்துள்ளார்.

திருக்கேதீஸ்வரத்தில் இருந்து 4 இளைஞர்கள் ஓட்டோ ஒன்றில் பயணித்துள்ளனர்.

அவர்களின் ஓட்டோ வீதியைக் கடக்க முற்பட்ட போது, மன்னாரில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்ற லொறியுடன் மோதி விபத்து சம்பவித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஓட்டோவில் பயணித்த திருக்கேதீஸ்வரத்தை சேர்ந்த 19 வயதுடைய சதுகரன், கூறாய் மேற்கைச் சேர்ந்த 20 வயதான சதீஸ்குமார், கைதடியைச் சேர்ந்த 18 வயதுடைய எஸ்.தமிழ் வாணன் ஆகிய மூன்று இளைஞர்களும் படுகாயமடைந்துள்ளனர்.

இந்த மூன்று இளைஞர்களும் சிகிச்சைக்காக மன்னார் பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பாக அந்த லொறியின் சாரதியைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். உயிரிழந்த இளைஞனின் சடலம் மன்னார் பொது வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

விபத்துக் குறித்த மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (உ)

## வடக்கு, கிழக்கை இணைக்க முயற்சி; அது நடந்தால் இரத்த ஆறு ஓடுமாம்!

### தேசிய காங்கிரஸின் அதாவுல்லா எச்சரிக்கை

பாலமுனை, செப்.24

வடக்கு, கிழக்கு மாகாணங்களை மீண்டும் இணைத்துக் கொள்வதற்கான முயற்சிகள் திரைமறைவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என தேசிய காங்கிரஸ் கட்சியின் தவைரும், முன்னாள் அமைச்சருமான ஏ.எல்.எம்.அதாவுல்லா தெரிவித்தார்.



பாலமுனையில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற ‘காலம் அழியும்; உண்மை ஒளிரும்’ எனும் தொனிப் பொருளிலான பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர், அவ்வாறு இரண்டு மாகாணங்களும் இணைக்கப்பட்டால் தமிழ், முஸ்லிம், சிங்கள சமூகங்களிடையே மீண்டுமொரு பிரிவினை ஏற்படும் என கூறினார்.

இவ்வாறு இந்த மாகாணங்கள் இரண்டும் மீண்டும் இணைக்கப்பட்டால் அது நாட்டில் மீண்டும் ஓர் இரத்த ஆறு ஒடுவதற்கு வழி ஏற்படுத்தும் எனவும், அவற்றை இணைப்பதற்கு வெளிநாட்டு சக்திகள்செயற்பட்டுவருகின்றன எனவும் அவர் தெரிவித்தார்.

வட மாகாண முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன் 20 ஆவது திருத்தச் சட்டமூலத்தை நிராகரித்துள்ளார், ஆனால் கிழக்கு முதலமைச்சர் அதனை ஆதரித்து நிறைவேற்றியுள்ளார் எனவும் அவர் குறிப்பிட்டார்.

வடமாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கு விளங்கிய அந்த விடயம் அமைச்சர் ரவூப் ஹக்கீமுக்கும், சம்பந்தனுக்கும், சுமந்திரனுக்கும் விளங்கவில்லையா? - எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

(உ)

## தெஹிவளை மிருகக்காட்சிச்சாலையை இனி இரவிலும் பார்வையிட ஏற்பாடு

கொழும்பு,செப்.24

தெஹிவளை மிருகக்காட்சிச்சாலை வாரத்தின் மூன்று நாட்கள் இரவு வேளைகளில் பொது மக்களின் பார்வைக்காக திறக்கப்பட்டுள்ளது.

இதற்கான உத்தியோக பூர்வ வைபவத்தை வலுவாதார அபிவிருத்தி, வனஜீவராசிகள் மற்றும் புத்தசாசன அமைச்சரான காமினி ஜயவிக்கரம பெரேரா ஆரம்பித்து வைத்தார்.

பெரும்பாலானோரின் வேண்டுகோளுக்கிணங்க வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய மூன்று நாட்களில் இரவுவேளைகளில் 7.00 மணி முதல் 10.00 மணி வரை இந்த மிருகக் காட்சிசாலை பொதுமக்களின் பார்வைக்காகத் திறக்கப்பட்டுள்ளது.

இரவுவேளைகளில் மிருகக் காட்சிச்சாலைக்கு வருவோர் ‘பிளாஷ்’, ஒளியூட்டச் செய்து புகைப்படம் எடுத்தல் தடை செய்யப்பட்டுள்ளது. (உ)

காலைக்கதிர் Kalaikkathir



# வட்டு. பிரதேச வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவு திறப்புவிழா



வட்டுக்கோட்டை பிரதேச வைத்தியசாலையில்GFATM திட்ட உதவியுடன் புதிதாக அமைக்கப்பட்டுள்ள வெளிநோயாளர் பிரிவு கட்டடத்திறப்புவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.

வைத்தியசாலைப் பொறுப்பு மருத்துவர் திருமதி காந்தநேசன் ரதினி தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ் வில் முதன்மை விருந்தினராக சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்தியத்துறை அமைச்சர் வைத்தியர் ராஜித சேனாரத்ன கலந்து கொண்டு கட்டடத்தைத் திறந்துவைக்கவுள்ளார்.

விசேட விருந்தினர்களாக வடமாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே மற்றும் வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் வைத்தியர் ஞானசீலன் குணசீலன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (உ)

# ஐ.நா. செயலாளர் நாயகத்தையும் சந்தித்தார் ஜனாதிபதி மைத்திரிபால

பலமான நல்லிணக்கத்துடன் சுபீட்சமான தேசமாக இலங்கையை கட்டியெழுப்புவதற்கு எடுக்கப்படும் முயற்சிகளுக்கு அனைத்துவகையான உதவிகளையும் வழங்கத் தயார் என ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் அந்தோனியோ குட்டரஸ் அவர்கள் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் சபையின் 72ஆவதுகூட்டத்தொடரில்கலந்து கொள்வதற்காக அமெரிக்கா சென்றுள்ள ஜனாதிபதி மைத்திரிபாலசிறிசேனவுக்கும்ஐ.நா.செயலாளர் நாயகம் அந்தோனியோ குட்டரஸ் அவர்களுக்குமிடையேயான சந்திப்பு நேற்றுப் பிற்பகல் நியூயோர்க்நகரில்நடைபெற்றது. இந்த சந்திப்பின் போதே செயலாளர் நாயகம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கை தேசத்துடன் மிக நெருக்கமாகசெயற்பட்டுஅனைத்து இலங்கையர்களுக்கும் சுபீட்சம் மற்றும் சகவாழ்வு நிறைந்த, உலகின்முன்மாதிரிதேசமாக இலங்கை எழுந்திருப்பதற்கு ஐ.நா. முழுமையாக உதவும் என்றும் செயலாளர் நாயகம் தெரிவித்தார். (உ)

## முதல்வர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு மாகாண சபையின் நிர்வாகம் குழம்பிப் போகாமல் இருப்பதற்காக முதலமைச்சருக்கு – அவரின் தற்போதைய பதவிக் காலம் முடியும் வரை – ஆதரவு வழங்குவது என்றும் –

அதற்குப் பின்னர் அவருக்கு எந்த வடிவத்தில் ஆதரவு வழங்குவது குறித்தும் சிந்திப்பதேயில்லை என்றும் –

நேற்றைய ரெலோ கூட்டத்தில் இணக்கம் காணப்பட்டதாக அறிய வந்தது. (உ)

## தேர்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாவை சேனாதிராஜாவிடம் அவசரமாகக் கையளிப்பது என்றும் நேற்று ரெலோ முடிவு செய்தது.

இன்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய குழு அம்பாறையில் கூடுகின்றது.

அதற்காக அம்பாறைக்குச் சென்றிருக்கும் அக்கட்சியின் தலைவர் மாவை சேனாதி ராஜாவை அங்கு வைத்துச் சந்தித்து, பேச்சுக்கான திகதியைப் பெற்றுக் கொள்வதற்கு ரெலோ முயற்சித்து வருகின்றது.

இது தொடர்பில் கட்சியின் உத்தியோகபூர்வ கடிதத்துடன் கட்சியின் உப தலைவரான ஹென்றி மகேந்திரனை இன்று அம்பாறைக்குச் சென்று மாவை சேனாதிராசாவை அங்கு வைத்துச் சந்தித்து, கடிதத்தை ஒப்படைத்துப் பேசும்படி ரெலோ தலைமைக் குழு அவரை நேற்றுப் பணித்தது.

நேற்றைய ரெலோ கூட்டத்தில் இந்த விடயம் குறித்துப் பேசப்பட்டவை வருமாறு:-

உள்ளூராட்சித் தேர்தல் விரைவில். அது குறித்து முற்கூட்டியே தமிழரசுக் கட்சியுடன் பேசி முடிவுகளை எட்ட வேண்டும்.

அத்தேர்தலை கூட்டமைப்பாகவே எதிர்கொள்ள வேண்டும். தேர்தல் குறித்து பிரத்தியேகமாகத் தமிழரசுக் கட்சியுடன் மட்டும் பேசினால் போதுமானது.

அதுபோல புதிய அரசமைப்புக்கான இடைக்கால அறிக்கை குறித்தும் தமிழரசுக் கட்சியுடன் பேச்சு நடத்த வேண்டும்.

இவ்விடயம் குறித்துத் தமிழரசுக் கட்சியுடன் பேசும் ரெலோ குழுவில்செல்வம்அடைக்கலநாதன், என்.ஸ்ரீகாந்தா, விநோநோகராகலிங்கம், ஹென்றி மகேந்திரன், இந்திரகுமார் பிரசன்னா ஆகிய ஐவர் இடம்பெற்றிருப்பர்.

தேர்தல் பங்கீடுகள் குறித்து தெளிவான முடிவுகளை நேரத்துடனேயே வகுத்துக் கொள்ள வேண்டும். – என்றும் தீர்மானிக்கப்பட்டது.

இடைக்கால அறிக்கை தொடர்பில் கட்சியின் பல மட்டத் தலைவர்களையும் அழைத்து, புத்திஜீவிகள், கல்விமான்கள், பிற முக்கியஸ்தர்களோடு எதிர்வரும் 8 ஆம் திகதி முழுநாள் ஆய்வுக் கூட்டத்தை வவுனியாவில் நடத்தவும் ரெலோ தீர்மானித்து. (உ)


## அலுவலக மேலாளர் தேவை

யாழ்பாணத்தில் இயங்கும் அலுவலகம் ஒன்றிற்கு அலுவலக மேலாளர் ஒருவர் தேவை. பெண்கள் விரும்பத்தக்கது. அலுவலகம் ஒன்றில் மேலாளர் தரத்திலான அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**விண்ணப்பிக்கவும்**
**விளம்பர இல:-10**
**மே/பா. 'காலைக்கதிர்'**
**30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்.**


## பேரறிவாளனின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யில் அதை மேலும் ஒரு மாதம் நீடிக்கும் ஆணை தமிழக அரசினால் நேற்று மாலை வெளியிடப்பட்டது. (உ)

## சுன்னாகத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நகைக் கடை ஆகியவற்றிலேயே தீபரவியதாகத் தெரிவிக்கப்பட்டது.

தீ அணைப்புப் படையினர் விரைந்து தீயை அணைக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்தனர். சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (உ)

## இடைக்கால...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த நல்ல வாய்ப்பைத் தமிழர்கள் தந்திரோபாயமாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

–இவ்வாறு கூறியிருக்கின்றார் வடக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா.

ஒற்றையாட்சி முறைமையே தொடரப் போவதாக பலரும் விமர்சனம் செய்கின்றனர். ஆனால் அவர்கள் இந்த இடைக்கால அறிக்கையை சரிவரப் படித்தார்களாகஎன்பதுதெரியவரவில்லை.

இந்த இடைக்கால அறிக்கையைத் தனியப் பார்க்கக் கூடாது. நடவடிக்கைக் குழுவின் இடைக்கால அறிக்கையையும் ஆறு உபகுழுக்களின் அறிக்கைகளையும் சேர்த்துப் பார்த்துதான் முடிவு செய்ய வேண்டும்.

உபகுழு ஒன்றில் கூறப்பட்ட விடயத்தை புறமொதுக்கி, வழிகாட்டல்குழுவின் இடைக்கால அறிக்கை ஏதேனும் பரிந்துரை செய்யாதவிடத்தில் எல்லாம் உபகுழுவின் அறிக்கைகளே இன்றைய நிலைப்பாடாகக் கொள்ளப்பட வேண்டும்.

உதாரணமாக மாகாணங்களுக்கான பொலிஸ் குறித்து எதுவும் இடைக்கால அறிக்கையில் கூறப்படவில்லை. ஏனென்றால் அது பற்றிய உபகுழுவின் அறிக்கைதான் இடைக்கால அறிக்கையைச் சமர்ப்பித்த வழிகாட்டல்குழுவின்கருத்தாகவும் கொள்ளப்பட வேண்டும்.

ஆகவே இடைக்கால அறிக்கையில் பொலிஸ் குறித்து எதுவும் கூறவில்லை என்று கருதக் கூடாது. உபகுழு தெரிவித்துள்ள கருத்துத்தான் இது விடயத்தில் வழிகாட்டல் குழுவின் பரிந்துரையாகும்.

தமிழில் ஒருமித்த நாடு என்கிறார்கள். சிங்களத்தில் 'எக்க ராஜ்ய' என்கிறார்கள். ஆகவே இது ஒற்றையாட்சி என்று சிலர் விமர்சிக்கின்றனர்.

ஆனால், அதற்கு அடுத்த ஷரத்தில்'நாட்டின் அரசியல் தத்துவங்கள் மத்திய மற்றும் மாகாண கட்டமைப்புகள் ஊடாகச் செயற்படுத்தப்படும்' – என்று கூறப்படுகின்றது. அப்படியானால்மத்திக்கு மேலதிகமாக மாகாணத்துக்கும் அரசியல் தத்துவம் – இறைமையில் ஒரு முக்கிய கூறு – உள்ளது. அப்படியாயின்அது ஒற்றையாட்சியைத் தாண்டிய விடயமாகும்.

அதுபோலவே, ஆளுநரின் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தல், நியதிச் சட்டங்களின் விடயத்தில் அவரின் செயற்பாடுகள் மீதான கட்டுப்பாடு என்று பல நல்ல அம்சங்கள் உள்ளன.

காணி விடயத்தைப் பொறுத்தவரை காணி பயன்பாடு, பாரதீனப்படுத்தல், கையுதிர்தல் முதலிய அதிகாரங்கள் மாகாண சபைக்கு உண்டு. தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களில் காணிப் பயன்பாட்டை மத்திய அரசுக்கு வழங்கும் ஏற்பாட்டுக்கு இணங்க மாட்டோம் என்று கூறுவது ஏற்புடையது அன்று.

இந்த இடைக்கால அறிக்கையில் விதந்துரைக்கக்கூடிய பல நல்ல, ஆக்கபூர்வமான, முன்னேற்றகரமான மேலும் விடயங்கள் உள்ளன – என்றார். (உ)

## கட்சியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எம்.பியின் தலைமையில் நேற்றுப் பிற்பகல் 2.30 மணி முதல் சுமார் ஆறு மணி நேரம் இக்கூட்டம் நடைபெற்றது.

கட்சியின் செயலாளர் நாயகம் என்.ஸ்ரீகாந்தா, உபதலைவர்களான ஹென்றிமகேந்திரன், இந்திரகுமார் பிரசன்னா, நிதிச் செயலாளர் விந்தன் கனகரத்தினம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் விநோநோகராதலிங்கம், கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஜனா கருணாகரன், நிர்வாகச் செயலாளர் நித்தியானந்தன் ஆகியோர் உட்பட பதினைந்து தலைமைக் குழு உறுப்பினர்கள் இந்தக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

ஜெனீவா சென்றிருக்கின்றமையால் சிவாஜிலிங்கம் இந்தக்கூட்டத்தில்பங்குபற்றவில்லை.

தலைமைக் குழு உறுப்பினரான குணசீலன் இந்தக் கூட்டத்தில் பங்குபற்றவில்லை.

அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும், அதற்கான விளக்கம் கோர வேண்டும் என்ற யோசனையைக் கூட்டத்தில்யாரும்எதிர்க்கவில்லை என்றும், ஒட்டு மொத்தமான நிலைப்பாடாக அது இருந்தது என்றும் அறிய வந்தது. (உ)

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

மக்களுக்கு பீதியூட்டும் வகையில் செயற்பட்டுவந்த ஆவா குழுவின் செயற்பாடுகள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டிருப்பதாக பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்தனர்.

அத்துடன் மது போதையில் வீதிகளில் மக்களுக்கு இடையூறு விளைவிப்போர் மற்றும் போதை வஸ்து பாவனையாளர்களைக் கைது செய்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்தும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. தமிழ் பேசும் பொலிஸார் குறைவாகக் காணப்படுவதனால் பணிகளைத் தமிழ் மொழியில் மேற்கொள்வதில் சிரமங்கள் நிலவுவதாகவும் பொலிஸ் தரப்பினால் ஆளுநரிடம் தெரிவிக்கப்பட்டது.

மேலும் அனுமதியற்ற வகையில்வீதிஓரங்களில்இந்து,பௌத்த, கிறிஸ்தவ சமயங்களின் தெய்வங்களை அமைப்பதன் காரணமாக வீண் பிரச்சினைகள் சமூகங்களுக்கு இடையில் எழுவதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இங்கு கருத்து வெளியிட்ட ஆளுநர் ரெஜினோல்ட் குரே, தமிழ்ப் பேசும் இளைஞர், யுவதிகளைப் பொலிஸ் சேவையில் இணைத் துக் கொள்ள நடவடிக்கை எடுக் கப்பட்டுள்ளதாகவும் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி வடக்கு வாழ் தமிழ் இளைஞர், யுவதிகள் பொலிஸ் சேவையில் இணைந்து கொள்ள அனைத்து தரப்பினரும் இளைஞர், யுவதிகள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் எனவும் தெரிவித்தார்.

முக்கிய நகரங்கள் மற்றும் பொதுமக்கள் செறிந்து காணப்படும் பகுதிகளில் குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களை இனங்காண்பதற்காக சிசிரிவி கமராக்களைப்பொருத்துவதற்கு ஆலோசிக்கப்பட்டுள்ளதாகவும். அதற்கான முயற்சிகள் இடம்பெறுவதாகவும் அவர் கூறினார்.

அனுமதியற்று வீதி ஓரங்கள் மற்றும் மரங்களின் கீழ் ஆங்காங்கே அமைக்கப்பட்டு வரும் தெய்வங்களின் சிலைகள் தொடர்பில் இந்து சமய விவகார அமைச்சர் சுவாமிநாதன், கிறிஸ்தவ சமய விவகார அமைச்சர் ஜோன் அமரதுங்க, பௌத்த விவகாரங்களுக்கான அமைச்சர்காமினிஜெயவிக்கரமபெரேரா ஆகியோருடன் கலந்துரையாடி முடிவு எடுக்கப்படும் எனவும் ஆளுநர் தெரிவித்தார்.

## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியம் பாக்கியம்



பொன்னாவரசன்குளத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் பாக்கியம் அவர்கள் நேற்று முன்தினம் (22.09.2017) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகன் – கறுபாய் தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கந்தன் – சந்தானம் தம்பதியினரின் அன்பு மருமகளும் கந்தன் சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற மாரியாய், செல்லம்மா (பொன்னாவரசங்குளம்), கதிராய் (பொன்னாவரசங்குளம்), காலஞ்சென்ற மாரிமுத்து, காலஞ்சென்ற தர்மலிங்கம், லட்சுமி (பனிக்கன்குளம்), ராசம்மா (பொன்னாவரசங்குளம்), தங்கமுத்து (பொன்னாவரசங்குளம்) ஆகியோரின் சகோதரியும் வைத்திலிங்கம் (யோகா – பொன்னாவரசங்குளம்), தவமலர் (மலர் – வவுனியா) சோதிமலர்(சோதி – இராசேந்திரங்குளம்) ஆனந்தகுமார் (ஆனந்தன் – பொன்னாவரசங்குளம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ரதி, கஜேந்தினி, சின்னத்துரை, இராசசேகரம், ஆகியோரின் பாசமிகு மாமியாரும் சுசி, நிதர்சிகா, நிரோ, கிசோர், டக்சி, டிலக்சன், டயாளினி, கீர்த்திகா, யதுசன், கோபிசன், கிருஷன், அக்சனா ஆகியோரின் பாட்டியும் வேனுகிசனின் பூட்டியும் ஆவர்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.09.2017) காலை 10 மணிக்கு இராசேந்திரங்குளத்திலுள்ள சோதிமலர்(சோதி) அவர்களின் இல்லத்தில் நடைபெற்று இராசேந்திரங்குளம் இந்து மயானத்தில் தகன கிரிகைகள் இடம்பெறும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுகொள்ளவும்.

தகவல்:
**கந்தன் சண்முகம் குடும்பத்தினர்.**
**(077 338 5205)**

**பனிக்கன்குளம்.**

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com

தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk

விளம்பரம்/விநியோகம்: 021 222 2600


## ஜனாதிபதி - ஐ.நா. ஆணையாளர் சந்திப்பில் நடந்தது என்னவோ?

ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத்தில் பங்கு பற்றுவதற்காக நியூயோர்க் சென்றிருக்கும் இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்றுமுன்தினம் இரவு அங்கு ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் செயிட் அல் ஹுசைனைச் சந்தித்திருக்கின்றார்.

இந்தச் சந்திப்பு இந்தச் சமயத்தில் மிக முக்கியமானது என்றும், இலங்கையின் போக்குத் தொடர்பில் காத்திரமான பல விளைவுகளை இது ஏற்படுத்த வல்லது என்றும் இந்தச் சந்திப்புக்கு முன்னர் ஆரூடங்கள் கூறப்பட்டன.

ஆனால், சந்திப்புக்குப் பின்னர் வெளியான செய்திகள் அந்த எதிர்பார்ப்புகள் எல்லாம் பொய்த்துப் போய்விட்டன என்பதை எடுத்துக் காட்டுவனவாகவே அமைந்துள்ளன.

2015 மார்ச்சிலும், பின்னர் இரண்டு வருடங்கள் கழித்து கடந்த மார்ச்சிலும், ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கை தொடர்பாக - இலங்கையும் சேர்ந்து கொண்டு வந்து நிறைவேற்றிய - தீர்மானங்கள் சம்பந்தமாக, இலங்கையின் செயற்றிறனின்மை குறித்து ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் மட்டத்தில் சீற்றமும், விசனமும் எரிச்சலும் தெரிவிக்கப்பட்டு வருகின்றமை தெரிந்ததே.

இலங்கையில் யுத்தத்தின் இறுதிக் கட்டத்தின் போது இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள், மனித குலத்துக்கு எதிராக செயற்பாடுகள், யுத்தக் குற்றங்கள் போன்றவை தொடர்பில் நம்பகரமான விசாரணையை நடத்தவும், பொறுப்புக் கூறலை உறுதிப்படுத்தவும், மீள நிகழாமைக்கு உத்தரவாதமளிக்கவும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்பதே இலங்கையும் சேர்ந்து கொண்டு வந்த இந்தத் தீர்மானங்களின் சாரம்சமாகும்.

ஆனால், அந்தத் திசையில் காத்திரமான எந்த நகர்வும் இதுவரை இலங்கைத் தரப்பால் எடுக்கப்பட வேயில்லை என்பதுதான் சர்வதேசக் கணிப்பீடு.

இலங்கையின் இந்த மெத்தனப்போக்குக் குறித்து சர்வதேச அமைப்புக்கள் பலவும் சீற்றத்துடன் குறை கூறி வருகின்ற நிலைமை நீடிக்கின்றது.

இந்தப் பின்புலத்தில்தான் அண்மையில் ஜெனீவாவில் மனித உரிமைகள் கவுன்ஸிலின் தற்போதைய அமர்வை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய ஆணையாளர் செயிட் அல் ஹுசைன் இலங்கையின் செயலின்மை குறித்து தமது உரையில் ஒரு பிடி பிடித்திருந்தார். இராஜதந்திர வார்த்தைகளில் அவர் பயன்படுத்திய சொல்லாடல்கள் மிகக் கடுமையானவை. இலங்கைக்கு சர்வதேச ரீதியில் ஓர் எச்சரிக்கை மணியை எழுப்பும் - அபாயச் சங்கை ஊதும் - ஓர் உரையாகவே அது அமைந்திருந்தது.

இந்தச் சூழலில், இலங்கை ஜனாதிபதி - ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சந்திப்பு நியூயோர்க்கில் நிகழ இருந்த போது அது குறித்துப் பல்வேறு கருத்துகள், ஆரூடங்கள், ஹேஸ்யங்கள் கூறப்பட்டன.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கடுமையான நிலைப்பாடை ஆணையாளர் கோடி காட்டுவார் என்றும், அதனால் பல புதிய உறுதிமொழிகளை இந்தச் சந்திப்பின்போது இலங்கை ஜனாதிபதி ஐ.நா. ஆணையாளருக்கு வழங்க வேண்டியிருக்கும் என்றெல்லாம் கூட எதிர்வுகள் கூறப்பட்டன.

ஆனால், அப்படி எதுவும் நடந்ததாகத் தெரியவில்லை.

மாறாக, இலங்கை இதுவரை எடுத்த நடவடிக்கைகள் தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் பாராட்டினார், வரவேற்றார் என்ற மாதிரித்தான் செய்திகள் வெளியாகியுள்ளன.

ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் நிறைவேற்றப்பட்ட முன்மொழிவுகள் - தீர்மானங்கள் - முழுமையாக நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளமையை நேரில் காண அடுத்த வருடம் இலங்கைக்கு விஜயம் செய்யுமாறும் ஆணையாளருக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அழைப்பு வேறு விடுத்திருக்கின்றார்.

இங்கு, காளத்தில், ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் தீர்மானம் தொடர்பில் எதுவுமே நடக்கவில்லை. - காணாமல் போனோர் அலுவலகம் ஒன்றைத் திறப்பதற்கான சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றியமையைத் தவிர. அந்த அலுவலகத்தை இயக்குவதற்கான ஏற்பாடுகள் கூட நடக்கவில்லை. காணாமலாக்கப்படுதலை குற்றமாக்கும் சட்டமூலம் கூட குறைப் பிரசவத்தில் சிதைந்தழிந்து விட்டதாகத் தோன்றுகின்றது.

ஆனால், ஜனாதிபதி - ஐ.நா. ஆணையாளர் சந்திப்பில் இங்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளைச் சிலாகித்து விதந்துரைக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது. இங்கு தாம் சாதித்துள்ள நடவடிக்கைகளை நேரில் கண்டறிய வருமாறு இலங்கை ஜனாதிபதி ஐ.நா. ஆணையாளருக்கு அழைப்பு வேறு விடுத்திருக்கிறார்.

இங்கு என்னதான நடக்கின்றது? ஒன்றுமே விளங்கவேயில்லை.

உண்மையைக் கண்டறிதல், பொறுப்புக் கூறல், மீள நிகழாமையை உறுதிப்படுத்தல், நல்லிணக்கத்தை ஏற்படுத்துதல் ஆகியவை தொடர்பில் இங்கு யாருக்கும் தெரியாமல் - சத்தம் சந்தடியில்லாமல் - அதிசயங்கள் ஏதும் நடந்துவிட்டனவா?

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் தரப்பும் ஜனாதிபதி மைத்திரியுடனான சந்திப்புப் பற்றி செய்திகளை அமுக்கி வாசிப்பதைப் பார்த்தால் இப்படி எல்லாம் சந்தேகம் வருவது தவிர்க்க முடியாததுதான்.

# வடமாகாண பண்பாட்டு பெருவிழா இன்று மூன்றாம் நாள் நிகழ்வுகள்

## தெல்லிப்பழை யூனியனில்

வடக்கு மாகாண கல்வி பண்பாட்டு விளையாட்டுத் துறை அமைச்சால் நடத்தப்படும் வடக்கு மாகாணப் பண்பாட்டு பெருவிழா மற்றும் 'கிராமிய பண்பாடும் மேம்பாடும்' என்ற ஆய்வரங்கம் என்பன கடந்த வெள்ளிக்கிழமை முதல் மூன்று தினங்கள் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் காலை, மாலை அமர்வுகளாக நடைபெறுகின்றன.

இன்று ஞாயிற்றுக்கிழமை மூன்றாம் நாள் நிகழ்வுகளில் பண்பாட்டுப் பெருவிழா மாலை நிகழ்வுகள் வடக்கு மாகாண இளைஞர் விவகார, கல்வி, பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு செயலாளர் இ.இரவீந்திரன் தலைமையில் பிற்பகல் 2 மணிக்கு உலக தவில் மேதை லயஞான குபேர பூபதி வி.தட்ணாமூர்த்தி அரங்கில் நடைபெறும்.

இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரனும், கௌரவ விருந்தினராக வடக்கு மாகாண சுகாதார சுதேசிய மருத்துவ, நன்னடத்தை, சிறுவர் பராமரிப்பு சேவைகள் அமைச்சர் வைத்தியர் ஞா.குணசீலனும், சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணக் கலைஞர் வேல் ஆனந்தனும் கலந்துகொள்வர்.

பண்பாட்டுப் பவனி தெல்லிப்பழை அருள்மிகு துர்க்கை அம்மன் ஆலயமுன்றிலிலிருந்து ஆரம்பமாகி, விருந்தினர்கள் சகிதம் விழா மண்டபத்தை அடையும். மங்கல விளக்கேற்றல், தமிழ்த் தாய்க்கு மாலை அணிவித்தல் ஆகிய நிகழ்வுகளுடன் ஆரம்பமாகும் விழாவில் தமிழ்த்தாய் வாழ்த்தை சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மாணவர்கள் வழங்குவர்.

மங்கல இசையை அளவையூர் தெட்சணாமூர்த்தி உதயசங்கர் குழுவினரும், வரவேற்பு நடனத்தை மீசாலை சிவசக்தி நர்த்தனாலயத்தினரும் வழங்குவர்.

வரவேற்புரையை வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் திருவாட்டி பா.அபிராமியும், அரங்கத் திறப்புரையை வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள சிரேஷ்ட கலாசார உத்தியோகத்தரும் வழங்குவர்.

நடனம் - மயில் அலாரிப்பூவை வவுனியா பரத நர்த்தனாலயத்தினரும், மீனவ நடனத்தை கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையினரும், கீர்த்தனையை தொண்டைமனாறு அபிநயசுரபி கலாமன்றத்தினரும், நடனத்தை ஆசிரியர் குழாமினரும் வழங்குவர்.

விருந்தினர்கள் உரைகளைத் தொடர்ந்து சிறந்த நூற்பரிசு வழங்கல், முதலமைச்சர் விருது வழங்கல் என்பன இடம்பெறும்.

உடுவில் நாட்டிய கலா சேத்திரா மாணவர்களின் நாட்டிய தர்ப்பணம் இடம்பெறும்.

நன்றியுரையை யாழ். மாவட்ட கலாசார உத்தி யோகத்தர் திருமதி மாலினி கிருஷ்ணானந்தன் வழங்குவார்.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மாணவர்களின் தமிழ் மொழிவாழ்த்துடன் நிகழ்வுகள் நிறைவுறும்.

# சிறந்த அரசியல் தலைமை இல்லாத சிக்கலில் தமிழ் மக்களின் நிலைமை

## ஆதங்கப்படுகின்றார் டக்ளஸ் தேவானந்தா எம்.பி.

தமிழர்களுக்கு சிறந்த அரசியல் தலைமை இல்லாத சூழல் காணப்படுகின்றது என யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்று ஈழ மக்கள் ஜனநாயகக்கட்சியின் அலுவலகத்தை திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன் போது மேலும் தெரிவிக்கையில்–

எமது கட்சியின் செயற்பாட்டை முன்னெப்போதும் இல்லாதவாறு பல மாற்றங்களுடனும் முன்னேற்பாட்டுடனும் செயற்றிட்டங்களுடனும் முன்னெடுத்துள்ளோம். கடந்த காலங்களில் இங்கே இருக்கின்றபோது மக்களுக்கு பல வகையிலும் உதவிகளையும், வழிகாட்டல்களையும், அவர்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகளுக்கான தீர்வுகளையும் வழங்கியிருந்தோம்.

மக்கள் எதிர்கொள்கின்ற பல வகையான பிரச்சினைகளுக்கு பொருத்தமான தீர்வை காண்பதற்கான அரசியல் தலைமை இல்லாத அரசியல் சூழல் ஏற்பட்டுள்ளது. இதற்குப் பல காரணங்களை என்னால் முன்வைக்க முடியும். எனவே அதை விளங்கிக்கொண்டு வருங்காலத்தில் எமக்கு கிடைக்கின்ற சந்தர்ப்பத்தைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

நாடாளுமன்றத்தில் புதிய அரசமைப்பு வரைவு ஒன்று முன்வைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக ஈழ மக்கள் ஜனநாயகக்கட்சியின் சார்பாக என்னிடம் கேட்கப்பட்டது.

தமிழ் மக்கள் இலங்கையர்களாக இருக்க வேண்டும் என்பதற்காக தமிழர் என்ற அடையாளத்தை கைவிடவும், மாறாக தமிழராக இருக்க வேண்டும் என்பதற்காக இலங்கையர் என்ற அடையாளத்தைக் கைவிடவும் தயார்இல்லை. அவர்கள் இலங்கையர்களாகவும், தமிழராகவும் இருக்கவே விரும்புகின்றார்கள். கடந்த காலத்தில் இதை விளங்கிக் கொள்ளாத தமிழ், சிங்கள அரசியல்வாதிகள் தங்களது சுயலாப அரசியலுக்காக அதை ஆரோக்கியமாக எடுக்காதமையின் விளைவாகத்தான் இந்நாடே இரத்தத்திலும், இருட்டிலும் மூழ்கடிக்கப் பட்டது. இன்று அம்மக்கள் அதிலிருந்து வெளிவந்து கொண்டிருக்கிறார்கள் என்று கூறியிருந்தேன்.

மேலும் எம் கட்சி சார்பாகவும், எம்மக்கள் சார்பாகவும் இணைந்த வடகிழக்கில் 'மத்தியில் கூட்டாட்சி மாகாணத்தில் சுயாட்சி' என்ற கோட்பாட்டிற்கு அமைவாக மத சார்பற்ற அரசு அமையவேண்டும். 13ஆவது திருத்தச்சட்டம் முழுமையாக அமுல்படுத்தப்பட வேண்டும், இதனால் இனங்களுக்கிடையே புரிந்துணர்வு வரும் போது அதன் பின்னர் கட்டம் கட்டமாக முன்னோக்கிச் செல்ல முடியும் என்ற கோரிக்கைகளை ஆரம்பகாலம் தொட்டு முன்வைத்திருந்தோம்.

தற்போது முன்வைக்கப்பட்டுள்ள அரசியல் திருத்த யாப்பானது 13வது திருத்த சட்டத்தை விட முன்னேற்றகரமாக இருக்குமானால் அதனை ஆதரிக்கத் தயாராக இருக்கிறோம் எனக் கூறியே இக்கோரிக்கைகளை முன்வைத்திருந்தோம்.

மேலும் சிறுபான்மையின மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக நாடாளுமன்றத்திற்கு மேலாக மேல் சபை என்ற ஒரு சபையும் உருவாக்கப்படுகிறது. இது 50இற்கு 50 என்றவாறு பிரதிநிதித்துவப்படுத்தப்படவேண்டும். ஏனெனில் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை சமூகம் பிரதிநிதிப்படுத்துவது போல் மேல் சபையிலும் பிரதிநிதித்துவப்படுத்தப் படுவது அச்சபைக்குரிய அர்த்தம் இருக்காது.

அத்துடன் பொலிஸ், முப்படையில் இன விகிதாசாரம் கடைப்பிடிக்கப்பட வேண்டும், சமசீரற்ற அதிகாரம் – அதாவது வடக்கு, கிழக்கில் உள்ள மக்களின் பிரச்சினை நாட்டின் ஏனைய மாகாணங்களில் இருக்கின்ற மக்களின் பிரச்சினையை விட வேறுபட்ட வகையில் இருப்பதால் – இதைச் செயற்படுத்த வேண்டும், பெண்களுக்குச் சரிபாதி அரசியல் உரிமை கொடுக்கப்பட வேண்டும் என்ற பல கருத்துக்களை எமது கட்சி சார்பாக முன்வைத்துள்ளோம்.

இன்று சிறந்த மாகாண சபையைக் காணமுடியாதுள்ளது. பிரேரணைகளை நிறைவேற்றுவதாக மாகாணசபை உள்ளதே தவிர அதனை நடைமுறைப் படுத்துவதாக இல்லை. சீனி என எழுதி வைத்தால் போதாது. அதனை கொடுக்கவேண்டும். அல்லது வாயில் போடவேண்டும். அப்போதுதான் சீனி பயனுள்ளதாக இருக்கும். மாகாண சபையை எம்மிடம் தந்தால் 3 தொடக்கம் 5 வருடங்களில் பாலும்

பக்கம் 22

## நாளை

25.09.2017

திங்கட்கிழமை

நட்சத்திரம் : அனுஷம் முழுவதும்

திதி: பஞ்சமி பி.ப.2.41 வரை

சுபநேரம் : 12.02 – 01.32

இராகுகாலம் : 07.32 – 09.02

# அம்பாந்தோட்டைத் துறைமுகம் பூகோள கடல்சார் மையமாகும்




## பொறுப்பேற்ற சீன நிறுவனம் உறுதி

பூகோள கடல்சார் மையமாக அம்பாந்தோட்டைத் துறைமுகத்தைக் கட்டியெழுப்புவதே தமது நோக்கம் என்று அந்தத் துறைமுகத்தை குத்தகைக்கு எடுத்துள்ள சீனாவின் மேர்ச்சன்ட் போர்ட்ஸ் ஹோல்டிங்ஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.

அம்பாந்தோட்டைத் துறைமுகத்தைக் கூட்டு முயற்சியாக அபிவிருத்தி செய்வது தொடர்பாக, சீனாவின் மேர்ச்சன்ட் போர்ட்ஸ் ஹோல்டிங்ஸ் நிறுவனம் கடந்த ஜூலை மாதம், இலங்கையின் துறைமுக அதிகாரசபையுடன் உடன்பாடு செய்துகொண்டது.

இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படும் மிகப்பெரிய நேரடி வெளிநாட்டு முதலீட்டுத் திட்டம் இதுவாகும்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இலங்கை வர்த்தக சம்மேளனத்தில் அம்பாந்தோட்டைத் துறைமுக உடன்பாடு குறித்து, சீனாவின் மேர்ச்சன்ட் போர்ட்ஸ் ஹோல்டிங்ஸ் நிறுவனத்தின் பிரதி பொது முகாமையாளர் ஹங் தியன் தெளிவுபடுத்தினார்.

அண்டை நாடுகளையும் உலகின் ஏனைய பகுதிகளையும் இணைக்கும் ஒரு பிரதான மையமாக அம்பாந்தோட்டை துறைமுகத்தை மாற்றுவதற்கு நாம் இலக்கு வைத்துள்ளோம்.

"இது இலங்கையின் தேசிய நோக்கு. இதனைச் செயற்படுத்தும் பணியே எம்முடையது. இலங்கையின் நோக்கிற்குப் பங்களிப்பதே எமது நோக்கம்.

"எம்மால் புதிய முதலீட்டை, புதிய முகாமைத்துவ முறைமையை, சீன மேர்ச்சன்ட் போர்ட்ஸ் நிறுவனத்தின் பூகோள வலையமைப்பின் மூலம், புதிய தொழில்நுட்பத்தைக்கொண்டுவர முடியும். இந்தக் கூட்டு முயற்சி வெற்றி பெறுவதற்கு உள்ளூர் முதலீட்டாளர்களும் எம்முடன் இணைந்துகொள்ள வேண்டும்.

"சிறிலங்காவின் கடல்சார் தொழில்துறை மற்றும் பொருளாதார மாற்றங்களில் அம்பாந்தோட்டைத் துறைமுகத்துக்கு முக்கியமான பங்காற்றும் வாய்ப்பு இருக்கின்றது என நாம் நம்புகிறோம்.

"கொழும்பு துறைமுகத்தை விடவும் பிரதான கடல் பாதைகளுக்கு நெருக்கமாக, அம்பாந்தோட்டைத் துறைமுகம் அமைந்துள்ளது. இது குறைவான அபிவிருத்தி அடைந்த பகுதியாகவும் இருக்கிறது.

"இதனால், நன்றாகத் திட்டமிட்டு, திறமையாகச் செயற்படுத்தினால் நீண்டகாலத்துக்கு இந்த துறைமுகத்தை நிச்சயமாகச் செயற்படுத்துவதற்கு அதிக வாய்ப்புகள் உள்ளன." - என்றும் அவர் தெரிவித்துள்ளார். (உ)

# முன்னாள் போராளிகளின் நிலைமை குறித்து சுவிஸ் அதிகாரிகள் யாழ். தளபதியுடன் பேச்சு

யாழ்ப்பாணம், செப்.24

வடக்கில் முன்னாள் போராளிகளின் நிலைமை மற்றும் அவர்களுக்கான சவால்கள் தொடர்பாக சுவிற்ஸர்லாந்தின் புலம்பெயர்தல் தொடர்பான இராஜாங்கச் செயலகத்தின் ஆய்வாளர் அன்ட்ரேஸ் ஸ்மிட், யாழ். படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் தர்சன ஹெற்றியாராச்சியுடன் கலந்துரையாடியுள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை சுவிற்ஸர்லாந்தின் புலம்பெயர்தல் தொடர்பான இராஜாங்கச் செயலகத்தின் ஆய்வாளர் அன்ட்ரேஸ் ஸ்மிட் மற்றும் கொழும்பில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் புலம்பெயர்தல் தொடர்பான முதன்மைச் செயலராகப் பணியாற்றும் கிசேலா ஸ்லூவெப் ஆகியோர் யாழ். படைகளின் தலைமையகத்தில் மேஜர் ஜெனரல் தர்சனவைச் சந்தித்தனர்.



அதிகாரபூர்வமாக இடம்பெற்ற இந்தச் சந்திப்பில், புனர்வாழ்வு அளிக்கப்பட்ட முன்னாள் போராளிகளின் நிலைமையைப் புரிந்துகொள்வது, அவர்களின் முன்னேற்றங்கள் மற்றும் சமூக, பொருளாதார, உளவியல் ரீதியாக அவர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் ஆகியன குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளது.

முன்னாள் போராளிகளின் தற்போதைய வாழ்வாதார நிலை, அவர்களின் பொருளாதார மற்றும் சமூக நிலையை மேலும் உயர்த்துவதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் ஆகியன தொடர்பாக யாழ். படைகளின் கட்டளைத் தளபதி, சுவிஸ் அதிகாரிகளுக்கு விரிவாக எடுத்துக் கூறினார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ)

## உடுவில் மான்ஸ் பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், செப்.24

உடுவில் மான்ஸ் தமிழ்க் கலவன் பாடசாலையின் பரிசளிப்பு விழா நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் இரா.ஜெயக்குமார் தலைமையில் இடம்பெறும்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக 'வாழ்வகம்' தலைவர் ஆ.இரவீந்திரனும் சிறப்பு விருந்தினராக உடுவில் கோட்டக் கல்வி அலுவலர் ரி.மாதவனும் வலிகாமம் வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் கே.கனகேஸ்வரனும், கௌரவ விருந்தினராக ஓய்வு நிலை கோட்டக் கல்வி அலுவலர் சு.சண்முககுலகுமாரனும் கலந்து கொள்வர்.

இறுதியில் மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற உள்ளன. (இ)

# ஆந்திராவின் கைத்தொழில் நடைகூடம் யாழ்ப்பாணத்தில் அல்லது திருமலையில்!

சென்னை, செப்.24

இந்தியாவின் ஆந்திரப் பிரதேச மாநில அரசாங்கம் சிறிலங்காவில் கைத்தொழில் நடைகூடம் (Industrial Corridor) ஒன்றை அமைக்கத் திட்டமிட்டுள்ளதாக 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவது தொடர்பாக, ஆந்திர மாநில கைத்தொழில் அமைச்சர் அமர்நாத் ரெட்டி, இலங்கை அரசாங்கத்துடன் ஏற்கனவே பேச்சுக்களை நடத்தியுள்ளார்.

அடுத்த சில வாரங்களில் இலங்கை அரசாங்கத்துடன் இது தொடர்பான புரிந்துணர்வு உடன்பாடு கையெழுத்திடப்படும் என்று அதிகாரபூர்வ வட்டாரங்கள் தெரிவித்தன.

கடல்வழிப் போக்குவரத்து வசதிகளைக்கொண்ட இலங்கை கடலுணவு, மருந்து மற்றும் சுற்றுலா போன்ற துறைகளில் வர்த்தகத்தை மேற்கொள்வதற்கு ஆந்திர மாநிலத்துக்குச் சிறந்த இடமாக உள்ளது என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதற்காக ஆந்திர மாநில அரசாங்கத்துக்கு யாழ்ப்பாணம் அல்லது திருகோணமலையில் இலங்கை அரசாங்கம் நிலங்களை ஒதுக்கிக் கொடுக்கலாம் என்றும் கூறப்படுகிறது.



அதேவேளை, பரஸ்பர வர்த்தக உடன்பாட்டின் மூலம், ஆந்திரப் பிரதேசத்தில், ஆடை மற்றும் விமானப் பயணத்துறைகளில் இலங்கை அரசாங்கம் முதலீடு செய்யத் திட்டமிட்டுள்ளது.

இலங்கையில் ஆந்திரப் பிரதேசத்தின் சிறப்புப் பொருளாதார வலயத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பான புரிந்துணர்வு உடன்பாடு விரைவில் கையெழுத்திடப்படும்.

மருந்து மற்றும் சுற்றுலாத்துறைகளில் இலங்கையில் முதலீடு செய்வதற்கு நல்ல வாய்ப்புகள் உள்ளன என்று ஆந்திர மாநில கைத்தொழில் துறை அமைச்சர் அமர்நாத் ரெட்டி தெரிவித்துள்ளார்.

(உ)

# மாகாண சபைகளில் பெண்களுக்கு 30 வீத இட ஒதுக்கீடு

## நிறைவேறியது சட்டம்




இலங்கையின் மாகாண சபைகளில் பெண்களுக்கு 30 சதவீத இட ஒதுக்கீடு அளிக்கும் சட்டத்திருத்தத்துக்கு நாடாளுமன்றம் ஒப்புதல் அளித்துள்ளது.

''1988 ஆம் ஆண்டு மாகாண சபைகள் தேர்தல் சட்டத்தில்' கொண்டு வரப்பட்ட திருத்தத்தை மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் இலங்கை நாடாளுமன்றம் கடந்த புதன்கிழமை இரவு நிறைவேற்றியது.

உள்ளூராட்சி சபைகளில் பெண்களுக்கு 25 சத வீத இட ஒதுக்கீட்டுக்கு வகை செய்யும் உள்ளூராட்சி சபைகள் தேர்தல் சட்டம் அண்மையில்தான் நிறைவேற்றப்பட்டது.

சட்டத் திருத்தத்தை உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் பைஸர் முஸ்தபா கடந்த ஜூலை மாதம் 26ஆம் திகதி நாடாளுமன்றத்தில் முன்வைத்திருந்தார். கடந்த புதன்கிழமை இது விவாதத்துக்கு வந்த போது, தேர்தல் முறை மாற்றம் தொடர்பாகவும் திருத்தங்கள் கொண்டு வரப்பட்டன. இதற்கு கூட்டு எதிரணி பலமாக எதிர்ப்புத் தெரிவித்திருந்தது.

### கலப்பு முறைத் தேர்தல்

இந்தத் திருத்தச் சட்டத்தில் தற்போதைய விகிதாசார தேர்தல் முறைக்குப் பதிலாக தொகுதி மற்றும் விகிதாசார பிரதிநிதித்துவம் கொண்ட கலப்பு முறையிலான தேர்தல் முறையும் கொண்டு வரப்பட்டுள்ளது.

தொகுதி-60, விகிதாசாரம்-40 என ஏற்கனவே முன் வைக்கப்பட்ட அந்தத் திருத்தம் ஆளும் தரப்பில்



அங்கம் பெற்றுள்ள சிறுபான்மை இனக் கட்சிகளின் எதிர்ப்பு மற்றும் அழுத்தங்கள் காரணமாகவே 50 இற்கு 50 என திருத்தப்பட்டது எனக் கூறுகின்றார் தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவரும் அமைச்சருமான மனோ கணேசன்.

### மனோ கணேசன்

இந்தத் திருத்தச் சட்டத்தை நிறைவேற்ற நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்குபெரும்பான்மை வேண்டும் என சட்ட மா அதிபர் சபாநாயகருக்கு தெரிவித்திருந்தார்.

தமிழ் முற்போக்கு கூட்டணி, ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகிய சிறுபான்மைக் கட்சிகள் இறுதி நேரத்தில் வழங்கிய ஆதரவு காரணமாகவே இந்தத் திருத்தத்தை நிறைவேற்றத் தேவையான மூன்றில் இரண்டு பங்குபெரும்பான்மை கிடைத்தது.

சட்ட வரைவில் ஏற்கனவே காணப்பட்ட சில விடயங்கள் சிறுபான்மை இனங்களுக்குப் பாதிப்பாக இருந்தன எனவும் அவை திருத்தப்பட்டு சட்ட மூலம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது எனவும் அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்தார்.

''தேர்தல் தொகுதிகள் மீள் நிர்ணய குழுவில் சகல இனப் பிரதிநிதிகளும் இடம் பெற வேண்டும் . குழுவின் அறிக்கை நாடாளுமன்றத்தில் 2/3 பெருன்பான்மையுடன் நிறைவேற்றப்பட வேண்டும்.



நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைக்காத நிலையில் பிரதமர் தலைமையில் 5 பேர் கொண்ட மீளாய்வுக் குழு இறுதி தீர்மானத்தை எடுக்கும். சகல இனங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் குழு உறுப்பினர்களை சபாநாயகர் நியமிப்பார்.

ஒரு தொகுதியின் எல்லையை நிர்ணயம் செய்யும் போது சிறுபான்மை இனங்களுக்குப் பாதிப்பு இல்லாத வகையில் பல் தொகுதி முறை ஏற்படுத்தப்பட வேண்டும். குறைந்த சனத் தொகை கொண்ட தொகுதிகள் குறித்தும் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்பது போன்றவை முன்வைக்கப்பட்டு ஏற்கப்பட்ட சில திருத்தங்கள்'' என்று அவர் தெரிவித்தார்.

மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற முடியாத நிலைமையை உணர்ந்த அரசு, சிறுபான்மைக் கட்சிகளின் திருத்தங்களை ஏற்றுக்கொண்டு அதன் மூலம் தேவையான பெரும்பான்மையுடன் சட்டத் திருத்தத்தை நிறைவேற்றியது.தொகுதி வாரியாக 50 சத வீதமும் விகிதாசார முறையில் 50 சத வீதமும் என மாகாண சபைகளுக்கு பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படும் வகையில் அந்தத் திருத்தம் கொண்டு வரப்பட்டுள்ளது.

### இலங்கை மக்கள் தொகையில் பெண்கள் அதிகம்

இலங்கையில் மொத்த சனத் தொகையில் 52 சத வீதமானோர் பெண்களாவர். வாக்காளர் தொகையிலும் ஆண்களை விட பெண்களே அதிகம் எனக் கூறப்படுகின்றது. தொழில் துறைகளிலும் ஆண்களை விட முன்னிலையில் உள்ளனர்.

ஆனால் அரசியலில் அவர்களால் தங்கள் விகிதாசாரத்திற்கேற்ப இடத்தை எட்டுவதற்கு இலங்கை அரசியலில் அதற்கான வாய்ப்புகள் அரிதாகவே காணப்படுகின்றன.

நாடாளுமன்றத்தில் 6 சத வீதமாகவும் மாகாண சபைகளில் 4 வீதமாகவும் பெண்களின் பிரதிநிதித்துவம் தற்போது உள்ளது. ஏற்கனவே உள்ளூராட்சி சபைகளில் 2 சத வீதமான பெண்களே இடம் பெற்றிருந்தார்கள்.

குறிப்பாக, வட மாகாண சபையில் உள்ள 39 உறுப்பினர்களில் ஒருவர் மட்டும் தான் பெண் உறுப்பினர். அது போன்று கிழக்கு மாகாண சபையில் 37 உறுப்பினர்களில் தற்போதுள்ள பெண் உறுப்பினர்களின் எண்ணிக்கை 2 ஆகும்.

தேர்தல்களில் பிரதான அரசியல் கட்சிகள் உள்ளிட்ட அரசியல் கட்சிகள் பெண்களை வேட்பாளர்களாக நிறுத்துவதற்கு முன் வருவ தில்லை என கூறப்பட்டாலும் பெண்களிடம் அதற்கான ஆர்வம் இல்லாத தன்மையும் இதற்குக் காரணமாக முன் வைக்கப்படுகின்றது.

தேர்தல்களில் போட்டியிட பெண்களுக்கு 50 வீத இட ஒதுக்கீடு சட்ட ரீதியாக உறுதிப்படுத்தப்பட வேண்டும் என பெண்கள் உரிமைகளுக்கான அமைப்புகளும் குரல் எழுப்புகின்றன.

மாகாண சபைகளில் 30 சதவீதமும் உள்ளூராட்சி சபைகளில் 25 சத வீதமும் எனக் கிடைத்துள்ள இட ஒதுக்கீடு பெண்களின் விகிதத்தை விடக் குறைந்ததுதான். ஆனால், அவர்களின் அரசியல் ஈடுபாட்டிற்கும் தேர்தலில் போட்டியிட வேண்டும் என்ற ஆர்வத்திற்கும் ஒரு வகையில் ஊக்குவிப்பாகவே இது அமையும்.

கட்சி அல்லது சுயேச்சைக் குழுவினால் தாக்கல் செய்யப்படும் வேட்பாளர்கள் பட்டியலில் இடம்பெறும் மொத்த வேட்பாளர்களில் ஆகக் குறைந்தது 30 சதவீதம் பெண்களுக்கு இட ஒதுக்கீடு இந்த ச் சட்டத் திருத்தம் மூலம் உறுதிப்படுத்தப்படுகிறது. ★



காலைக்கதிர்
Kalaikkathir





# தமிழீழ மண்ணின் தியாகச் செம்மல்

# புலிவீரன் தீலீபன்!


எஸ்.நிதர்ஷன்

தமிழர் விடுதலைப் போராட்டத்திலே யாழ் இந்துக் கல்லூரி மாணவர்களின் பங்கு அதிகம். அவர்கள் போராட்டத்திற்கு அளப்பரிய பங்காற்றியிருக்கின்றார்கள். தமிழ் மாணவர்களுக்கு எதிராக சிங்கள அரசு கட்டிவிட்ட மொழி இன மத வேறுபாடுகள் தமிழ் மாணவர்களை தரப்படுத்தல் என்ற போர்வைக்குள் தள்ளி மாணவர்களை கல்வியில் பின்னடைய வைத்தது. இதன் காரணமாக ஈழ தேசத்திலே கல்லூரி மாணவர்கள் சிங்கள அரசுக்கு எதிராகப் போராடப் புறப்பட்டார்கள்.

அவர்களில் ஒருவர் தான் எங்கள் திலீபன். இராசையா பார்த்தீபன் என்ற இயற்பெயரைக் கொண்டவர். யாழ் இந்துக் கல்லூரியிலே மாணவனாக இருந்து மருத்துவபீடத்திற்குத் தெரிவாகியும் அந்த மதிப்புக்குரிய மருத்துவ பீட வாழ்க்கையைத் துறந்து தமிழின விடுதலைக்காக தன்னைப் போராட்டத்திலே அர்ப்பணித்துக் கொண்டவர். அந்தப் போராட்டத்திலே திலீபன் அளப்பரிய பங்காற்றி வந்ததனால் தேசியத் தலைவர் பிரபாகரனினால் புலிகளின் அரசியற்பிரிவு பொறுப்பாளராக நியமிக்கப்பட்டார்.

அந்த வேளையில், தமிழ் மக்கள் தங்களது விடுதலைப் போராட்டத்தை நடத்தி அதிலே வெற்றி பெறவிருந்த தொரு காலகட்டத்தை நெருங்கிக் கொண்டிருந்த வேளையில் சிங்கள அரசுடன் சேர்ந்து இந்திய அரசு செய்த சதிச் சூழ்ச்சியில் தமிழினம் சிக்கி பெரும் அழிவுகளைச் சந்தித்திருந்தது. இந்தக் காலகட்டத்தில் விடுதலைப் புலிகளின் அரசியற் பிரிவுப் பொறுப்பாளராக திலீபன் தனது இனத்திற்காக இந்திய அரசிற்கு எதிராக உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்துவதற்கு புலிகளின் தலைவரிடம் அனுமதி கேட்டார்.

> அவன் காற்றில் கலந்து 30 ஆண்டுகள் என்ன, எத்தனை ஆண்டுகள் ஓடிக் கடந்தாலும், தமிழீழ மக்களின் மனங்களில் என்றும் நிறைந்திருப்பான்.





## என்றும் மறக்க முடியாத மறவன் அவன்!!

இந்திய அரசு அத்தகைய போராட்டத்தை ஏற்கும். உலகம் அதைப் புரிந்து கொள்ளும் என்பதற்காக அவர் உண்ணா நோன்பிருக்க நல்லூர்க் கோவில் வடக்கு வீதியிலே அஹிம்சைப் போராட்டத்தை ஆரம்பித்தார். அன்று நல்லூர் வீதியெங்கும் திலீபனுடைய தீயாக வேள்வியைப் பார்ப்பதற்கு தினந்தினம் பல ஆயிரக் கணக்கான மக்கள் போவார்கள். அங்கு ஒலிக்கின்ற கவிதைகள்; கவிஞர் புதுவை இரத்தினதுரையின் கவி வரிகளிலே விடுதலை உணர்வுகளை ஊட்டுகின்ற அத்தகைய வரிகளும்

*''வந்து பாரடா வந்து பாரடா வாட முன்னொரு செய்தி கூறடா இந்திரா பெற்றெடுத்தவ வந்து பாரடா இங்கு ஓர் உயிர் வாடுகின்றது இதய நாடிகள் ஒடுங்குகின்றது தங்க மேனியைக் காவு தின்னுது வந்து பாரடா... ''*

என்ற கவிதை வரிகள் நல்லூர் வீதியெங்கும் ஒலித்துக் கொண்டிருந்தன. அவருடைய விடுதலை வேள்வி யாகத்திற்கு புதுவை இரத் தினதுரை கவிதையிலே ஓர் அர்ச்சனை செய்து கொண்டிருந்தார்.

ஒவ்வோர் இடங்களில் இருந்தும் ஒவ்வொரு நாளும் போராளிகள் அணி அணியாக திலீபனுடைய உண்ணாவிரதப் போராட்டத்தில் கலந்து கொண்டி ருந்தனர். அதே போன்று மக்களும் பல ஆயிரக்கணக்கில் கலந்துகொண்டிருந்தனர்.



அதிலும் புலிகளின் தலைவர் பிரபாகரனும் அந்தப் போராட்டத்திலே வந்து கலந்து கொண்டிருந்தார். அவர் திலீபனைச் சந்தித்து சில வாக்குறுதிகளையும் பெற்றிருந்தார். ஆனாலும் திலீபன் தன்னுடைய மக்களுக்காக தான் எடுத்த அந்த முடிவில் இருந்து தன்னை விடுவிப்பதில்லை என்ற உறுதியுடன் இருந்தான்.

தலைவர் கூட அந்தப் போராளியின் மரணத்தைத் தடுக்க முயற்சித்த போதும் முடியவில்லை. இவ்வாறு தொடர்ந்து நடந்து கொண்டிருந்த உண்ணாவிரதப் போராட்டத்தின் போது நல்லூரில் மக்கள் அலை அலையாகத் திரண்டு திலீபனுக்கு ஆதரவாக இருந்தனர். மிகவும் உடல் சோர்ந்த நிலையில் இருந்த தியாக தீபம் திலீபன் 12 ஆம் நாளில் ஈழ தேசத்திற்கு தியாகத்தை உணர்த்திவிட்டு வீர மரணடைந்தார். இதனால் இந்தியாவின் கபடத் தனமும் வேசமும் உலகமும் அறிய வேண்டும். மக்களும் தெரிந்துகொள்ள வேண்டுமென்பதற்காக அந்த விடுதலை வீரன் தன்னுடைய தியாகத்தின் உச்சத்திற்குச் சென்றார்.

*''பாடும் பறவைகள் பாடுங்கள் புலி வீரர் தீலீபனின் பாடுங்கள்...''*

என்கின்ற வரிகளும் அன்று தான் ஒலிக்கத் தொடங்கின.

அன்று தமிழ் மக்கள் மத்தியிலே எல்லோரையும் அழ வைத்த மரணம். தமிழர் விடுதலைப் போராட்ட வரலாற்றிலே ஒரு வித்தியாசமான மைல் கல். களத்திலே போராடி வீரச் சாவடைவதைவிட தன்னினத்துக்காக நீராகாரம் ஏதும் அருந்தாமல் போராடி தன் உயிரைத் துறந்த மாபெரும் தீயாகியாக உலகம் எங்கும் வாழ்கின்ற தமிழர்கள் மத்தியிலே மிளிர்ந்தான். அந்தப் போராட்டத்தில் தான் இறந்ததன் பின்னர் தன்னுடைய உடலைக் கூட மருத்துவ பீட மாணவர்கள் கற்பதற்காகக் கொடுக்கும்படியும் கூறியிருந்தார்.

தீவகம், வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம் என்ற யாழ்ப்பாணத்தின் நான்கு பிரதேசங்களிலும் புகழுடல் மக்களுடைய அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. அங்கு மக்கள் ஆயிரக் கணக்கில் கூடி கண்ணீர் மல்க அஞ்சலி செலுத்தினர்.

அதன் பின்னர் திலீபனின் புதவூடல் யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீடத்திற்கு கையளிக்கப்பட்டது. அந்த வகையில் ஈழ விடுதலைப் போராட்டத்திலே ஓர் வித்தியாசமான அரசியல் போராளியாக வாழ்ந்து தன்னுடைய வாழ்க்கையை தமிழ்த் தேசியத்திற்காகவும் தமிழினத்திற்காகவும் தியாகம் செய்த அற்புதமான போராளி திலீபன்.★

# இந்த வாரம் உங்களுக்கு எப்படி?

**சந்திராட்டமநாள்:** அவிட்டம் 3,4, பூரட்டாதி, உத்தரட்டாதி, ரேவதி ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தோர் அவசியம் சுபகரு மங்களில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும்.

24.09.2017
30.09.2017

**கணிப்பு:** 'ஜோதிடமணி' பிரம்ம ஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா (ஜே.பி.)

2017 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் புரட்டாதித் திங்கள் எட்டாம் நாள் ஞாயிற்றுக்கிழமை சதுர்த்தசி திதி பகல் 12.39 மணி வரை. பின்னர் பஞ்சமி. நட்சத்திரம்: விசாகம் இரவு 4.25 மணி வரை. பின்னர் அனுஷம். மரணயோகம் முழுவதும்.

பிறந்த நட்சத்திர வழிபாடு: விசாகம்.

ராகுகாலம்:- மாலை 4.32 மணி முதல் 6.03 மணி வரை.

சுபநேரம்:- காலை 9.02 மணி முதல் 10.33 மணி வரை.

திவசம் செய்ய வேண்டிய திதி:- புரட்டாதி மாத வளர்பிறை பஞ்சமி.



## மேஷம்:

சமபலன்கள்காணப்படுகின்றன. பொருளாதாரம் ஏற்றமும் இறக்கமுமாக இருக்கும். எண்ணிய காரியங்கள் தாமதமாகும். தேக சுகம் பாதிப்புறும். மருத்துவச் செலவுகள் உண்டாகும். குடும்பத்தில் ஓரளவு அமைதி காணப்படும். வியாபாரத்தில் சம லாபம் கிடைக்கும். உத்தியோகத்தில் தொழில் கஷ்டங்களும் அலைச்சல்களும் உண்டாகும். தொழிலாளர், முதலாளி நல்லுறவு உண்டு. மாணவர் கல்வியில் அதிக கவனம் எடுக்க வேண்டும். விவசாயிகளுக்கு வங்கிகளின் உதவிகள் குறையும். கொடுக்கல் வாங்கலில் அவதானம் தேவை.



## ரிஷபம்:

நன்மையான வாரம். பொருளாதாரம் வளமாக இருக்கும். குடும்ப உறவு அன்புடையதாக இருக்கும். கடன்கள் நிவாரணம் அடையும். எதிரிகளின் எதிர்ப்பை முறியடிக்கும் வல்லமை உண்டாகும். பெண்கள் விரும்பிய விடயங்கள் கைகூடும். கொடுக்கல், வாங்கல் சுமூகமாக நடக்கும்.

மாணவர்களுக்கு உயர் கல்வி கற்பதற்கு குழப்பமுண்டாகும். வியாபாரத்தில் போட்டிகள் அதிகரிப்பால் வருமானம் குறையும். திருமண காரியங்கள் கைகூடாமற் போகும். புதிய வேலை வாய்ப்புக்கள் கிடைக்கும். தனலாபம் அதிகரிக்கும்.



## மிதுனம்:

யோகமான வாரம். தன லாபம் பெருகும். பெண்கள் வீட்டுக்குத் தேவையான பொருள்கள் வாங்கி மகிழ்வார்கள். வீடு, வாகனம் வாங்கும் யோகம் உண்டாகும். வெளிநாட்டுத் தொழில் வாய்ப்புகள் கிடைக்கும். பெண்களுக்குத் திருமண யோகம் உண்டாகும்.

மாணவர்களுக்கு உயர் கல்வி கற்பதற்கு அரச உதவிப் பணம் கிடைக்கும். வெளியூர்ப் பயணம் நன்மையையும். வெளிநாட்டுத் தொடர்பால் முன்னேற்றமும் உண்டாகும். வியாபாரத்தில் இதுவரை இருந்து வந்த மந்த நிலை மாறி, நல்ல பலன்கள் கிட்டும். கலைஞர்களுக்கு வாய்ப்புகள் கிட்டும்.



## கடகம்:

கவலையான வாரம். பணவரவு குறையும். குடும்ப உறுப்பினர்களிடையே சிறிது உட்பூசல்கள் காணப்படும். வியாபாரத்தில் போட்டிகள் அதிகரிக்கும். உத்தியோகத்தர்களுக்கு வசதியற்ற இட மாற்றத்தால் பெரும் சிரமம் உண்டாகும்.

செலவுகள் அதிகரிக்கும். தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்புகள் குறையும். அரசியல் வாதிகளின் மதிப்பு செல்வாக்குக் குறையும்.மாணவர்கள் தேர்வில் குறைந்த மதிப்பெண்களைப் பெறுவார்கள். பணப் பற்றாக்குறையால் வீடு கட்டும் பணிகள் நின்று விடும்.



## சிம்மம்:

மத்திமமான வாரம். பொருளாதாரம் ஏற்றமும் இறக்கமுமாக இருக்கும். தேக சுகம் குறைவால் மருத்துவச் செலவுகள் உண்டாகும். குடும்பத்தில் ஓரளவு நல்லுறவு காணப்படும். உறவினர்கள் நண்பர்களின் உதவிகள் கிடைக்கும்.

வரவேண்டிய பணம் வரத் தாமதமாகும். சகோதர உறவு வலுவானதாக இருக்கும். புதிய தொழில் முயற்சியைத் தள்ளிப் போடுவது நல்லது. பூர்வீகச் சொத்து சம்பத்தமான வழக்குகள் இழுபறியில் இருக்கும். பயணங்களைத் தவிர்ப்பது நல்லது.



## கன்னி:

விருத்தியான வாரம். பொருளாதாரம் ஏற்றமடையும். கடன் தொல்லை தீரும். குடும்பத்தில் நல்லிணக்கம் காணப்படும். வெளிநாட்டு வியாபார ஒப்பந்தங்களால் சிலருக்குப் புதிய தொழில் வாய்ப்புகள் உருவாகும். கலைஞர்களிடயே ஒற்றுமையும் உயர்வான நிலையும் உண்டாகும்.

குடும்பப் பிரச்சினைகள் தீர்வடையும். சுயதொழில் புரிபவர்களுக்கு நல்ல பலன்கள் உண்டாகும். சகோதர வழி உறவுகள் பலப்படும். நீண்ட தூரப் பயணம் அனுகூலமாகும். எதிர்காலத் திட்டத்தை செயற்படுத்த நல்ல நண்பர்கள் உதவுவார்கள்.



## துலாம்:

சுபீட்சமான வாரம். தன லாபம் அதிகரிக்கும். இல்லத்தில் நல்லுறவு விருத்தியடையும். வேலை தேடுவோருக்குத் திறமைக்கு ஏற்ற வேலை கிடைக்கும். குடும்பப் பகை தீர்த்து சந்தோஷமடைவார்கள்.

சகோதர உறவு வலுவடையும். வீட்டில் சுபகாரியங்கள் நடக்கும். உறவினர் வீட்டுத் திருமண நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வார்கள். வியாபாரிகளுக்கு தொழில் முன்னேற்றம் வியாபார விருத்தி என்பன உண்டாகும். சிலருக்கு வீடு கட்டும் சூழ்நிலை உருவாகும். மாணவர்களின் கல்வியில் மேன்மை உண்டாகும்.



## விருச்சிகம்:

துயரமான வாரம். எடுத்த காரியம் தோல்வியடையும். பணம் பற்றாக்குறையாக இருக்கும். செலவுகள் அளவுக்கதிகமாகும். குடும்பத்தில் வீண் சண்டை சச்சரவுகள் உண்டாகும். உடலில் ரோகங்கள் உண்டாகும்.


வியாபாரத்தில் போட்ட முதலீடுகளில் பெரும் நஷ்டம் உண்டாகும். சுயதொழில் ஆதாயத்துக்கு பதில் செலவுகள் அதிகரிக்கும். விவசாயத்தில் பயிர்கள் அழிந்து பெரும் சேதம் உண்டாகும். உறவினர்கள் பகைத்துக் கொள்வார்கள். செய்யும் தொழிலில் பல இடையூறுகள் உண்டாகும். அயலவர்கள் தொல்லை தருவார்கள்.



## தனுசு:

உயர்வான வாரம். பணப் புழக்கம் தாராளமாக இருக்கும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். காரியத்தில் வெற்றியும் செய்யும் தொழிலில் ஆதாயமும் கிடைக்கும். சமூகத்தில் நற்பெயரும் மரியாதையும் கிடைக்கும்.

பெருமைப்படும் படியான வியாபார விருத்தியும் உண்டாகும். சிலருக்கு வெளிநாட்டு தொழில் வாய்ப்பு கிடைப்பதுடன் வெளியூர் பயணம் மேற்கொள்ள வேண்டி வரும். வெளிநாட்டு உறவினர்களின் சந்திப்பும் தொடர்பும் உண்டாகும். மாணவர்களுக்குத் தடையற்ற கல்வி மேன்மையும் உண்டாகும்.



## மகரம்:

மத்திமமான வாரம். பொருள் வரவு மத்திமமாக இருக்கும். செலவுகள் அதிகரிக்கும். குடும்ப உறவு மேம்படும். வியாபாரம் ஓரளவு முன்னேற்றமடையும். உத்தியோகத்தில் அலைச்சல்களும் தொழிலில் வெறுப்பும் உண்டாகும்.

சக உத்தியோகத்தர்களின் ஒத்துழைப்புக் குறையும். வெளிநாட்டுப் பயணம் தீவிர முயற்சியின் மேல் அனுகூலமாகும். சகோதர உறவு வலுவடையும். இதுவரை பிரிந்திருந்தவர்கள் உறவினர்களின் முயற்சியால் ஒன்று சேர்வார்கள். திருமண காரியங்கள் இழுபறியில் இருக்கும்.



## கும்பம்:

கீர்த்தியான வாரம். பொருள் வளம், தொழில் வளம் சிறப்பாக இருக்கும். குடும்ப உறவு அன்புடையதாக இருக்கும். வெளிநாட்டுத் தொடர்புகளால் தொழில் வாய்ப்புக் கிடைக்கும். மாணவர்கள் சிறந்த மதிப்பெண்களைப் பெற்று ஆசிரியர்களின் பாராட்டைப் பெறுவார்கள்.

கலைஞர்களின் புகழ் மேலோங்கும். வியாபாரிகள் தம் திறமையால் வாடிக்கையாளர்களைக் கவர்வர். வருமானமும் ஈட்டுவார்கள். பெண்கள் சுய தொழிலில் முன்னேற்றமடைவார்கள்.



## மீனம்:

சலனம் மிகுந்த வாரம். மனச்சஞ்சலம் அதிகரிக்கும். பணவருவாய் குறையும். குடும்பத்தில் சிறு சிறு உட்பூசல்கள் காணப்படும். வியாபாரத்தில் பொருள்கள் விற்பனையாகாமல் தேங்கிக் கிடக்கும்.

பெண்களுக்குக் குடும்பப் பொறுப்புகள் அதிகரிக்கின்றமையால் உடலும் மனமும் சோர்வடையும். விருந்தினர் வரவால் செலவுகள் அதிகரிக்கும். நண்பர்கள் தொல்லை தருவார்கள். பெண்களுக்கு வேலை செய்யும் இடங்களில் பல இடைஞ்சல்கள் உண்டாகும்.

# தமிழக அரசியலில் திடீர் ஆழிப்பேரலை

# கமலின் பிரவேசம்; அரசியல்வாதிகள் மத்தியில் அதிர்ச்சி, பரபரப்பு!





அண்மையில் கேரளா முதலமைச்சருடன்....

தமிழக அரசியலில் நிச்சய மற்ற தன்மை இருப்பதாக கடந்த சில மாதங்களாக பேசப்பட்டு வந்த நிலையில் எடப்பாடி தலைமையிலான அரசு சில மைல் கல்களை இலகுவாகவே கடந்து வந்துள்ளது.

கல்வித்துறை தொடங்கி பல துறைகளில் மிக முக்கிய அறிவிப்புகள், முன்னாள் முதல்வர் ஜெயலலிதா பாணியில் 110 விதியின் கீழ் சட்டப்பேரவையில் அடுக்கடுக்காய் நலத்திடங்கள் என காதுகுளிரும் செய்திகளை வாசித்து, சுமுகமாகவே சட்டப்பேரவை கூட்டத்தொடரை நடத்தி இருப்பதைப் பார்க்கும் போது இந்த அரசு சரியான பாதையில்தான் சென்று கொண்டிருக்கிறதோ என்று நினைக்கத் தோன்றுகிறது.

ஆனால் ஓ. பன்னீர்செல்வம், குடியரசுத் தலைவர் தேர்தலுக்குப் பின் மாற்றங்கள் வரும் என்று வழக்கமான ஆருடம் கூறிக்கொண்டு இருக்கையில், ஆட்சி கலைக்கப்பட்டு விடுமா, ரஜினி அரசியலுக்கு வந்து விடுவாரா. பா.ஜ.க தமிழகத்தில் ஆட்சியை கைப்பற்ற என்ன திட்டம் தீட்டியுள்ளது, பன்னீர் செல்வத்தின் அடுத்த நகர்வு என்னவாக இருக்கும், தீபா அரசியல் ஆதாயம் பெறுவாரா, என்ற பல ஆயிரம் கேள்விக் குறிகளோடு அரசியல் நோக்கர்கள் உற்று நோக்கி இருக்கும் வேளையில் நடிகர் கமல்ஹாசனும் அரசியல் குறித்த தனது பார்வையை பொது வெளியில் வைத்து வருகிறார்.

அந்தவகையில், தமிழகத்தின் அனைத்துத் துறைகளிலும் ஊழல் நடக்கிறது என நடிகர் கமலஹாசன் சமீபத்தில் கூறிய கருத்து பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இதைத் தொடர்ந்து தமிழக அமைச்சர்கள் அனைவரும் வரிசைகட்டி நடிகர் கமலஹாசனை திட்டித் தீர்த்தனர். ஊழல் புகார்களை ஆதாரத்துடன் முன்வைக்க வேண்டும் என்றனர். அதோடு அரசியலுக்கு வெளியில் இருந்து கொண்டு அரசை விமர்சிப்பது தவறான பார்வை என்றும் துணிவிருந்தால் அவர் அரசியலுக்கு வரட்டும் என்றும் சவால் விட்டனர்.

இதற்குப் பதில் அளிக்கும் வகையில் கமல் தனது ட்விட்டர் பக்கத்தில் ஊரெல்லாம் கேட்ட அ.தி.மு.க. அரசின் ஊழல் அதற்குள் மறந்திருந்தால் அதனை மக்களே நினைவுபடுத்துவார்கள் எனக் கூறியுள்ளார். மேலும் மக்கள் சந்திக்கும் ஊழல் பிரச்சினைகள் குறித்து இணையத் தளம் மூலமாகத் தங்களின் புகார்களை அனுப்ப வேண்டும் என கமலஹாசன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்தித் திணிப்புக்கு எதிராகக் குரல் கொடுத்த அன்றே நான் வயதுக்கு வராத அரசியல்வாதிதான் என்றும் எல்லாத் துறைக்கும் மக்கள் குரல் கொடுப்பார்கள். என் துறைக்கான ஊழலை நான் சுட்டிக்காட்டுகிறேன். சினிமாவில் வரி விலக்கு அளிக்கிறேன் பேர்வழி என்று ஒவ்வொரு படத்திற்கும் தனிச்சான்றிதழ் வழங்க நடக்கும் லஞ்ச நாடகங்களுக்கு என்னைப்போல் வெகு சிலரைத்தவிர, மற்றவர் எல்லாம் பயந்து உடந்தையாய் இருக்கின்றனர் என்றும் கூறியுள்ளார்.



## ரஜனி மௌனம் காக்கிறார்... ஏன்?

ஊழலுக்கு எதிராக இப்போது அவர் திடீரென எழுப்பியுள்ள போர்க்குரல் அவரது வயதுக்கு வந்த அரசியல் பிரவேசமாக எடுத்துக் கொள்ளலாம் என்றாலும் இதுவே அவர் தேர்தல் களத்தை எதிர்கொள்வார் என்பதற்கான உத்தரவாதம் இல்லை.

துணிவுள்ள சினிமாக்காரர்கள் மட்டும் குரல் கொடுத்தாலே, அரசின் ஊழல் பாத்திரம் பொங்கி வழியும் என்றும் குறிப்பிட்டுள்ள கமலின் குரலுக்கு பொதுவெளியில் இருந்து ஆதரவு குரல் எழும்பத் தொடங்கியுள்ளதும் கவனிக்கத்தக்கது.

> துணிவுள்ள சினிமாக்காரர்கள் மட்டும் குரல் கொடுத்தாலே, அரசின் ஊழல் பாத்திரம் பொங்கி வழியும் என்றும் குறிப்பிட்டுள்ள கமலின் குரலுக்கு பொது வெளியில் இருந்து ஆதரவு குரல் எழும்பத் தொடங்கியுள்ளதும் கவனிக்கத்தக்கது.

அதே சமயத்தில் போர் வரும்போது பார்த்துக் கொள்ளலாம் என்று கூறிய ரஜினி, ஆளும் தரப்பினருக்கும் தன் சக நடிகரும் உற்ற தோழருமான கமலுக்கும் இடையே வார்த்தைப் போர் நடக்கும் இந்தத் தருணத்தை கவனத்தில் கொள்ளாமல் விடுவது ஏன் என்றும் சிலரின் கேள்விகள் காற்றில் கலப்பதையும் உணர முடிகிறது..

ஒரு திரைப்படத்தை பார்க்கும் எந்த ஒரு ரசிகனுக்கும் அந்த சினிமாவை விமர்சிக்கும் உரிமை உண்டு என்பது எவ்வளவு நிதர்சனமோ அதே போல் வாக்களிக்கும் ஒவ்வொருவனுக்கும் அரசியலை விமர்சிக்கும் உரிமையும், அரசியல்வாதிகளைக் குற்றம் சொல்லும் உரிமையும் இருக்கிறது என்பதை எல்லா அரசியல்வாதிகளும் ஒப்புக் கொண்டுதான் ஆகவேண்டும்.

வாக்கு என்ற அங்கீகாரம் கிடைக்காமல் எத்தனையோ உத்தமர்கள் சுயேச்சையாகக் களம்கண்டு, காணாமற்போயிருக்கிற இந்த அரசியல் களத்தில் சில புகழ்மிக்க தலைவர்களின் நிழலில் நின்று வெகுஜன ஆதரவைப் பெற்று விட்டு நானும் அரசியல்வாதி என்று பெருமிதம் பேசிக்கொள்பவர்கள் எல்லோரும் தனிமனிதனாக அவரவர் தொகுதியில் தங்களுக்கான செல்வாக்கை சுயபரிசோதனை செய்து கொள்ள வேண்டிய அவசியம் இருக்கிறது என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும்.

(18 ஆம் பக்கம் பார்க்க...)



இந்த வாரம் புதுடில்லி முதல்வருடன்...




தொகுப்பு: பொன்.வேணு கிருஷ்ணா

ஓர் அணு ஆயுத பதில் தாக்குதல், அணு ஆயுத சமிக்ஞைக்கான ‘அதிகரித்த தயார்நிலை மற்றும் தகைமை, கருதத் தக்க’ வாய்ப்பாகஞ்; பார்க்கப்படுகிறது.

குறிப்பாக, இரண்டு முன்மொழிவுகள் ஆத்திரமூட்டுவனவாக உள்ளன: அணு ஆயுத இலக்குகளைத் திட்டமிடல் என்பதை விரிவாக்குவது-அதாவது அணு



ஆயுதங்களுக்கான இலக்குகளை அடையாளங்கண்டு உறுதிப்படுத்திவைப்பது, மற்றும் ‘போர் ஏற்பட்டால் இந்தக் குண்டுகளை வீசக்கூடிய விமானத் தளங்களில் செயற்பாட்டுக்குரிய தயார்நிலையை அதிகரிப்பது. இதில், எச்சரிக்கையோடு இருப்பதற்கும் நேட்டோ ஆலோசனை வழங்குகிறது என்று Süddeutsche குறிப்பிட்டது. இலக்குகளை உறுதிப்படுத்துவதென்பது, அதாவது ஓர் அணு ஆயுதத் தாக்குதலுக்கு உறுதியாகத் திட்டமிடல், மனித இனத்தையே நிர்மூலமாக்கக் கூடிய ஓர் அணு ஆயுதப் போரை ரஷ்யாவுடன் துரிதமாகத் தூண்டிவிடும்.

Süddeutsche Zeitung தகவல்படி, வெளியுறவுத்துறை அமைச்சர் சிக்மார் காப்ரியல் (சமூக ஜனநாயகக் கட்சி SPD) அண்மையில் ஒரு நேர்காணலில், ‘பனிப்போரின் மோசமான தவறுகளை மீண்டும் செய்வதற்கு’ எதிராக எச்சரித்தார். நாம் இரண்டாம் பனிப்போர் நோக்கி சென்றுகொண்டிருக்கிறோம். ஆயுதக் குறைப்பு மற்றும் ஆயுதக் கட்டுப்பாடுகள் மீது கோர்பசேவ் மற்றும் ரீகனின் அருமையான அனைத்து உடன்படிக்கைகளும் கூர்மையான ஆபத்தில் உள்ளன.

ஐரோப்பா அணுஆயுதங்களுக்கான ஓர் இராணுவப் பயிற்சிக் களமாக மாறுகிறது என்பதால் மீண்டுமொரு முறை அச்சுறுத்தப்பட்டுள்ளது.






அமெரிக்கா INF உடன்படிக்கையை முறித்துக் கொண்டால், ஒரு புதிய பனிப்போருக்குள் மேற்கொண்டு அடியெடுத்துவைப்பதாக, புதிய ரகஏவுகணைகளைக் கட்டமைப்பது, பரிசோதிப்பது மற்றும் நிலைநிறுத்துவது எனத் தற்போது ‘பரிந்துரைக்கு உரியதல்ல’ என்ற வகைப்பாட்டில் காணப்படும் நடவடிக்கைகள் கருதத்தக்கதாக மாறக் கூடும்.

### ஐரோப்பா அணுஆயுதங்களுக்கான ஓர் இராணுவப் பயிற்சிக் களமாக மாறுகிறது

ரஷ்யாவுக்கு எதிரான வாஷிங்டனின் அதிகரித்தளவிலான ஆக்ரோஷ போர் முனைவால் ஜேர்மன் ஆளும் வர்க்கம் தீவிரமாகக் கவலை கொண்டுள்ளது.

அவர் தொடர்ந்து கூறுகையில், இதில் திருமதி மோர்க்கெல் மவுனமாக இருக்கின்றமை தவறு. அனைத்து நாடுகளுக்குமாக ஜேர்மனி இதற்கு எதிராகக் குரலெழுப்ப வேண்டும். நாம் சமாதானத்திற்கான ஒரு சக்தியாக மற்றும் ஆயுத சுருள்வட்ட வளர்ச்சியை எதிர்க்கும் ஒரு சக்தியாக உறுதியாக இருக்க வேண்டும். அந்த உள்ளடக்கத்தில், முடிவாக நமது நாட்டை அணு ஆயுதங்களிலிருந்து விடுவிப்பதில் கவனம் குவிக்கவேண்டும் என்ற SPD சான்சிலர் வேட்பாளர், மார்ட்டின் சூல்ஸ் இன் கூற்றைச் சரியானதாக நான் காண்கிறேன். - என்றார்.

சூல்ஸ் மற்றும் காப்ரியல் ஒரு தேர்தல் பிரசாரத்திற்கு இடையில் உள்ளனர். மேலும், பூமியின் பிற பகுதி மக்களைப் போலவே ஜேர்மனி மக்களில் பெரிய பெரும்பான்மையினரும் இராணுவ மீள்ஆயுத மயப்படுத்தல் மற்றும் போரை எதிர்க்கின்றனர் என்பதும் மற்றும் ஜேர்மனியில் இப்போதும் நிலைநிறுத்தப்பட்டுள்ள அமெரிக்க அணு ஆயுதங்களைத் திரும்பப்பெறுகின்றமையை அவர்கள் வரவேற்பார்கள் என்பதும் அவர்களுக்கு நன்கு தெரியும்.

அந்த இரு சமூக ஜனநாயகக் கட்சி அரசியல்வாதிகளும் எந்த விதத்திலும் சமாதானத்திற்குப் பொறுப்பேற்றவர்கள் அல்லர். மாறாக, அவர்கள் ஜேர்மன் ஏகாதிபத்தியத்தை வழிநடத்தும் பிரதிநிதிகளாக உள்ளனர். அவர்கள் அணு ஆயுதங்களின் மீள் ஆயுத மயமாக்கலுக்கான அமெரிக்க திட்டங்களை எதிர்க்கின்றனர். ஏனென்றால், பனிப்போர் நிலைமைகள் திரும்ப வருகின்றமை என்பது உலக வல்லரசாகும் ஜேர்மனியின் சொந்தத் திட்டங்களை ஆபத்திற்குட்படுத்தி, பேர்லின் அமெரிக்காவைச் சார்ந்திருந்திருப்பதை அதிகரிக்கும் என்பதால் ஆகும். அது, முன்பினும் அதிகமாக வாஷிங்டனின் பொருளாதார மற்றும் புவி அரசியல் நலன்களுடன் முரண்பட்டுள்ள ஜேர்மனியின் பொருளாதார மற்றும் புவிஅரசியல் நலன்களுக்குக் குழிபறிக்கும்.

ஜூலையில், காப்ரியல் ரஷ்யாவுக்கு எதிரான சமீபத்திய அமெரிக்கத் தடைகளைப் பலமாக விமர்சித்தார். ‘‘ரஷ்யாவின்கிழக்கு உக்ரேனிய நடவடிக்கைகள் மற்றும் கிரிமியாவை ரஷ்யா சட்ட விரோதமாக இணைத்துக் கொண்டதற்கு ஐரோப்பாவும் அமெரிக்காவும் கூட்டாக மற்றும் நெருக்கமான கலந்தாலோசனைகளைக் கொண்டு பதிலளித்தன. என்றாலும், ஐரோப்பிய எரிசக்தி விநியோகங்களின் விரிவாக்கத்தில் பங்களிப்பு செய்யும் ஐரோப்பிய நிறுவனங்களுக்கு எதிராக சட்டவிரோதமாக எல்லை கடந்த தடையாணைகளைக் கொண்டு அச்சுறுத்துவதை!’’ ஏற்பது சாத்தியமில்லை என்றார். ஐரோப்பாவுக்கான எரிசக்தி விநியோகம், ஐரோப்பிய விவகாரமாகும், அது அமெரிக்கா சம்பந்தப்பட்டதல்ல. - என்றார்.

‘‘அமெரிக்காவிடமிருந்து வந்த சமீபத்திய அச்சுறுத்தல்களைத் தொடர்ந்து சமூக ஜனநாயகவாதிகள் ரொனால்ட் ட்ரம்பின் வலதுசாரி, இராணுவவாத கொள்கைகளுக்கு எதிரான பரந்த எதிர்ப்பை ஜேர்மன் இராணுவ வாதத்திற்கான ஆதரவிற்குள் திருப்பிவிட முயற்சிக்கும் பாதையில் பயணிக்கின்றனர். ட்ரம்ப் மிதமிஞ்சி, ஒரு போரைக் கிளறிவிடுவாரென பல ஜேர்மனியர்கள் நியாயமாகவே அஞ்சுவதாக’’ அவர் கருதுகிறாரா என்று வினவிய போது, காப்ரியல் விடையிறுக்கையில், அமெரிக்கா எப்போதைக்கும் மேற்கிடம் தோற்குமென நான் கவலையுறுகிறேன். ரொனால்ட் ட்ரம்பைச் சுற்றியுள்ள சிலர் சட்டத்தின் ஆட்சியை - பலத்தின் ஆட்சியை - கொண்டு பிரதியீடு செய்ய விரும்புகிறார்கள். இதற்கு எதிராக நம்மை நாம் காட்ட வேண்டும். - என்றார்.



(கேள்வி தொடரும்)



# சுதந்திர வேட்கை



முப்பது ஆண்டுகளுக்கு மேல் படிநிலை வளர்ச்சி கண்டு, நீட்சி கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் புரட்சிகர வரலாறு ஒரு பூகம்பமாக வெடித்துச் சிதறி, பிரளயமாகப் பொங்கிப் பிரவகித்து அடங்கியிருக்கின்றது.

அந்த இயக்கத்தின் வரலாற்றுக்குள்ளே பொதிந்து கிடக்கும் அதிசயிக்கத்தக்க நுட்பமான அம்சங்களும் தியாகங்களும் வீர வரலாறுகளும் நம்மில் பலருக்குத் தெரிவதில்லை.

விடுதலைப் புலிகள் இயக்கம் பற்றிய ஒரு பார்வையாக – அந்த இயக்கத்துடன் பங்காற்றிய ஒரு வரலாற்றுப் பயணத்தின் படிமமாக – கட்டவிழ்கின்றது இந்த நூல்.

புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் எழுதிய ‘போரும் சமாதானமும்’ என்ற நூலின் ஊடாக விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தரிசித்த நாம், அவரது துணைவியாரான – ஆஸ்திரேலியப் பெண்ணான – அடேல் பாலசிங்கத்தின் பட்டறிவுப் பதிவு மூலமும் புலிகள் இயக்கத்தின் உட்சூக்குமங்களை இந்தப் புதிய தொடரின் ஊடே அறிந்து கொள்ள முடியும்.

‘சுதந்திர வேட்கை’ என்ற இந்த நூல் முதலில் ஆங்கிலத்தில் ‘Will To Freedom’ என்ற தலைப்பில் வெளியானது. தமிழ்ப் பதிப்பு சரியாக பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் 2002 இல் ‘தமிழீழ விடுதலைப் போராட்டம் – உள்ளிருந்து ஒரு நோக்கு’ என்ற பீடிகையுடன் வெளியானது.

105




## அத்தியாயம் - VII

## யாழ்ப்பாணத்தில் போருக்குள் வாழ்க்கை

1990 ஆம் ஆண்டு மார்ச் மாதம் இந்திய இராணுவம் இலங்கையை விட்டு வெளியேறியமையை அடுத்து, அரியாலை மணியந்தோட்டத்தில் அமைந்திருந்த ஈ.பி.ஆர்.எல்.எவ். இனரின் படைமுகாமை முற்றாக அழித்த விடுதலைப் புலி வீரர்கள், யாழ்.குடாநாட்டைத் தமது முழுமையான கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவந்தனர். அதே சமயம், சிங்கள இராணுவத்தினர், யாழ்ப்பாணக் கோட்டை, பலாலி விமானத்தளம், ஆனையிறவு போன்ற கேந்திரநிலையங்களில் முகாமிட்டிருந்தனர். கொழும்பில் நிகழ்ந்த பேச்சுக்களில் பங்குபற்றிக் கொண்டிருந்த நாம், மார்ச் மாத இறுதிப் பகுதியில் யாழ்ப்பாணம் வந்து, வல்வெட்டித்துறையில் தற்காலிகமாக ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்துக் குடியமர்ந்தோம்.

இந்தியஇராணுவம்வெளியேறியமையால், தமக்குக் கிட்டிய சுதந்திரத்தை இட்டு, யாழ்ப்பாண மக்கள் நிம்மதியுடனும் மகிழ்ச்சியுடனும் காணப்பட்டனர். இரு ஆண்டுகள் வரை ஓர் அந்நிய இராணுவத்தின் ஆக்கிரமிப்பு நீடித்து, இப்பொழுது முடிவடைந்து விட்டமையால் யாழ்ப்பாணத்தில் இயல்புநிலை திரும்பியிருந்தது. யாழ்ப்பாண மக்களும் மீண்டும் தமது வாழ்க்கையைச் சீரமைக்கத் தொடங்கிவிட்டனர். ஏப்ரல் மாதம் 19 ஆம் திகதி நல்லூர் கந்தசுவாமி கோவிலடியில் நிகழ்ந்த பூபதி அம்மா நினைவுநாள் கூட்டத்துக்குப் பெருந்திரளான மக்கள் அணிதிரண்டனர். விடுதலைப் புலிகள் மீது யாழ்ப்பாண மக்கள் கொண்டிருந்த நல்லெண்ணத்தையும் பேராதரவையும் எடுத்துக் காட்டுவதாக இந்த நிகழ்வு அமைந்தது. இருவாரங்களுக்குப் பின்னர் மே மாதம் முதலாம் திகதி நிகழ்ந்த தொழிலாளர் தினப் பேரணிகளும் விழாக்கோலம் பூண்டிருந்தன. யாழ்.குடாநாடு அடங்கிலிருந்தும் பல்லாயிரக்கணக்கான மக்கள் இந்தப் பேரணிகளில் கலந்துகொண்டனர். சிறிலங்கா அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் மத்தியில் அப்பொழுது நடைபெற்றுக்கொண்டிருந்த பேச்சுக்களின் முன்னேற்றம் குறித்து மேதினக் கூட்டத்தில் பாலாவும் யோகியும் மக்களுக்கு விளக்கமளித்தனர். இந்தப் பொதுக்கூட்டத்தில் பெண் தொழிலாளர்களின் பிரச்சினைகள் தொடர்பாகப் பேசுவதற்கு எனக்கும் சந்தர்ப்பம் அளிக்கப்பட்டது.

இந்தச் சமாதான இடைவெளியைப் பயன்படுத்தி நாம் எமது பழைய நண்பர்களையும் மூத்த போராளிகளையும் சந்தித்து உறவாட முடிந்தது. அன்று மகளிர் இராணுவப் பிரிவின் தளபதியாகப் பணியாற்றிய சுகி, தனது நீண்டநாள் காதலனான கிறேசியைத் திருமணம் செய்ய முடிவெடுத்தார். நீண்ட காலமாகச் சமூக வைபவங்கள் எவற்றிலுமே கலந்துகொள்ள முடியாதிருந்த எமது போராளிகளுக்கு, மண்டைதீவில் கலகலப்பாக நிகழ்ந்த இந்தத் திருமண வைபவம் மகிழ்ச்சி தரும் நிகழ்வாக அமைந்தது. எமது வளர்ப்புநாய் ஜிம்மியை அல்வாயில் வசித்துவந்த பாலாவின் நண்பரான கந்தசாமியிடம் ஒப்படைத்திருந்தோம். தனது நண்பரிடம் சென்று ஜிம்மியைத் திருப்பிப் பெறுவதற்கு பாலா ஆவலாக இருந்தார். இரு ஆண்டுகளாகியும் இந்தப் பிராணி எம்மை மறக்கவே இல்லை. எம்மைக் கண்டதுமே மகிழ்ச்சி பொங்கத் துள்ளிக் குதித்து, ஆனந்த மிகுதியால் வீட்டு வளவைச் சுற்றிச் சுற்றி ஓடியது. இந்திய இராணுவத்தினரால் நாம் வேட்டையாடப்பட்டபோது, வடமராட்சியில் ஆபத்துகளுக்கு முகங்கொடுத்து எமக்குப் புகலிடம் தந்த குடும்பங்களைச் சந்தித்து நன்றி கூறினோம். அந்த வேளைகளில் எமக்கு உதவி புரிந்த பல போராளிகள், இந்திய இராணுவச் சுற்றிவளைப்புக்களில் சிக்குப்பட்டு வீரச்சாவைத் தழுவிக்கொண்டனர் என அறிந்து மிகவும் வேதனையடைந்தோம். எமக்கு உதவிய கிங்ஸ்லி என்ற ஓர் இளம் போராளி, நாம் வடமராட்சியை விட்டு வெளியேறியதும், திருகோணமலை சென்று அங்கு நிகழ்ந்த ஒரு மோதலில் வீரச்சாவைத் தழுவிக்கொண்டார்.

(...வளரும்)

இந்திய இராணுவம் வெளியேறியமையால் தமிழ் மக்கள் மத்தியில் நிலவிய மகிழ்ச்சி, ஆரவாரம் நீண்ட நாள்களுக்கு நீடிக்கவில்லை. 1990 ஆம் ஆண்டு ஜூன் மாதம் சிங்கள ஆயுதப் படைகளுக்கும் புலிப் படைவீரர்களுக்கும் மத்தியில் மீண்டும் போர் வெடித்தது. பிரேமதாசா அரசுக்கும் புலிகளுக்கும் மத்தியில் நடைபெற்ற பேச்சுக்கள் முறிந்து, போர் தொடங்கியதும் யாழ்ப்பாணத்தில் நிலவிய நம்பிக்கைகளும், எதிர்பார்ப்புகளும் நல்லெண்ண சூழ்நிலையும் தகர்ந்துபோயின. போர் ஆரம்பித்ததும் பிரேமதாசா அரசு தமிழ் மக்களைக் கடும் துன்பத்துக்கு ஆளாக்கியது. மின்சாரமும் தொலைத்தொடர்பும் துண்டிக்கப்பட்டன. இதனால் யாழ்ப்பாணம் இருளுக்குள் மூழ்கியதுடன், தொடர்புகள் அறுந்து உலகத்திலிருந்து ஓரங்கட்டப்பட்டது. பொருளாதார ரீதியாகவும் சிங்கள அரசு தமிழர் தேசத்தின் கழுத்தைத் திருகியது. மிகவும் கடுமையான பொருளாதாரத் தடை திணிக்கப்பட்டதால் வடபுலத்தில் உணவுப் பொருள்களுக்கும் மருந்து வகைகளுக்கும் பெரும் தட்டுப்பாடு நிலவியது. மின்சாரத்துக்கும் எரிபொருள்களுக்கும் தடை விதிக்கப்பட்டமையால் கைத்தொழில்களும் போக்குவரத்தும் முடங்கின. விவசாயம் பெருமளவில் பாதிக்கப்பட்டது. வேலையில்லாத் திண்டாட்டம் பெருகியது. வாழ்க்கைச் செலவு உச்சத்துக்கு உயர்ந்தது.

மெல்ல மெல்ல யுத்தத்தின் கொடூரப் பிடியில் யாழ்ப்பாணம் சிக்கிக் கொண்டது. யாழ்ப்பாணக் குடாநாட்டில் மீண்டும் விமானக் குண்டுத் தாக்குதல்களும் பீரங்கிக் குண்டு வீச்சும் ஆரம்பமாகின. பழைய பதுங்குகுழிகளை மக்கள் துப்புரவாக்கத் தொடங்கினர். புதிய பதுங்குகுழிகளும் வெட்டப்பட்டன. தற்

இந்திய இராணுவம் வெளியேறியமையால் தமிழ் மக்கள் மத்தியில் நிலவிய மகிழ்ச்சி, ஆரவாரம் நீண்ட நாள்களுக்கு நீடிக்கவில்லை. 1990 ஆம் ஆண்டு ஜூன் மாதம் சிங்கள ஆயுதப் படைகளுக்கும் புலிப் படைவீரர்களுக்கும் மத்தியில் மீண்டும் போர் வெடித்தது. பிரேமதாசா அரசுக்கும் புலிகளுக்கும் மத்தியில் நடைபெற்ற பேச்சுக்கள் முறிந்து, போர் தொடங்கியதும் யாழ்ப்பாணத்தில் நிலவிய நம்பிக்கைகளும், எதிர்பார்ப்புகளும் நல்லெண்ண சூழ்நிலையும் தகர்ந்துபோயின. போர் ஆரம்பித்ததும் பிரேமதாசா அரசு தமிழ் மக்களைக் கடும் துன்பத்துக்கு ஆளாக்கியது. மின்சாரமும் தொலைத்தொடர்பும் துண்டிக்கப்பட்டன. இதனால் யாழ்ப்பாணம் இருளுக்குள் மூழ்கியது. தமிழர் தேசத்தின் கழுத்தைத் திருகியது.

எழுந்த சவால்களுக்கு முகங்கொடுக்கத் தயாராகினர்.

போர் தொடங்கிய வேளையில் பருத்தித்துறை முனையில் வெளிச்சவீட்டுக்கு அருகில் நாம் வசித்து வந்தோம். அது ஓர் அற்புதமான சூழல். நேர்த்தியாகக் கட்டப்பட்ட பழைய வீடு. அதனைச் சூழ தென்னஞ்சோலை. 25 யார்கள் முன்னால் கடற்கரை. ஆபத்துக்கள் இருந்தபோதும், அந்த அழகிய சூழலை விட்டு, உட்புறமாகக் குடியிருக்கும்படி கடற்படைத் தளபதி சூசையும், எமது மெய்ப்பாதுகாவலர்களான போராளிகளும் எம்மை வற்புறுத்தினார்கள். கடல் வழியாக எமது வீட்டுக்கு முன்புறமாகச் சிங்கள இராணுவம் தரையிறங்கலாம் என்றும் மிரட்டினார்கள். நாம் அசையவில்லை. ஆனாலும், கடற்படையினரால் கரையோரக் கிராமங்கள் மீது தொடர்ச்சியாக நிகழ்த்தப்பட்ட எறிகணைத் தாக்குதல்கள் எமது பகுதியில் நடைபெற்ற விமானக் குண்டுவீச்சுக்கள் தீவிரமடைந்தபோது, அந்தக் கடற்கரை வீட்டில் தொடர்ந்தும் குடியிருப்பது புத்திசாலித்தனமல்ல என்று எமக்குத் தோன்றியது.

பருத்தித்துறை கரையோர வீட்டிலிருந்து இடம்பெயர்ந்து, யாழ்ப்பாணம் அத்தியடியிலுள்ள ஒரு வீட்டில் குடியமர்ந்தோம். இந்த இடம்பெயர்வு 10 ஆண்டுகள்காலமாக யாழ்ப்பாணத்திலும் பின்னர் வன்னியிலும் தொடர்ச்சியாக இடம்பெயர்ந்து வீடு மாறும் ஒரு வரலாற்றுப் படலத்தின் ஆரம்ப நிகழ்வாக அமைந்தது. சிறிலங்கா விமானப் படையின் இலகுவான இலக்காக நாம் மாறிய காரணத்தால், நாம் தொடர்ச்சியாக இடம்பெயர நேர்ந்தது. நாம் குடியிருந்த பல வீடுகள் விமானக் குண்டுத் தாக்குதலுக்கு இலக்காகி அழிந்து போயின. பருத்தித்துறைக் கடலோரம் அமைந்திருந்த அந்த அழகிய வீடும் விமானக் குண்டு வீச்சுக்கு இலக்காகி, அதன் ஒரு பகுதி தகர்ந்து போயிற்று.

காலைக்கதிர் Kalaikkathir





மருதன்

# வழித்து துடைத்தது பொல்லாத 'இர்மா'!

## செப்ரெம்பர் பயங்கரம்

ஒரு பொல்லாத யானையைப் போல் தடதடவென்று ஃப்ளோரிடாவுக்குள் புகுந்து கண்ணில்பட்டஅனைத்தையும் சீற்றத்துடன் மிதித்துப் போட்டுவிட்டுச் சென்றிருக்கிறது 'இர்மா' புயல்.

இர்மா புயலின் நீள அகலமும் ஃப்ளோரிடாவின் நீள அகலமும் கிட்டத்தட்ட ஒன்றே என்பதால் அழிவும் பெரிதாகவே இருந்திருக்கிறது. இப்படியெல்லாம் நடக்கும் என்று நாங்கள் எதிர்பார்க்கவேயில்லை என்று ஃப்ளோரிடா நிச்சயம் சொல்ல முடியாது. வெகுதூரத்தில் முதல் மணியோசை கேட்கும்போதே வருவது யானை என்று வானியல் நிபுணர்கள் எச்சரித்துவிட்டார்கள். முடிந்தவரை எல்லோரும் வெளியேறிவிடுங்கள் என்றும் அறிவித்துவிட்டார்கள்.

'இர்மா' தொடங்கியது என்னவோ ஆபிரிக்காவில்தான். மேகக் கூட்டங்களாகவும் சிறு துளி மழையாகவும் தொடங்கிய இர்மா அமைதியாகத் தவழ்ந்தபடியே அட்லாண்டிக் பெருங்கடலைத் தொட்டது. ஓகஸ்ட் 27 ஆம் திகதி அது புயலாக மாற்றமடைந்தது. பாதி அட்லாண்டிக் கடலிலேயே காட்டுத்தீபோல வளர்ந்துவிட்ட



'இர்மா' மேற்கில் நகர நகர, ஐந்தாம் எண் அபாயம் கொண்ட ஒரு பெரும் புயலாக முழுவளர்ச்சி கண்டுவிட்டது. அடுத்து ஃப்ளோரிடாதான் என்று அப்போதே திட்டவட்டமாகச் சொல்லிவிட்டார்கள். அவசரநிலைப் பிரகடனமும் அறிவித்துவிட்டார்கள். ஃப்ளோரிடாவின் ஒட்டுமொத்த மக்கள்தொகையில் குறைந்தது 25 சதவிகிதம் பேராவது உடனடியாக வெளியேறிச் செல்ல வேண்டும் என்று அறிவிக்கப்பட்டது.

செப்ரெம்பர் 8 ஆம் திகதி, மழை பெய்திருக்கிறது. மழையா அல்லது கூரையில் ஏதாவது சத்தமா என்று கேட்கும்படியான சிக்கனமான மழை. பிறகு பலத்த மழை. சனிக்கிழமை மிதமான புயல் ஆரம்பமாகிவிட்டது. காற்று சுழற்றியடிப்பது வீட்டுக்குள் கேட்கும் என்றாலும், ஒருவரும் அச்சப்படவில்லை. புயல் அவர்களுக்குப் புதிதல்ல என்பதால், பொப்கோர்ன் கொறித்துக்கொண்டே ரி.வி பார்த்துக்கொண்டிருந்தனர். மதிய அளவில் காற்று வீசுவதும் நின்றுவிட்டது. தரையில் விழுந்துகிடக்கும் மரங்களை வேடிக்கை பார்க்க மக்கள் வீதிகளில் நடக்கத் தொடங்கினர். பொழுது விடிந்தால் எல்லாம் சரியாகிவிடும் என்று சொல்லிக்கொண்டார்கள். தேவையில்லாமல் ஃப்ரிட்ஜ் முழுக்கத் தின்பண்டங்களை வாங்கி அடுக்கி வைத்தது குறித்து ஓரளவு வெட்கமும் அடைந்தார்கள். ஆனால், பொழுது விடிவதற்குள் இர்மாவின் பலம் பிடிபட்டுவிட்டது.



அட்டைப்பெட்டிபோல் தன் வீடு அக்குஅக்காகப் பிரிந்து வெள்ளத்தில் மிதந்து செல்வதைக் கண்ணீருடன் பார்த்து நிற்பதைத் தவிர வேறு வழி தெரியவில்லை பலருக்கு. பெரும்பாலான வீடுகளில் மேற்கூரை இல்லை. கிட்டத்தட்ட எல்லா ஆங்கிலத் திரைப்படங்களிலும் காட்டப்படும் ஹொலிவூட் என்னும் வெள்ளை எழுத்துகொண்ட மலையடிவாரத்தில் உள்ள ஹொலிவூட் ஹில்ஸ் பகுதியிலுள்ள ஒரு மருத்துவமனையில் குளிர்சாதனப் பெட்டிகள் இயங்காததால், வெப்பத்தில் கருகி எட்டுப்பேர் இறந்துபோயிருக்கிறார்கள். மிச்சமிருந்த நூற்றுச்சொச்சநோயாளிகளை வேறு மருத்துவமனைக்கு மாற்றிக் கொண்டு செல்வதற்குள் பெரும் பாடாகிவிட்டது. மொத்தமுள்ள 700 மருத்துவமனைகளில் கிட்டத்தட்ட 150 மருத்துவமனைகளில் மின்சாரம் இல்லை. மின்சார வசதி ஓரளவு இருக்கும் மருத்துவமனைகளில் நோயாளிகளை அனுமதிக்க இடமில்லை.

ஃப்ளோரிடாவின் இன்னொரு பெயர் ஓய்வு பெற்றவர்களின் சொர்க்கபுரி. பரபரப்பான அமெரிக்க வாழ்விலிருந்து ஒரு வழியாக மீண்டு,



காலை நீட்டி அமர்ந்து கடலைப் பார்த்து ரசிக்கும் முதியோர்களின் எண்ணிக்கை அங்கே அதிகம். ஐந்து பேரில் ஒருவர், 65 வயதுக்கு மேற்பட்டோர். 'இர்மா' இவர்களுடைய சொர்க்கத்தை நரகமாக மாற்றியிருக்கிறது. புயலில் இருந்து தப்பியே ஆக வேண்டும். ஆனால், கைத்தடியோ தள்ளுவண்டியோ இல்லாமல் ஓரடிகூட எடுத்து வைக்கமுடியாத இவர்களால் என்ன செய்ய முடியும்?

ஃப்ளோரிடாவை ஒரு நோட்டம் விட்டுவிட்டு டொனால்ட் ட்ரம்ப் வெளியிட்ட கருத்தை இன்னொரு குட்டிப்புயல் என்றுதான் அழைக்க வேண்டும்.

(18 ஆம் பக்கம் பார்க்க...)

# பறவைகள் பலவிதம் ‘டோடோ’ அதில் ஒரு விதம்!

பறக்க முடியாத ராட்சத பறவையான டோடோ (Dodo) அழிந்துபோகும் நிலைக்குத் தள்ளப்பட்ட நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்குப் பின்னர், அதுபற்றிக் கிடைத்த துப்புகளை எல்லாம் விஞ்ஞானிகள் ஒன்றாக இணைத்து ஆய்வு நடத்தி பல உண்மைகளைக் கண்டறிந்துள்ளனர்.

1662 ஆம் ஆண்டு அழிந்துபோன, அதிர்ஷ்டம் இல்லாத இந்தப் பறவை பற்றிய சில அறிவியல்பூர்வ உண்மைகள் இந்த ஆய்வில் தெரிய வந்துள்ளன.இந்த ராட்சத பறவையின் எலும்பு மாதிரிகளை வைத்து நடத்திய ஆய்வில், ஓகஸ்ட் மாதம் பொரித்த இந்தப் பறவையின் குஞ்சு மிக விரைவாக வளர்ந்து பெரிதாகி விடுவது தெரியவந்துள்ளது.

**வெளிச்சத்துக்கு வந்தது டோடோ இராட்சத பறவையின் இரகசிய வாழ்க்கை!**


மார்ச் மாதம் இறகுகள் விழுந்து விடும் அந்தப் பறவை, கடற்பறவைகளால் வரலாற்று கணக்குகளில் பதிவுசெய்யப்பட்ட பஞ்சு போன்ற சாம்பல் நிறத் தோலைக் கொண்டிருந்தது வெளிப்பட்டுள்ளது.

பிரான்ஸிலுள்ள அருங்காட்சியகத்திற்கு சமீபத்தில் நன்கொடையாக வழங்கப்பட்ட மாதிரிகள் உட்பட அருங்காட்சியகங்களிலும். சேகரிப்புகளிலும் இன்னும் காணப்படும் டோடோ பறவையின் எலும்புகள் சிலவற்றை ஆய்வில் பயன்படுத்த தென்னாபிரிக்காவிலுள்ள கேப்டவுன் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த டெல்பின் ஆங்ஸ்ட்க்கு வாய்ப்பு கிடைத்தது.

### ஆண்டில் ஒரு முறை மட்டுமே இனப் பெருக்கம்

அவருடைய அணியினர் 22 டோடோ பறவைகளின் எலும்புத் துண்டுகளை நுண்ணோக்கியில் பார்த்து, இந்த ராட்சத பறவையின் வளர்ச்சி மற்றும் இனப்பெருக்க முறைகள் பற்றி ஆய்வு செய்தனர்.





எம்முடைய ஆய்வுக்கு முன்னர் இந்தப் பறவைகளைப் பற்றி மிகக் குறைவாகவே அறிந்திருந்தோம் என்கிறார் ஆங்ஸ்ட். இந்தப் பறவை ஆண்டில் ஒரு முறை மட்டுமே இனப்பெருக்கம் செய்கிறது என்றும், அதற்குப் பிறகு இறகுகள் உதிர்ந்து விடுகின்றன என்றும் எலும்பு திசுவியலை பயன்படுத்தி முதல்முறை யாக விளக்க முடிந்துள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார்.

இந்த பறவைகள் அவற்றின் பழைய சேதமடைந்த இறகுகளை ஏன் இழந்தன என்பதை இது எடுத்துக்கூறுகிறது.

கீழே கறுப்பு நிறம் அல்லது சாம்பல் நிற சுருண்ட இறகைக் கொண்டவை என்று டோடோ பற்றிய முரண்பட்ட தகவல்களை முற்கால கடலோடிகள் வழங்கியுள்ளனர்.

‘சைன்டிஃபிக் ரிப்போர்ட்ஸ்’ என்கிற சஞ்சிகையில் வெளியாகி இருக்கும் இந்த ஆய்வு, வரலாற்று சான்றுகளோடு வெளியாகியுள்ளது.பழுப்பு-சாம்பல் நிறமுடைய டோடோ, தோலுரியும் காலத்தில், உரோமத்துடன், கறுப்பு நிற சுருண்ட இறக்கையை இந்தப் பறவை கொண்டிருந்தது என்று ஆங்ஸ்ட் விளக்கியிருக்கிறார்.

கடலோடிகள் முற்காலத்தில் எழுதியிருக்கிறவற்றோடு, நாங்கள் எங்களுடைய அறிவியல் முறைகளை பயன்படுத்திக் கண்டுபிடித்தவை அனைத்தும் மிகவும் சரியாகப் பொருந்துகின்றன என்று அவர் கூறியுள்ளார்.

### முட்டை திருட்டு

ஏறக்குறைய 350 ஆண்டுகளுக்கு முன்னர், இந்த தீவுக்கு மனிதர்கள் வந்து சேர்ந்த 100 இற்கும் குறைவான ஆண்டுகளில் டோடோ அழிந்து விட்டதை பற்றியும் இந்த ஆய்வு துப்புகள் வழங்க முடியும்.

வெளிச்சத்திற்கு வந்தது டோடோ ராட்சத பறவையின் ரகசிய வாழ்க்கை

டோடோ அழிந்துபோவதற்கு வேட்டையாடுதல் ஒரு காரணம். ஆனால், கப்பல்களில் இருந்து இந்தத் தீவில் விடப்பட்ட குரங்குகள், மான்கள், பன்றிகள் மற்றும் எலிகள் இந்தப் பறவையின் தலைவிதியை நிர்ணயித்துள்ளன.



டோடோக்கள் தங்களின் முட்டைகளை தரையிலுள்ள கூட்டில் இட்டு வந்ததால், பாலூட்டி விலங்குகளால் அவை பாதிப்புக்குள்ளாகும் நிலையே இருந்திருக்கும்.

(18 ஆம் பக்கம் பார்க்க...)

ஓகஸ்ட் மாத அளவில் பொரித்த இந்தப் பறவையின் குஞ்சுகள் மிக விரைவாக பெரிதாக வளர்கிறது என்று அவற்றின் எலும்புகளின் வளர்ச்சி முறைகளில் இருந்து விஞ்ஞானிகளால் கூறிவிட முடியும்.நவம்பர் முதல் மார்ச் வரை அந்தத் தீவை சூறாவளிகள் தாக்கி, உணவுப் பற்றாக்குறையை ஏற்படுத்தியபோது, இந்தப் பறவைகளின் விரைவான வளர்ச்சி முறை உயிர்வாழ்வதற்கு சாதகமான நிலையை வழங்கியிருக்கலாம்.

இருப்பினும், பெரிதான இந்த பறவைகள் இயற்கையான எந்தவோர் இரையையும் பெற்றுக்கொள்ள முடியாத சாத்தியக்கூறு நிலவியதால். பாலியல் முதிர்ச்சியை இந்தப் பறவைகள் அடைவதற்கு பல ஆண்டுகள் பிடித்திருக்கலாம்.பெரிய பறவைகளின் எலும்புகள் தாது உப்புக்களை இழந்திருந்த அறிகுறியையும் காட்டுகின்றன. இனப் பெருக்கத்திற்கு பிறகு



# துர்நாற்றமா...? நாய் குரைக்கும்! நறுமணமா...? வாலை ஆட்டும்!!



ஜப்பானிய நிறுவனம் ஒன்று, துர்நாற்றத்தைக் கண்டுபிடிக்கும் ரோபோ நாயை உருவாக்கி இருக்கிறது. ஜப்பானியர்களுக்கு சப்பாத்துகளில் இருந்து வெளிவரும் துர்நாற்றம் முக்கியப் பிரச்சினையாக இருக்கிறது. இந்த துர்நாற்றத்தால் வீட்டில் உள்ளவர்களுக்கு உடல்நலக் குறைபாடு ஏற்படுகிறது. இதைத் தவிர்க்கவே ரோபோ நாய் உருவாக்கப்பட்டிருக்கிறது.

வீட்டுக்குள் நுழைந்தவுடன் ரோபோ நாய் அருகில் வரும். துர்நாற்றம் வரவில்லை என்றால் மகிழ்ச்சியாக வாலை ஆட்டிக் கொண்டு சென்றுவிடும். துர்நாற்றம் வந்தால் கோபமாகக் குரைக்க ஆரம்பித்துவிடும். காலணிகள் மட்டுமின்றி, வீட்டிலிருந்து வரும் எத்தகைய துர்நாற்றத்தையும் கண்டுபிடித்துவிடும் அளவுக்கு உயர்தொழில் நுட்பத்தில் இந்த ரோபோ உருவாக்கப்பட்டிருக்கிறது.

15 செ.மீ. நீளம் இருக்கும் இந்த ரோபோ நாய், சில நொடிகளில் நுகர்ந்து பார்த்துவிட்டுச் சொல்லி விடுகிறது. 3 விதங்களில் தன்னுடைய கருத்தை இது வெளிப்படுத்துகிறது. நறுமணம் என்றால் வால் ஆட்டும், துர்நாற்றம் என்றால் குரைக்கும், தாங்க முடியாத துர்நாற்றம் என்றால் கீழே விழுந்துவிடும். விலை சுமார் 20 லட்சம் ரூபாவாம்.

# ஒரே வீட்டில், ஒரே நேரத்தில் இரு கின்னஸ் சாதனைகள்

அமெரிக்காவின் மிச்சிகன் பகுதியில் வசிக்கும் லோரன், வில்பவர்ஸ் தம்பதியர் பூனைகளை வளர்த்துவருகிறார்கள். இவற்றில் சிக்னஸ் என்ற பூனையின் வால் மிக நீளமாக இருக்கிறது. உலகிலேயே மிக நீளமான வாலுடைய வீட்டுப் பூனை இதுதான். வாலின் நீளம் 18.4 அங்குலம்.

"சிக்னஸுக்கு 2 வயதாகிவிட்டது. பிறந்ததிலிருந்தே இயல்பான பூனைகளைவிட இதன் வால் மிக நீளமாக இருந் தது. இந்தப் பூனையின் சகோதரனுக்கு வால் சாதாரணமாகத்தான் இருக்கிறது. காரணம் தெரியவில்லை. ஒருகட்டத்தில் பூனையின் வால் அளவுக்கு அதிகமாக வளர ஆரம்பித்தது. அதற்குப் பிறகே சிக்னஸின் வாலை, பாதுகாக்க ஆரம்பித்தோம். கதவு பின்னால் ஒளிந்து கொள்ளும்போது வால் கதவில் சிக்கிவிடும். உயரமான இடத்திலிருந்து குதிக்கும்போது வாலுக்கு என்ன ஆகுமோ என்ற பயம் வந்துவிடும். இவனைக் கண்காணிப்பதே ஒரு பெரும் வேலையாக மாறிவிட்டது. சென்ற வருடம் ஜூன் மாதம் கின்னஸ் நிறுவனத்திலிருந்து வந்து சிக்னஸின் வாலை அளந்தனர். 17.58 அங்குல நீளம் இருந்தது. தற்போது 18.4 அங்குலமாக வளர்ந்துவிட்டது. மாதந்தோறும் வளர்ச்சி தெரிகிறது. உலகிலேயே மிக நீளமான வாலுடைய வீட்டுப் பூனை இதுதான் என்று கின்னஸ் நிறுவனம் சான்றிதழ் வழங்கிவிட்டது. சிக்னஸின் சகோதரன் ஆர்க்டரஸும் ஒரு கின்னஸ் சாதனை நிகழ்த்திவிட்டான். உலகின் மிக உயரமான வீட்டுப் பூனை என்ற பட்டத்தைப் பெற்றிருக்கிறான். இவனின் உயரம் 19.5 அங்குலம். ஒரே வீட்டில், ஒரே நேரத்தில் இரண்டு கின்னஸ் சாதனைகள் நிகழ்ந்திருப்பது குறித்து எங்களுக்கு மட்டற்ற மகிழ்ச்சி" – என்கிறார் லோரன்



# முதல் முறையாக பிக்காசோவின் மேலும் 3 ஓவியங்கள் காட்சிக்கு

ஓவியர் பிக்காசோவால் வரையப்பட்ட மேலும் 3 ஓவியங்கள் முதல் முறையாக இணைக்கப்பட்டு பாரிஸில் உள்ள பிக்காசோ அருங்காட்சியகத்தில் காட்சிக்கு வைக்கப்பட உள்ளன.

ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த புகழ்பெற்ற ஓவியரான பாப்லோ பிகாசோ, 1932இல் வரைந்த ஓவியங்களான, நூட், கிரீன் லீவ்ஸ் மற்றும் பஸ்ட், நூட் இன் ப்ளக் ஆர்ம்சார் மற்றும் த மிரர் ஆகிய மூன்று ஓவியங்கள் மிகவும் புகழ் பெற்றவையாகும். இவை மூன்றும் அவரது காதலியைப் பிரதிபலிக்கும் வகையில் வரையப்பட்டவை ஆகும்.

இந்த மூன்று ஓவியங்களும் இதுவரை ஒரே நேரத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டதில்லை. முதல் முறையாக பாரிஸில் உள்ள பிகாசோ அருங்காட்சியகத்தில் அவை காட்சிக்காக வைக்கப்பட உள்ளன. இது பற்றிய அறிவிப்பை லண்டனில் உள்ள புகழ்பெற்ற நவீன அருங்காட்சியகமான டேட் மொடர்ன் அறிவித்துள்ளது.

அதன்படி, பிக்காசோவின் இந்த மூன்று ஓவியங்களும் வரும் ஒக்ரோபர் 10ஆம் திகதி முதல் பெப்ரவரி 11ஆம் திகதி வரை பாரிஸில் உள்ள பிக்காசோ அருங்காட்சியகத்தில் சேர்த்து வைக்கப்படும். அடுத்த ஆண்டு மார்ச் 8 முதல் செப்ரெம்பர் 9ஆம் திகதி வரை லண்டன் டேட் மொடர்ன் அருங்காட்சியகத்தில் அவை வைக்கப்பட உள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.



# புதுமையான விளம்பரம்!



ஸ்பெயின் நாட்டில் வாலென்சியா நகரில் வசிக்கும் பெர்னாண்டோ அபெலெனாஸ் குழாய் சீர் செய்பவராக இருந்தார். தற்போது அறைகலன்கள் செய்யக்கூடியவராக மாறிவிட்டார். தன்னுடைய தொழிலை விளம்பரப்படுத்துவதற்குப் புதுமையான உத்தியைக் கடைபிடித்திருக்கிறார். நகரின் பரபரப்பான ஒரு பாலத்துக்கு அடியில், தூணின் மீது தன்னுடைய அலுவலகத்தை யாருக்கும் தெரியாமல் அமைத்திருக்கிறார். இந்த அறையில் ஒருவர் தங்கிக்கொள்ளலாம். மேசை, நாற்காலியை விரித்து அலுவலக வேலைகளைச் செய்யலாம். மேசையைப் படுக்கையாக மாற்றிக்கொள்ளலாம். விளக்கு வசதியும் செய்யப்பட்டிருக்கிறது. இந்த வீட்டில் ஒரே குறை பாலத்தில் செல்லும் வாகனங்களின் இரைச்சல். அதற்கு காதுகளில் பஞ்சு வைத்துவிட்டால் போதும்.

"சிறிய இடத்தில் கூட வீடு, அலுவலகங்களை கட்டலாம் என்பதற்காக இதை உருவாக்கினேன். இந்த வீட்டை புகைப்படங்களாகவும் வீடியோவாகவும் எடுத்துவிட்டேன். அதை வைத்து விளம்பரம் செய்துகொள்வேன். அரசாங்க அதிகாரிகள் விரைவில் இந்த இடத்தைக் கண்டுபிடித்து, எல்லாவற்றையும் அகற்றி விடுவார்கள்." – என்கிறார் பெர்னாண்டோ.

# கோப்பியில் செல்லப் பிராணிகளின் படங்கள்!




தைவானில் உள்ள கஃபே மை கோப்பி மையத்தில் விலங்குகளின் உருவங்களை, கோப்பி நுரையில் உருவாக்கித் தருகிறார்கள். விலங்குகள் மீது அளவற்ற அன்பு வைத்திருப்பவர்களுக்கு பால், சொக்லெட் நுரையில் அழகான செல்லப்பிராணிகளை உருவாக்கித் தருகிறார்கள். செல்லப் பிராணிகளின் படங்களைக் கொடுத்தால், அதே போன்ற உருவத்தை கோப்பியில் கொண்டுவந்துவிடுவோம். "அடிப்படை விடயங்களை என் ஊழியர்கள் செய்வார்கள். நுரை மூலம் உருவத்தை நான் கொண்டுவருவேன். இந்த கோப்பிகளுக்கு வரவேற்பு அதிகம்" நிறுவன உரிமையாளர் என்கிறார் சாங்குயீ ஃபாங்.




# ஆஸ்திரேலியர்களை வெகுவாகக் கவர்ந்த

# ஈழமங்கை தர்ஜினி

உலகின் அதிக உயரமான வலைப் பந்து வீராங்கனை தர்ஜினி சிவலிங்கத்தின் அசாத்தியமான 208 சென்ரி மீற்றர் உயரம் மற்றும் அபாரமான ஷூட்டிங்கினால் புனித அல்பான்ஸ் அணி ஆஸ்திரேலியாவின் GFL தொடரின் மாபெரும் இறுதிப் போட்டியை நெருங்கியுள்ளது.

வலைப்பந்து அரங்கில் கோல் ஷூட்டரான தர்ஜினி சிவலிங்கம் கூட்டமொன்றுக்கு மத்தியில் நிற்க எந்தச் சிரமத்திற்கும் முகம் கொடுக்க மாட்டார்.

அது தனது சொந்த ஊரான வட இலங்கையின் யாழ்ப்பாணம் அல்லது சுப்பர்செயின்ட்ஸ் வலைப் பந்து அரங்காக இருந்தாலும் சரியே. 37 வயதான அந்த வீராங்கனை பொதுவாக எப்போதும் அனைவரது அவதானத்துக்கும் உள்ளாவார். அவரது 208 சென்ரி மீற்றர் உயரத்தால் அனைவரது கவனத்தையும் கவர்வது இயற்கையானதாகும்.

இவ்வாறான தவிர்க்க முடியாத அவதானிப்புகள் அவருக்கு பெரும் பாதகமாகவே இருக்கும். அது ஒரு வித்தியாசமான உணர்வையே ஏற்படுத்தும் என்பதை அவர்கள் புரிந்து கொள்வதில்லை.

தனது உயரம் காரணமாக தர்ஜினி ஒரு சிறுமியாக இருந்த காலத்திலேயே தேவையற்ற அவதானிப்புகளால் அதிகம் அசௌகரியங்களுக்கு முகம்கொடுத்திருக்கிறார்.

எனினும், அவைகளைத் தாண்டி அவர் இலங்கை தேசிய அணியிலும் இந்த ஆண்டு GFNL ரசிகர்களின் விருப்பத்திற்குரிய வீராங்கனையாகவும் விக்டோரியா வலைப்பந்து லீக்கின் சிட்டி வெஸ்ட் பெல்கன்ஸ் அணியிலும் வெற்றிகளைக் கண்டு வருகிறார்.

ஆஸ்திரேலியாவில் வலைப்பந்து போட்டிகளில் விளையாடியது தனது கண்களை திறந்த அனுபவம் என்று தர்ஜினி குறிப்பிட்டுள்ளார். சொந்த நாட்டை விடவும் மக்கள் தன்னை ஆதரிக்கின்றமையைக் காணமுடிந்தது என அவர் குறிப்பிடுகிறார்.

எனது உயரத்தை நான் விரும்பவில்லை. (அதற்காக) நான் கவலை அடைந்தேன் என்று அவர் கூறுகிறார்.இலங்கையில் நான் சிறு வயதாக இருக்கும்போது எல்லோரும் என்னைப் பார்த்து சிரிப்பார்கள். எனது உயரம் பெரிய பிரச்சினையாக இருந்தது. எனது பெற்றோரும் அதிக அழுத்தத்திற்கு முகம்கொடுத்தார்கள்.

இந்த உயரத்தை விரும்புவதாக ஆஸ்திரேலிய மக்கள் என்னிடத்தில் கூறினார்கள். எனது உயரம் ஆஸ்திரேலியாவில் அதிகம் ஏற்கப்பட்டது. வலைப்பந்து அரங்கில் இது ஓர் ஆயுதமாக இருக்கிறது. இதனைக் கொண்டு அணிக்கு வேகமாக புள்ளிகளைப் பெற்றுக் கொடுக்க முடியும் என்று அவர் குறிப்பிட்டார்.

யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத் தொடரின் சம்பியனாக ஆவரங்கால் மத்தி2017ஆம் ஆண்டில் புனித அல்பான்ஸூக்கு ஆடுகளத்தில் தர்ஜினியின் உயரம் அதிர்ஷ்டத்தை தேடித்தந்தது என்பதில் சந்தேகம் இல்லை. சுப்பர்செயின்ட்ஸ் கடந்த பருவத்தில் ஐந்து போட்டிகளில் வென்று ஒன்பதாவது இடத்தைப் பிடித்தபோதும் இம்முறை தனது அணியில் நட்சத்திர ஷூட்டர் மற்றும் உலகின் அதிக உயரமான சர்வதேச வலைப்பந்து வீராங்கனையைப் பெற்றிருப்பதால் அந்த அணி பூர்வாங்க இறுதிப் போட்டி ஒன்றில் தொடர்ச்சியாக இறுதிப் போட்டிக்கு முன்னேறும் சவுத் பர்வோன் அணியை எதிர்கொள்கிறது.

## மீண்டும் தாய் நாட்டுக்கு திரும்புகிறார்

பெரும்பாலான தற்காப்பு வீராங்கனைகளை விடவும் அனுகூலம் ஒன்றைப் பெற்றிருந்தபோதும் அதற்காக அவரது திறமையைக் குறைத்து மதிப்பிட முடியாது. இலங்கையில் அவர் பந்தை வலைக்குள் செலுத்த தவறினால் அவரது பயிற்சியாளர் தண்டனையாக 1,000 தடவைகள் பந்தை வலைக்குள் போடும்படி பயிற்சி அளிப்பார். அதனால் தவறு விடாமல் அவர் விரைவாக கற்றுக் கொள்வார்.

புனித அல்பான்ஸ் அணியில் இணைந்தமை தொடக்கம் அந்த அணியில் இருப்பவர்கள் தமக்கு செய்தது அவர்களுக்கு சிறிய விடயமாக இருந்தது என்று அவர் குறிப்பிடுகிறார். அவர் அங்கு கழித்த ஐந்து மாதங்களும் அந்த கழகம் தமக்கு ஒரு புதையலாக இருந்ததாகக் குறிப்பிடுகிறார்.

இந்த ஆண்டு GFL தொடரில் புனித அல்பான்ஸ் அணியில் நான் முழுமையாக விருப்பத்துடன் விளையாடினேன் என்றார். நான் அதிக மகிழ்ச்சியுடன் இருக்கிறேன். ஆஸ்திரேலிய மக்களின் நகைச்சுவை உணர்வு மற்றும் நட்பு அபாரமானது.

புனித அல்பான்ஸ் மக்களும் அதிக விருந்தோம்பல் மற்றும் ஆதரவு தந்தார்கள். ஆஸ்திரேலிய கால நிலையில் அதிக குளிரை சமாளிக்க எனக்கு நீண்ட காற்சட்டைகளையும் தந்தார்கள்.


முன்னாள் ஆஸ்திரேலிய வீராங்கனை நிகோல் ரிச்சட்சன் மற்றும் அழகான பெண்ணான முகாமை தலைவி மெகான் டீன் ஆகியோரின் கீழ் விளையாடுவதை நான் விரும்புகிறேன்.

வீராங்கனைகள் அதிக உதவி மனப்பான்மை கொண்டவர்களாகவும் நட்பு பாராட்டுபவர்களாகவும் இருக்கின்றனர். இவ்வாறான ஆதரவு சூழல் எனது ஆட்டத்திறமையை மேம்படுத்த உதவியதாக உணர்கிறேன். கீலொங் (நகர்) அற்புதமானது. இங்கு டி கிரண்டி விளையாட்டு விற்பனை கூடத்தில் எனக்கு பொருத்தமான பெண்களின் 17 அளவு பாதணிகளைக் கூட பெறமுடியுமாக உள்ளது என்று தர்ஜினி சிவலிங்கம் குறிப்பிட்டார்.

இலங்கையில் அரிதாக இருக்கும் அதிகம் ஒருங்கிணைக்கப்பட்ட போட்டித் தொடர் ஒன்றில் விளையாடுவது அதிக சவாலானது என்று எல்லோராலும் அன்பாக 'ஜெனி' என்று அழைக்கப்படும் அவர் குறிப்பிட்டார். எனினும் இந்தத் தொடர் காரணமாக குறுகிய காலத்திற்குள் தனது உடல் தகுதி மற்றும் பலம் அதிகரித்தது எனக் குறிப்பிட்டார்.

(18 ஆம் பக்கம் பார்க்க... )



## வத்திக்கான் வானொலி முன்னாள் இயக்குநரின் 100 ஆவது பிறந்தநாள்

வத்திக்கான் வானொலியின் முன்னாள் இயக்குநர் அந்தோனியோ அவர்களின் 100 ஆவது பிறந்தநாளுக்கு வாழ்த்துச் செய்தியை அனுப்பியுள்ளார் திருத்தந்தை பிரான்ஸிஸ். திருத்தந்தையர் 12 ஆம் பயஸ் –23 ஆம் ஜான் மற்றும் 6ஆம் போல் ஆகியோரின் காலத்தில் அவர் பணியாற்றினார். உரோம் நகரில் உள்ள கனிசியுஸ் இயேசு சபை இல்லத்தில் இவர் பிறந்த நாளைக் கொண்டாடினார்.

காலைக்கதிர் Kalaikkathir
கிறிஸ்தவ செய்தி இதழ் TCNL
உண்மையை எடுத்துரைப்பதே என் பணி - யோவா:18:37
ஆசிரியர் : அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை - ஊடக விரிவுரையாளர்.

## ஆள்வோருக்காக செபிக்க திருத்தந்தை அழைப்பு

ஆட்சியாளர்கள் தவறு செய்வோராக இருந்தாலும் அவர்களுக்கு செபிக்க கிறிஸ்தவர்கள் முன் வரவேண்டும். ஆள்பவர் ஒவ்வொருவரும் சாலமோனைப்போல் நல்ல நிர்வாகத்திற்குரிய ஞானத்தை இறைவனிடம் மன்றாடவேண்டும். ஆள்வோர் அமைதியில் வாழும்போதுதான் குடிமக்களும் அமைதியுடன் வாழமுடியும். ஆள்வோர் நல்லமுறையில் செயற்படக் குடிமக்களும், குடிமக்களை மனச்சான்றுடன் ஆளத் தேவையான வரமருள வேண்டுமென ஆள்வோரும் செபிக்க வேண்டியமை அவசியம் என்றார் திருத்தந்தை.

# நெதர்லாந்தில் லூர்து அன்னையின் திருயாத்திரையில் இளையோர் அதிகம்

### நிகழ்வில் பங்குபற்றிய யாழ்.குரு முதல்வர் பெருமிதம்



நெதர்லாந்து புனித சிறிய லூர்து அன்னை ஆலய பத்தாவது ஆண்டு (2006 2017) நிறைவு விழாவும் நெதர்லாந்து தமிழ் கத்தோலிக்க ஆன்மீக பணியக 25 ஆவது ஆண்டு (1993 - 2017) நிறைவும் யாழ்.மறைமாவட்ட குருமுதல்வர் கலாநிதி பி.ஜே. ஜெபரட்ணம் அடிகளார் தலைமையில் நடைபெற்றன.


மேற்படி விழாவில் பற்கேற்ற யாழ்.மறைமாவட்ட குருமுதல்வர் கலாநிதி பி.ஜே.ஜெபரட்ணம் அடிகளார், 'காலைக்கதிர்' கிறிஸ்தவ செய்தி இதழுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போது, 2017ஆம் ஆண்டு நடைபெற்ற நெதர்லாந்து லூர்து அன்னையின் சிறிய ஆலயத் தமிழர்களின் திருயாத்திரை நெதர்லாந்து நாட்டு ஊடகங்களில் சிறப்பு முக்கியத்துவம் பெற்றிருந்தது. அந்நாட்டு ஊடகங்கள் பல படங்களுடன் செய்திகளையும் கட்டுரைகளையும் வெளியிட்டு மேற்படி தமிழர் விழாவையும் தமிழ் மக்களையும் பெருமைப் படுத்தி இருந்தன.

இலங்கைவாழ் தமிழ் மக்கள் புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் சிதறி வாழ்ந்தாலும், தாம் வாழும் நாடுகளில் தமது ஆழமான விசுவாசத்தையும் பாரம்பரியங்களையும் விட்டு விடாது தொடர்ந்தும் தாய் மொழியில் இறைவழிபாடுகளிலும் யாத்திரைகளிலும் உற்சாகமாகப் பங்கேற்று வருகின்றனர். நெதர்லாந்து லூர்து அன்னையின் சிறிய ஆலயத் தமிழர்களின் திருயாத்திரையில் இளையோர்கள் அதிகம் பங்கேற்றிருப்பது சிறப்பம்சமாகும்.

இலங்கையில் இருந்து புலம் பெயர்ந்து நெதர்லாந்தில் வசிக்கும் கிறிஸ்தவ மக்களும் இந்து மக்களும் மதவேறுபாடுகளை மறந்து அன்போடும் மகிழ்வோடும் இந்த விழாவில் பங்கேற்பது வியப்பளிக்கின்றது.- என்றார்.



## பொது நலனில் அக்கறையுடன் செயற்பட உலகத் தலைவர்களுக்கு திருந்தந்தை அழைப்பு




ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் 72ஆவதுபொதுஅவை(யூ.என்.ஜீ.ஏ 72) நியூயோர்க் நகரிலுள்ள ஐ.நா. தலைமையகத்தில் 2017 செப்ரெம்பர் 12 முதல் 25 வரை- மக்களை மையப்படுத்தல்: நீடித்த நிலையான பூமிக்கோளத்தில் எல்லாருக்கும் அமைதி மற்றும் தரமான வாழ்வை அமைப்பதற்கு முயற்சித்தல் – என்ற தலைப்பில் நடைபெறுகின்ற நிலையில் உலகத் தலைவர்கள் பிரிவினைகள் மற்றும் கருத்தியல் சார்புடைய ஆதாயங்களைப் பின்னுக்குத் தள்ளி முழு மனித சமுதாயத்தின் பொதுவான நலனைத் தேடுமாறு உலகத் தலைவர்களைக் கேட்டுக் கொண்டுள்ளார் திருத்தந்தை பிரான்ஸிஸ். ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் பொது அவையின் முதல் அமர்வு 1946 ஆம் ஆண்டு ஜனவரி பத்தாம்திகதி இலண்டன் மெத்தடிஸ்ட் மையத்தின் அறையில் நடைபெற்றது. இதில் 51 நாடுகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். தற்போது நியூயோர்க் நகரிலுள்ள ஐ.நா. தலைமையகத்தில் நடைபெறும் அவையில் 193 நாடுகள் பங்கேற்கின்றன.

## நெதர்லாந்தில் சிறப்பம்சம் லூர்து அன்னையின் கெபி

### சிறிய ஆலயத்தின் உள்ளேயே



நெதர்லாந்து லிம்பேர்க் மறைமாவட்டத்தில் அமைக்கப்பட்ட லூர்து அன்னையின் சிறிய ஆலயத்தின் உள்ளேயே லூர்து அன்னையின் கெபி அமைக்கப்பட்டுள்ளது என்பது இங்கு சிறப்பு முக்கியத்துவத்துடன் குறிப்பிடப்பட வேண்டியதாகும்.

லூர்து அன்னையின் கெபிகள் ஒருபோதும் ஆலயத்தின் உள்ளே அமைக்கப்படுவதில்லை. ஆனால், இங்கு மட்டும் ஆலயத்தின் உள்ளே மறைவாக லூர்து அன்னையின் கெபி அமைக்கப்பட்டுள்ளது.

பிரான்ஸில் மார்சபியேல் கெபியில் அமைந்துள்ள லூர்து அன்னையின் பதியில் நடப்பது போன்று இங்கும் புதுமைகள் நடைபெறுகின்றன. பிரான்ஸ் லூர்து பதியில் குணமடைந்தவர்கள் தாம் பாவித்த செயற்கைக் கால்கள், கைகள் மற்றும் உடல் அவயவங்களைத் தொங்க விட்டுச் செல்கின்றமையைப்போல் இங்கும் தொங்க விட்டுச் செல்கின்றமையைக் காணக் கூடியதாக இருந்ததாக யாழ்.மறைமாவட்ட குருமுதல்வர் கலாநிதி பி.ஜே.ஜெபரட்ணம் அடிகளார் தெரிவிக்கிறார்.



## உண்மையின் எண்ணங்கள்

உலகிலே இயேசுவின் தாயாரான தேவ அன்னைக்கே அதிக ஆலயங்களும் அதிக யாத்திரைத் தலங்களும் அமைக்கப்பட்டுள்ளன. உலகிலே தேவ அன்னையின் பதிகளுக்கே அதிக யாத்திரைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்தத் தேவ அன்னையின் உலக யாத்திரைத் தலங்களில் முதலிடம் வகிப்பது மெக்சிக்கோ நகர் குவாட்டலூப்பே அன்னையின் பதியாகும். தேவ அன்னையின் உலக யாத்திரைத் தலங்களில் இரண்டாவது இடம் பெறுவது பிரான்ஸில் மார் சபியேல் கெபியில் அமைந்துள்ள லூர்து அன்னையின் பதியாகும். இலங்கைவாழ் தமிழ் மக்களையும் சிங்கள மக்களையும் இன, மத பேதங்களைக் கடந்து தன் பாதத்தில் ஒன்றுசேர்க்கின்ற மருதமடு அன்னை இலங்கை மண்ணில் எல்லா மக்களும் சமத்துவத்துடனும் சகோதரத்துவத்துடனும் வாழ வழி சமைப்பாராக. இலங்கை வாழ் தமிழ், சிங்கள மக்களை இன மத பேதமின்றித் தன் பாதத்தில் ஒன்று சேர்க்கின்ற மருதமடு அன்னை தம் பக்தர்கள் அனைவரையும் அவர்கள் உலகின் எப்பகுதியில் இருந்தாலும் பாதுகாத்து வழி நடத்துவாராக.

## புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் மத்தியில் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகங்கள்

இலங்கையில் இருந்து தமிழ் மக்கள் புலம்பெயர்ந்து ஜரோப்பிய நாடுகளிலும் கனடா அமெரிக்காவிலும் வாழத் தொடங்கிய போது தமிழ் கத்தோலிக்க மக்களின் ஆன்மீகத் தேவைகளைக் கவனிக்கத் தமிழ் மறைமாவட்ட ஆயர்கள் ஆங்காங்கு தமிழ் கத்தோலிக்க ஆன்மீக பணியகங்களை உருவாக்கி அவற்றுக்கு ஆன்மீக இயக்குநர்களாகக் குருக்களை இங்கிருந்து அனுப்பத் தொடங்கினார்கள். யாழ்ப்பாண மறைமாவட்டம் – மன்னார் மறை மாவட்டம் – மட்டக்களப்பு மறைமாவட்டம் – அமல மரித்தியாகிகள் சபை என இவர்கள் தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகங்களைப் பொறுப்பெடுத்தனர். இவ்வாறு இவர்களின் பணியில் இன்று லண்டன் , ஜேர்மனி, பிரான்ஸ், சுவிற்ஸர்லாந்து , நெதர்லாந்து, டென்மார்க், இத்தாலி, நோர்வே, கனடா ஆகிய நாடுகளில் தமிழ்க் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகங்கள் சிறப்புற இயங்குகின்றன.

# ஊர்வம்பு

■ குருவியார்
thamizhkaalaikathir@gmail.

# தம்மைப் பெண்களிடம் நிரூபிக்க ஆண்களுக்கு ஒரு சந்தர்ப்பம்!

சந்தியடியில் பழைய பத்திரிகையால் செய்யப்பட்ட கச்சான் பையொன்றைக் கூர்ந்து வாசித்துக் கொண்டிருந்தாள் செல்லாச்சி.

“அப்படி என்னத்தை வலு கவனமாகப் பார்க்கிறாய் செல்லாச்சி?” என்று கேட்டார் ஏரம்பர்.

அதற்குச் செல்லாச்சியை முந்திக் கொண்டு பதில் சொன்ன ஜீவன், “இப்பதான் உள்ளூராட்சியிலையும் மாகாண சபையிலும் பெண்களுக்கு இட ஒதுக்கீடா மெல்லே. அதுதான் எப்பிடியும் அடுத்த தேர்தலிலை நிற்கிறதெண்டு செல்லாச்சி கடுமையாகப் படிக்கிறா” என்று நக்கலடித்தான்.

“அதுக்கென்னத்துக்குப் படிப்பு?” என்று கேட்டு விட்டு கச்சான் வியாபாரத்தைக் கவனித்தாள் செல்லாச்சி.

“இலங்கையின் சனத்தொகையில் 52 சதவீதம் பேர் பெண்கள். வாக்காளர்களிலும் பெண்களே அதிகமாம். ஆனால், அரசியலில் பெண்களின் பங்களிப்பு போதிய அளவு இல்லையாம். அதற்காகத்தான் உள்ளூராட்சி சபைகளில் பெண்களுக்கு 25 சதவீத இட ஒதுக்கீடு கிடைக்கக் கூடியதாகச் சட்டம் கிட்டடியிலை கொண்டு வந்தவை. அதாவது ஒரு கட்சியின் வேட்பாளர் பட்டியலில் 25 வீதமானவர்கள் பெண்களாக இருக்க வேண்டும். மாகாண சபைகளிலும் அதுமாதிரி, பெண்களுக்கு இட ஒதுக்கீடு கொண்டு வர ஏற்பாடு நடக்குது”. – என்று தற்போதைய நிலையை விளக்கினான் பேப்பர்தம்பி.

“கதிரையைப் பிடிக்கிறதுக்கு வேண்டுமென்றால் இவை ஒதுக்கீடு கொண்டு வரட்டும். ஆனால், போராளிகளாகவும் சரி, இப்ப நடக்கிற போராட்டங்களிலும் சரி பொம்பிளையள் சரிக்குச் சரி நின்று போராடுகிறம்”. – என்று பெருமிதமாகச் சொன்னாள் செல்லாச்சி.

“ஆணோ பெண்ணோ அவரவர் செயற்பாட்டாலேதான் அரசியலில் பிரகாசிக்க வேணும். அதை விட்டிட்டு இப்பிடி ஒதுக்கீடு கொடுத்தெல்லாம் அவையை வளர்க்க ஏலுமோ?” – என்று பழைமை கதைத்தார் ஏரம்பர்.

“பொத்தாம்பொதுவாக அப்பிடிச் சொல்லி விட முடியாது” என்று மறுத்த பேப்பர்தம்பி, “1974 ஆம் ஆண்டு இந்தியாவில் பெண்களின் நிலை குறித்து ஆய்வு செய்த நாடாளுமன்ற நிலைக் குழு, கிராமப்புறப் பெண்களுக்கான வளர்ச்சி மற்றும் மேம்பாட்டுக்கான வழிமுறையாக, உள்ளூராட்சித் தேர்தலில் பெண்களுக்கான இட ஒதுக்கீடு தேவை என்று சொல்லியிருந்தது. அதற்குப் பிறகுதான் அங்கே இட ஒதுக்கீடு கொண்டு வரப்பட்டது”. – என்று விளக்கினான்.

இதற்கு ரூபன், “இங்கிலாந்திலை ஆணுக்குச் சமமாகப் பெண்ணுக்கும் வாக்குரிமை வழங்கப்பட்ட மூன்றாண்டுகளிலேயே – இலங்கையில் 1931 ஆம் ஆண்டிலேயே – பெண்களுக்கான வாக்குரிமை வழங்கப்பட்டது. உலகத்திலை முதன்முறையாகப் பெண் ஒருவரைப் பிரதமராக்கியதும் நாங்கள்தான். ஆனால், எங்கடை நாடாளுமன்றத்திலை ஆறு சதவீதம்தான் பெண்களின் பங்களிப்பு இருக்கு. மாகாண சபைகளிலை நான்கு சதவீதம்தானாம். என்னதான் பெண் போராளிகளைப் பற்றிக் கதைச்சாலும், வடக்கு மாகாண சபையின் 38 பேரிலை ஒரேஒருவர்தானே பெண். ஆனால் நோர்வே, டென்மார்க் போன்ற நாடுகளில் 50 வீதத்துக்கு மேல் அரசியலில் பெண்களின் பங்களிப்பு இருக்கு. ஆபிரிக்க நாடான ருவாண்டாவில் 48 சதவீதம். இஸ்லாமிய தேசமான பாகிஸ்தானில் கூட அரசியலில் பெண்களின் பங்களிப்பு கிட்டத்தட்ட 21 சதவீதமாக இருக்கு. இலங்கையிலை அரசியலில் பெண்களின் பங்களிப்பு மிகக் குறைவாகத்தானே இருக்கு. அதை அதிகரிக்க பெண்களுக்கான இட ஒதுக்கீடு தேவைதான்” என்று சொன்னான்.

அதுவரை மற்றவர்கள் கதைப்பதைக் கேட்டுக்கொண்டிருந்த வாத்தியார், தொண்டையைச் செருமிவிட்டுக் கதைக்கத் தொடங்கினார்.

“அரசியலில் பெண்களின் பங்களிப்பு அதிகரிக்கக் கொண்டுவரப்படும் இட ஒதுக்கீடு, போதிய பயனைத் தருமா என்று சந்தேகமாகத்தான் இருக்கு. ஏனென்றால் இங்கு ‘நெபொடிசம்’(Nepotism) என்று ஆங்கிலத்தில் சொல்லப்படும் ‘தகுதியால் இல்லாமல், உறவுமுறை காரணமாக



உயர்பதவிகளைப் பிடிப்பது’ சாதாரணமாகிவிட்டது. அதோடை அரசியலில் ஆணாதிக்கம் அதிகம். கட்சித் தலைமைதான் வேட்பாளரைத் தீர்மானிக்கிறது. கட்சியில் தொண்டராக இருந்து தனது செயற்றிறனால், தியாகத்தால் அடையும் பதவியாக வேட்பாளர் தெரிவு பெரும்பாலும் இருப்பதில்லை. இதனால் என்னதான் பெண்கள் அரசியலில் பங்களிப்புச் செய்தாலும், ஆண்தலைமையின் குரலாகவே இருக்க வேண்டியிருக்கே தவிர, பெண் தலைமைத்துவமாக இருப்பதில்லை” என்று சொல்லி மூச்சு வாங்கினார்.

அப்போது கைபேசியிலிருந்து தலை நிமிர்ந்த ஜீவன், “அதேநேரம் எங்கள் பெண்களிடம் அரசியல் ஆர்வம் மிகவும் குறைவாகத்தானே இருக்கு. படித்த இளம் பெண்களிடம் கூட அரசியல் விழிப்புணர்வு போதுமான அளவு இல்லை என்றுதானே சொல்லப்படுகிறது” – என்றான்.

“அதற்காக அப்பிடியே விட முடியாது தானே. தேர்தல்களில் பெண்களுக்கான இட ஒதுக்கீடு சட்டரீதியாக உறுதிப்படுத்தப்படுவது, அவர்களின் அரசியல் ஈடுபாட்டுக்கும், தேர்தலில் போட்டியிட வேண்டும் என்ற ஆர்வத்திற்கும் ஒரு வகையில் ஊக்குவிப்பாக அமையும் என்றுதான் பலரும் கருதுகிறார்கள்” என்றான் ரூபன்.

ஆனாலும், அதிலை ஒரு சிக்கலும் இருக்குஎன்று பீடிகை போட்ட பேப்பர் தம்பி, “இந்தியாவிலை பெண்களுக்கான இட ஒதுக்கீட்டை எதிர்ப்பவர்கள் சொல்லும் பிரதான குற்றச்சாட்டு ஆண் அரசியல்வாதிகள் தமது வீட்டில் உள்ள மனைவி, மகள், மருமகள் என்று தமது உறவுகளையே வேட்பாளராக்கிப் பதவிகளைப் பிடிக்க வைத்துவிட்டு, பிறகு அவர்களைப் பொம்மைகளாக்கி, அவர்களுக்குப் பதிலாகத் தாங்களே எல்லாவற்றையும் நடத்துகிறார்கள்.” என்பதுதான் என்றான்.

அதற்கு உடனேயே பதில் சொன்ன ரூபன், “இந்த நிலை இங்கு வராமல் நாங்கள்தான் விழிப்பாகப் பார்க்க வேண்டும். எந்த அரசியல்வாதியாவது போராட்டக்களம் காணாமல், வீட்டில் சமைத்து விட்டு தொடர் நாடகம் பார்த்துக்கொண்டிருந்த தனது மனைவி, மகள்களை வேட்பாளராக்கினால் அவர்களைத் தோற்கடிப்பது என்று முடிவெடுக்க வேண்டும்” – என்றான்.

அதுமட்டுமில்லை என்று சொல்லி விட்டு, எல்லோரையும் பார்த்த வாத்தியார், “பெண்களுக்கான இட ஒதுக்கீடு என்பது உண்மையில் அடித்தட்டுப் பெண்களின் வளர்ச்சிக்காகத்தான் கொண்டுவரப்படுகிறது. நாங்கள் யுத்தத்தால் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டனாங்கள். அதிலிருந்து மீள, அந்தக் கஷ்ட, நஷ்டங்கள் தெரிந்தவர்கள் எமது பிரதிநிதிகளாக வேணும். அதனால் பெண்களுக்கான இட ஒதுக்கீட்டைப் பயன்படுத்தி, கிராமப் புறத்திலை இருக்கிற அடித்தட்டுப் பெண்கள் மக்கள் பிரதிநிதிகளாக வேணும். அதை விட்டிட்டு, முக அலங்காரத்துக்கு அதிகநேரம் செலவழிக்கிற, மேல்தட்டுப் பெண்கள் பிரதிநிதிகளாகி எந்தப் பிரயோசனமும் கிடையாது. குறிப்பாக சாதாரண குடும்பங்களில் இருந்து படித்த இளம் யுவதிகள், இனியும் கட்டுப்பெட்டித்தனங்களில் மூழ்கியிருக்காமல், உள்ளூராட்சி அளவிலாவது அரசியலில் நுழைய வேணும்.” – என்று தீர்க்கமாகச் சொன்னார்.

“தமிழகத்திலை வளர்மதி என்று ஒரு பொம்பிளைப்பிள்ளை எதற்கும் அஞ்சாமல் மக்களுக்காகப் போராடுறா. என்ரை மகள் மங்கை சொன்னவள். அங்கையாவது ஒன்றிரண்டு பேர்தான் உதாரணத்துக்குக் காட்டுவினம். இங்கே எத்தினையாயிரம் பேரைக் காட்டலாம். அவர்களை மாதிரி உயிரைக் கொடுக்கத் துணிவில்லாட்டிலும், இந்த மண்ணுக்காக, சுத்தியிருக்கிற தங்கடை சனத்துக்காக அரசியலில் உழைப்பையாவது கொடுக்க வரலாம் தானே” – என்று புத்துணர்வுடன் சொன்னாள் செல்லாச்சி.

அப்போது ஏரம்பர், “எல்லோரும் சொல்லுறதைக் கேட்க நல்லாத்தான் இருக்கு. ஆனால், இந்தக் காலத்திலை தேர்தலிலை வெல்லப் பல காரணிகள் இருக்கு. அதிலை பணபலம் மிகவும் முக்கியமாக இருக்கு. இதை ஒருத்தரும் மறுக்க மாட்டியளென்று நினைக்கிறன். இந்த நிலையிலை சாதாரண பெண்களால் எப்படித் தேர்தலில் வெல்ல முடியும்?” – என்று கேட்டு விட்டு மற்றவர்களைப் பார்வையால் துளாவினார்.

“நீங்கள் சொல்வதில் அர்த்தம் இருக்குத் தான்”. – என்ற வாத்தியார், “நாடாளுமன்றத் தேர்தலில் வேண்டுமானால் பணம் முடிவெடுக்கிற சக்திகளில் ஒன்றாக இருக்கலாம். ஏனென்றால், நாடாளுமன்றத் தொகுதி பரந்துபட்டது. ஒரு வேட்பாளரின் உள்ளும் புறமும் அனைவருக்கும் தெரிருக்காது. அதனால் அவரைப் பற்றிய பிரசார உத்திகள் அவரது வெற்றியில் கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தும். மாகாண சபைத் தேர்தலிலும் அப்படித்தான். காசை இறைச்சு தன்னை வள்ளல் என்றும் மீட்பர் என்றும் புளுகியடிச்ச வென்றவர்களை இலங்கை முழுவதிலும் காணலாம்”. – என்று சொல்லி விட்டு கண்ணாடிப் போத்தலில் எடுத்து வந்த தண்ணீரை அருந்தினார்.

“அதுகுத்தான் முன்னரே யார் எது தந்தாலும் வாங்குங்கோ. ஏனென்றால் அவை எல்லாமே மக்களின் பணம். எல்லாத்தையும் வாங்கிப்போட்டு, வாக்கை மட்டும் மக்களுக்காக உழைப்பவர்களுக்குப் போடுங்கோ’ என்று விடுதலைப் புலிகள் சொன்னவைதானே” என்றாள் செல்லாச்சி.

அதைக் கேட்டுப் புன்னகைத்த வாத்தியார், “உள்ளூராட்சித் தேர்தலில் பிரசாரத்தால் மக்களை ஏமாத்துவது கடினம் என்று நினைக்கிறன். ஏனென்றால் ஊருக்குள்ளை எவன் யோக்கியன்; எவன் அயோக்கியன் என்பது தெரிந்திருக்கும். அவனைப் பற்றி மட்டுமல்லாமல் பரம்பரையையே தெரிந்திருக்கும். அதனால் சனம் தரம் பார்த்துத் தமது பிரதிநிதிகளைத் தெரிவுசெய்ய அதிகம் வாய்ப்பிருக்கு. இந்தநிலையில், உள்ளூராட்சித் தேர்தலில் கட்சிக்கு முக்கியத்துவம் தராமல், வேட்பாளரின் உழைப்பையும் நேர்மையையும் பார்த்து வாக்களித்தால் ஈழத் தமிழரின் அரசியல் இனியாவது சரியான திசையில் போகும்”. – என்றார்.

“தரமான மக்கள் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டால்தான், உள்ளூராட்சி மன்றக் கூட்டங்களில் தகாத வார்த்தைகள் ஒலிக்காமல் இருக்கும். சபைகளும் நாகரிகமாகவும் கண்ணியமாகவும் நடக்கும்” – என்றான் ரூபன்.

“இப்படிப் பெண்களுக்குத் தனியாக இட ஒதுக்கீடு செய்வது அதை விட அதிகமான இடங்களில் பெண்கள் போட்டியிடுவதைத் தடுப்பதாக ஆகாதா?” என்று சந்தேகத்துடன் கேட்டான் ஜீவன்.

அதற்குப் பேப்பர்தம்பி, “பேருந்துகளில் பெண்களுக்கு ஆசனம் ஒதுக்கப்பட்டிருக்கும். மற்ற ஆசனங்கள் எல்லாம் ஆண்களுக்கானவை என்று அர்த்தம் இல்லை. அவை பொது ஆசனங்கள். அவற்றில் பெண்களும் அமரலாம். அது போலத்தான். ஒதுக்கப்பட்ட இடங்களில் பெண்கள் போட்டியிடுவார்கள். அதேசமயம் அரசியலில் பெண்களின் பங்களிப்பு அதிகரித்து தமது திறமையால் பொது இடத்திலும் பெண்கள் போட்டியிடும் நிலைக்கு முன்னேறலாம்” என்று சந்தேகத்தைத் தீர்த்தான்.

“அரசு என்னதான் சட்டம் போட்டாலும், பெண்களுக்கான இட ஒதுக்கீடு வெற்றி பெறுவது ஆண்களின் கையில்தான் இருக்கிறது” – என்றார் வாத்தியார்.

மற்றவர்கள் புரியாமல் பார்த்தனர்.

“தன்னம்பிக்கை இருக்கிற ஆண், எப்போதும் பெண்ணை மதிப்பதோடு, அவள் உயர்வதற்கும் உதவுவான். அங்கையற்கண்ணிக்கும் கிருசாந்திக்கும், அன்னையர் தினத்திற்கும் முகப் புத்தகத்தில் பதிவு போடும் இளைஞர்கள், தாங்கள் உண்மையான ஆண்கள் என்பதை நிரூபிக்க, இப்ப சந்தர்ப்பம் வந்திருக்கு. அடுத்த தேர்தல் பிரசாரத்தில் எவனாவது பெண் வேட்பாளரை, பெண்ணென்பதற்காகத் தரக்குறைவாகக் கதைத்தாலோ, அவரையோ அல்லது குடும்பத்தையோ இழிவுபடுத்தினாலோ இளைஞர்கள் தமது எதிர்ப்பை – கட்சி பேதம்பாராது – உடனடியாகத் தெரிவிக்க வேணும். அப்படிப்பட்ட வேட்பாளர் எந்தப் பெரிய கொம்பனென்றாலும் அவனுக்கு வாக்களிக்கக்கூடாது. இந்த முடிவை நாங்கள் உறுதியாகக் கடைப்பிடித்தால் எமது சமூகம் சிறக்கும்” – என்று தீர்க்கமாகக் கூறிவிட்டு நடக்கத் தொடங்கினார் வாத்தியார்.

மற்றவர்களும் அவரைத் தொடர்ந்தனர். கச்சான் கடையைக் கட்டத் தொடங்கினாள் செல்லாச்சி. சந்தியடி அமைதியானது.

காலைக்கதிர் Kalaikkathir



# பறவைகள் பலவிதம்...



(13 ஆம் பக்கத் தொடர்ச்சி..)

முழுமையாக விவரங்கள் தெரியாவிட்டாலும், விலங்குகளாலும், மனிதராலும் அழிவுக்கு உள்ளாக்கப்பட்டதற்கான மிகப் பெரிய அடையாளமாக டோடோ உள்ளது என்று டாக்டர் ஆங்ஸ்ட் கூறியுள்ளார்.

இந்தப் பறவையின் சூழலியல், அந்த நேரத்தில் மொரீஷியஸ் தீவின் சூழலியல் ஆகியவை பற்றி நமக்கு தெரியாவிட்டால் டோடோ அழிவிற்கு மனிதர்களால் ஏற்பட்ட பாதிப்பு என்ன என்பது பற்றி அறிவது மிகவும் கடினமாகும் என்று அவர் விளக்கினார்.

இந்தப் பறவைகளின் சூழலியல் மற்றும் மொரீஷியஸ் தீவின் உலகளாவிய இயற்கைச்சூழல் அமைப்பின் புரிந்துகொண்ட பின்னர், மனிதர் அங்கு வந்தடைந்தபோது செய்த தவறுகள் என்ன? இந்தப் பறவைகள் மிக விரைவாக எவ்வாறு அழிந்து போயின என்று கூற முடியும் என்று அவர் தெளிவுபடுத்தியுள்ளார்.

**விலகாத மர்மங்கள்**

லண்டனிலுள்ள இயற்கை வரலாற்று அருங்காட்சியகத்தைச் சேர்ந்தவரும், இந்த ஆய்வின் இணை ஆய்வாளருமான ஜூலியன் ஹூமே, டோடோவை சுற்றி இன்னும் பல மர்மங்கள் சூழ்ந்துள்ளன என்று தெரிவித்துள்ளார்.

எங்களுடைய ஆய்வு, பருவகாலங்களைச் சுட்டிக்காட்டுகிறது. மொரீஷியஸிலுள்ள காலநிலையின் காரணமாக உண்மையிலேயே இத்தகைய பறவைகளின் வளர்ச்சியை அவை பாதித்தன என்பதைக் காட்டுகிறது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த தீவு அடிக்கடி புயல்களால் பேரழிவுக்குள்ளாகும் சூறாவளி காலத்தில், எல்லா பழங்களும், இலைகளும் மரங்களிலிருந்து விழுந்து விடுகின்றன. அச்சமயம் மொரீஷியஸிலுள்ள பாம்புகள் மற்றும் பறவைகளான விலங்கினங்களுக்கு மிகவும் மோசமான காலமாகும்.

புறாகுடும்பத்தோடு தொடர்புடைய டோடோ, மொரீஷியஸில் பரிணமித்தது.இருப்பினும், எலும்பு மாதிரிகள் மிகவும் அரிதாகவே காணப்படுவதால், அவற்றின் பரிணாம வளர்ச்சியை தடங்காண்பது மிகவும் கடினமாக உள்ளது. டோடோ பறவையின் பல எலும்பு மாதிரிகள் ஐரோப்பிய அருங்காட்சியகங்களில் சென்றடைந்தாலும், அவற்றில், பெரும்பாலானவை தொலைந்து விட்டன அல்லது விக்டோரியா காலத்தில் அழிக்கப்பட்டு விட்டன. ★

# ஆஸ்திரேலியர்களை...

(15 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

தர்ஜினி ஆடும் சிட்டி வெஸ்ட் கழகத்தின் உதவி பயிற்சியாளர் ரிச்சட்சன் இந்த ஆண்டு போட்டித் தொடரில் தர்ஜினி ஆட்டத்தை மேம்படுத்துவதில் அதிகம் அவதானம் காட்டிவருகிறார். இதனால் இந்த இருவருக்கும் இடையில் அதிக நெருக்கம் ஏற்பட்டுள்ளது.

டயமன்ட்ஸ் மிட்கோர்ட் கன் கழக முன்னாள் வீராங்கனையும் 2002 பொதுநலவாய போட்டியில் தங்கம் வென்றவருமான ரிச்சட்சன், தனது உற்ற நண்பி ஒருவர் வளர்ச்சிப் பாதையில் செல்கின்றமை குறித்து மகிழ்ச்சியை வெளியிட்டார்.

அவர் ஒரு தனி நபராக வளர்ச்சி பெற்றுள்ளார். இதில் வலைப்பந்து வீராங்கனையாக மாத்திரமன்றி அவரது ஆளுமையும் வெளிப்பட்டுள்ளது. ஆட்டத்தில் அவர் நீண்ட தூரம் வந்துள்ளார். ஆனால் ஆடுகளத்திற்கு வெளியிலும் கூட அவர் வளர்ச்சி பெற்றிருப்பதை என்னால் பார்க்க முடிகிறது என்று ரிச்சட்சன் குறிப்பிட்டார்.

அவர் அதிக நகைச்சுவை உணர்வு கொண்டவர். சிட்டி வெஸ்ட் பெல்கன்ஸ் மற்றும் சென் அல்பான்ஸ் இரண்டுக்கும் மிகப்பெரிய சொத்தாகும். அவரை அடுத்த ஆண்டிலும் வரவழைக்க நாம் எதிர்பார்த்திருக்கிறோம். என்றாலும் அவர் இலங்கை அணியின் மிக முக்கிய வீராங்கனையாக உள்ளார்.

இங்கு ஆஸ்திரேலியாவில் அவர் தொடர்ந்து தனது ஆட்டத்தை மேம்படுத்துவது இலங்கைக்கு மிக நல்லதாக இருக்கும் என்பதே எமது பார்வையாகும். என்றாலும் அவர் நிலையான ஆட்டத்தை கொண்டிருக்கிறார். எனவே எவ்வாறான நிலை ஏற்படும் என்பது பற்றி நாம் பார்த்திருக்கிறோம் என்று ரிச்சட்சன் கூறினார்.



இறுதிப் போட்டியைத் தொடர்ந்து தர்ஜினி சிவலிங்கம் சொந்த நாட்டுக்குத் திரும்புகிறார். தனக்கு வாய்ப்பு கிடைத்தால் அவர் மீண்டும் திரும்பி வந்து தனது திறமையைத் தக்கவைத்துக் கொள்வார் அல்லது மேலும் திறமையை வெளிப்படுத்துவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கை தேசிய அணியுடனான எனது பொறுப்புகளில் மாத்திரமே அது தங்கியுள்ளது. அடுத்த ஆண்டு நாம் ஆசிய கிண்ணத்தை எதிர்கொள்கிறோம். அது உலக சம்பியன்ஸ் கிண்ணத்துக்கான தகுதிகாண் போட்டியாகவும் உள்ளது என்று அவர் கூறினார்.

எனினும், புனித அல்பான்ஸ் மற்றும் சிட்டி வெஸ்ட் பெல்கன்ஸ் அணிகளுக்கு மீண்டும் விளையாடும் வாய்ப்பைபெறுவதைவிரும்புகிறேன். எனது விருப்பமான பயிற்சியாளர்கள் மற்றும் வீராங்கனைகளுடன் இல்லாமல் இருப்பது அதிகம் கடினமாக இருக்கும். அவர்கள் இல்லாதமைபெரும் இழப்பாக இருக்கும் என்றும் கூறினார்.

# வழித்து துடைத்தது...

(12 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

'புயலின் அளவைப் பார்த்துவிட்டு, ஆயிரக்கணக்கான மக்கள் தங்கள் வாழ்வைத் தொலைத்திருப்பார்கள் என்றுதான் எல்லோரும் நினைத்துக்கொண்டிருப்பார்கள். ஆனால், நிஜத்தில் வெகு சிலரே இறந்துபோயிருக்கிறார்கள்' இறந்தவர்களின் குடும்பங்களை நேரில் சந்தித்து இப்படித்தான் ஆறுதல் சொல்லியிருக்கிறார் ட்ரம்ப்.



திகாரப்பூர்வக்குறிப்புகளின்படி, அமெரிக்காவில் மட்டும் முப்பதுக்கும் மேற்பட்டோர் புயலால் இறந்திருக்கிறார்கள். கரீபியன் தீவுகளையும் சேர்த்துக்கொண்டால் எண்ணிக்கை எழுபதைத் தாண்டிவிடும். 2005 ஆம் ஆண்டு ஏற்பட்ட காட்ரீனா புயலில் 1,800 பேர் கொல்லப்பட்டனர் என்பதாலேயே இர்மாவில் இறந்தவர்களை 'வெகு சிலர்' என்று ட்ரம்ப் குறிப்பிட்டிருக்க வேண்டியதில்லை.

அடித்தது என்னவோ ஒரே புயல்தான் என்றாலும், அதன் பாதிப்பிலிருந்து மீண்டுவர ஒவ்வொரு பகுதியும் ஒவ்வொருவிதமான போராட்டத்தைச் சந்திக்க வேண்டியிருக்கும். உதாரணத்துக்கு, ஃப்ளோரிடாவில் ஐந்து லட்சத்துக்கும் அதிகமான வீடுகளில் மின்சாரம் துண்டிக்கப்பட்டுவிட்டது.

ஆனால், புயல் கடந்து சென்ற சில தினங்களில் மெல்ல மெல்ல இணைப்புச் சரி செய்யப்பட்டு விட்டது. ஆனால், பியூரிட்டோ ரிகோவில் இருப்பவர்களுக்கு மின்சார இணைப்புக் கிடைக்க அநேகமாகச் சில மாதங்கள்வரை ஆகலாம். ஃப்ளோரிடா சில தினங்கள் பட்ட துயரங்களை இவர்கள் மாதக்கணக்கில் பட வேண்டியிருக்கும்.

திங்கள் காலை சூரியன் உதித்ததைக் கண்ட பிறகுதான் ஃப்ளோரிடாவுக்கு உயிரே வந்திருக்கிறது. ''தெருக்களில் நடந்தோம். திரும்பும் பக்கமெல்லாம் குப்பை மலை. நீர் பெருக்கெடுத்து ஓடிக் கொண்டிருந்தது. அழிவின் தடங்கள் எல்லா இடங்களிலும் இருக்கின்றன. ஃப்ளோரிடாவிலிருந்து வெளியேறியவர்கள் அனைவரும் திரும்பிவருவதற்குக் காலமாகும். உடைந்த வீடுகளைச் சரிசெய்ய நேரமாகும். நிறைய வேலை இருக்கிறது. ஃப்ளோரிடா அனைத்தையும் கடந்து மேலேறி வரும் என்பது மட்டும் தெரிகிறது. அது போதும்'' என்கிறார்கள் உள்ளூர் வாசிகள்.

இர்மா விடைபெற்றுக்கொண்டு வெளிச்சத்தை அனுப்பிவைத்த தினம் செப்ரெம்பர் 11. அமெரிக்காவால் ஒருபோதும் மறக்க முடியாத தினம்.

அமெரிக்காவை மட்டுமல்ல முழு உலகையே அதிர்ச்சி கொள்ள வைத்த நாளும் 2017 செப்ரெம்பர் 11 ஆம் திகதியே. 16 வருடங்களின் பின்னரும் மறக்க முடியவில்லை அந்த நாளை! ★

# கமலின் பிரவேசம்...

(09 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

மக்கள் செல்வாக்கு என்பது அத்துனை எளிதாக கிடைக்கக் கூடிய ஒன்று அல்ல. சினிமாத் துறையானாலும், அரசியல் களமானாலும், கடின உழைப் பும் திறமையும் இருந்தால் மட்டுமே வெகுஜன ஆதரவை பெற முடியும். திரைத்துறையின் புகழ் மட்டுமே ஒருவருக்கு அரசியல் களத்தில் வெற் றியை பெற்றுத் தந்துவிடாது என்பதற்கு வரலாற்று உதாரணங்கள் உள்ளன.

அரசியலில், தேர்தல் களத்தில் நின்று வென்றுதான் மக்களுக்காக குரல் கொடுக்க வேண்டும் என்பதோ, சமூக நன்மைகளைச் செய்ய வேண்டும் என்பதோ இல்லை. சுதந்திர வேட்கையில் மக்களோடு பேசிய வரலாற்று நாயகர்கள் யாரும் சினிமா புகழ் பெற்றவர்கள் இல்லை, அரசியல் ஆதாயம் தேடியவர்கள் இல்லை.

அப்படி ஒரு தலைவர்களைத்தான் இன்றைய சமூகம் தேடிக்கொண்டிருக்கிறது. யாராவது திடீரென தேவ தூதராக வந்து சமூக நலனை காக்க மாட்டார்களா என்று எதிர்நோக்கி இருக்கும் அப்பாவி மக்களுக்கு கமல் போன்றவர்களின் குரல் அசரீரியாக இருப்பதோடு எங்கோ தூரத்தில் ஒரு வெளிச்சம் தெரிவதாகவும் பார்க்கப் படுகிறது.

திட்டமிட்டோ திட்டமிடாமலோ அரசியல் விவாதத்திற்குள் வந்து விட்ட கமல் சொல் ஒன்றும் செயல் ஒன்று'மாக இல்லாமல் தன் வாக்குப் படி சினிமாத் துறையின் ஊழல்களை வெளிச்சத்துக்குக் கொண்டு வர வேண்டும் என்பதே வெகுஜனங்களின் எதிர்பார்ப்பாக இருக்கிறது.



அதோடு அந்த ஊழல் விடயங்களை ஆளுநர், பிரதமர் மற்றும் நீதிமன்றம் வரை கொண்டு சென்று உரிய நடவடிக்கை எடுக்கும் வரை தன் வார்த்தைகளை பின் வாங்காமல் இருக்க வேண்டும். பொதுவாக அரசியல் கட்சிகள் ஆளும் தரப்பினர் மீதான ஊழல் முறைப்பாடுகளை ஒரு மனுவாக எழுதி ஆளுநரிடம் கொடுத்து விட்டு தன் கடமை முடிந்தது என்று ஒதுங்கி விடுவது போல் நின்று விடா மல் கமல், தன்கையில் எடுத்துள்ளது அட்டை கத்தி இல்லை என்பதை உணர்ந்து செயற்பட வேண்டும் என்றே மக்கள் விரும்புகின்றனர்.

எது எப்படியோ, கமலின் அரசியல் பிரவேசம் தமிழக அரசியல்வாதிகளின் வயிற்றில் புளியைக் கரைக்கும் என்பது மட்டும் நிச்சயம்.! +

# ட்ரம்ப்புக்கு மனநலம் சரியில்லை! வடகொரிய ஜனாதிபதி கிண்டல்!!

பியாங்யாங்,செப்.24

வடகொரியாவிற்கு மிரட்டல் விடுக்கும் அமெரிக்க அதிபர் ட்ரம்ப் மனநலம் சரியில்லாதவர் என்று வடகொரிய அதிபர் கிம் ஜாங் உன் விமர்சித்துள்ளார்.

வடகொரியா தொடர் அணு ஆயுத சோதனை நடத்தி வருவதற்கு பல நாடுகள் கண்டனம் தெரிவித்து வருகின்றன. அதன்காரணமாக அந்நாட்டின் மீது அமெரிக்கா தொடர்ந்து பலவழியில் மிரட்டல் விடுத்து வருகிறது. ஆனால், அதை காதில் வாங்கிக் கொள்ளாத வடகொரியா தொடர்ந்து அணு ஆயுத சோதனைகளை நடத்தி வருகிறது.

இந்நிலையில், ஐ.நா. பொதுச் சபையில் கடந்த 19ஆம் திகதி முதல்முறையாக பேசிய அமெரிக்க அதிபர் ட்ரம்ப் வடகொரியா அணு ஆயுத சோதனைகளை நிறுத்தாவிட்டால் அந்நாட்டை முழுமையாக அழிக்கநேரிடும் என எச்சரிக்கை விடுத்தார். வடகொரிய அதிபர் கிம் ஜாங் உன்னை ரொக்கெட் மனிதர் போல செயற்படுகிறார் என்றும் ட்ரம்ப் குறிப்பிட்டார்.



ட்ரம்ப்பின் இந்த எச்சரிக்கைகள் குறித்துப் பேசிய வடகொரிய வெளியுறவுத்துறை அமைச்சர் ரி யோங் ஹோ, ட்ரம்ப்பின் பேச்சை சுட்டக் காட்டி 'நாய் குரைப்பதை போல் எங்களை சத்தமிட்டு மிரட்டலாம் என அவர் நினைப்பது நாயின் கனவு போன்றது' எனக் கூறியிருந்தார்.

இந்த நிலையில், ட்ரம்பின் மிரட்டல் குறித்து கிம் ஜாங் கண்டனம் தெரிவித்துள்ளார். அதில் ட்ரம்ப் வார்த்தைகளை பயன்படுத்துவதற்கு முன்னர் நன்கு யோசித்துப் பார்க்க வேண்டும். தேர்தல் பிரசாரத்தில் பேசும் அரசியல்வாதி போல பேசக் கூடாது. அவர் பேசுவது ஐ.நா. பொதுமன்றத்தில் என்பதை மறந்துவிட்டு பேசுகிறார். ஒரு நாட்டை ஆளும் தகுதி அவருக்குக் கிடையாது அரசியல்வாதி என்பதை விட ரவுடி போலத் தான் அவர் செயற்படுகின்றார்.



என்னையும் எனது நாட்டையும் உலக நாடுகள் முன்னிலையில் அவமானப்படுத்தி விட்டார். ட்ரம்ப் என்ன எதிர்பார்க்கிறாரோ அதற்கான பலனை அவரே அனுபவிப்பார். நான் நிச்சயமாகச் சொல்வேன் அவருக்கு மனநலம் சரியில்லை என்று கடுமையாகச் சாடியுள்ளார்.

இதனிடையே, ட்ரம்ப்பின் பேச்சுக்குப் பதிலடி கொடுக்கும் வகையில் வடகொரிய வெளியுறவுத்துறை அமைச்சர் ஒரு தகவலை வெளியிட்டார். நியூயோர்க்கில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் பசுபிக் கடல் பகுதியில் சக்திவாய்ந்த ஐதரசன் அணுகுண்டு சோதனை நடத்தப்படும் என்று கூறியுள்ளார். இதனால் கூடிய விரைவில் வடகொரியா அடுத்த அணு ஆயுத சோதனை நடத்தக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## இளஞ்சிவப்பு நிறத்தில் காட்சி தரும் அதிசய ஏரி



பீஜிங்,செப்.24

சீனாவின் ஷான்சி மாகாணத்தில் இளஞ்சிவப்பு நிறத்தில் காட்சியளிக்கும் அதிசய ஏரி பார்வையாளர்களின் கவனத்தை வெகுவாக ஈர்க்கிறது.

சீனாவின் ஷான்சி மாகாணத்தில் உள்ள என்செங் நகரத்தில் மிகப்பெரிய உப்பு ஏரி உள்ளது. இது மிகவும் உவர் தன்மை உள்ளதாகக் காணப்படுகிறது. கடந்த 4 ஆயிரம் ஆண்டுகளாக சீன மக்கள் இந்த ஏரியிலிருந்து தொழில் நிறுவனங்களுக்குத் தேவையான உப்பை உற்பத்தி செய்து வருகின்றனர். மேலும், இந்த ஏரியில் சோடியம் சல்பேட் உப்பு அதிக அளவு உள்ளது. உலகிலேயே இந்த உப்பு அதிகம் உள்ள மூன்றாவது ஏரி இதுவாகும்.

இந்த நிலையில், தற்சமயம் இந்த ஏரி இளஞ்சிவப்பு நிறத்தில் காட்சியளிக்கிறது. இதற்கு காரணம் டுனாலியேல்லா சலினா என்ற பாசியாகும். இந்த பாசி நீரை நிறம் மாற்றும் தன்மை கொண்டது. இதனால் ஏரியானது ஒரு பக்கம் பச்சை நிறத்திலும், மற்றொரு பக்கம் இளஞ்சிவப்பு நிறத்திலும் காட்சியளிக்கிறது.

இதனை சுற்றுலா பயணிகள் ஆர்வத்துடன் கண்டு ரசித்து வருகின்றனர். இதே போன்று சென்ற ஆண்டு ஏரி ரத்த சிவப்பு நிறத்தில் காட்சியளித்தது குறிப்பிடத்தக்கது.

மேலும் இந்த ஏரியில் அதிக அளவு உப்பு இருப்பதால் டெட் சீ போன்று இதிலும் மனிதர்கள் மிதப்பார்கள் என விஞ்ஞானிகள் கூறுகின்றனர். எனவே இதனை சீனாவின் டெட் சீ என்று அழைக்கின்றனர்.

## அமெரிக்க எச்சரிக்கையையும் மீறி ஈரான் ஏவுகணைப் பரிசோதனை!

அமெரிக்காவின் எச்சரிக்கையை மீறி நடுத்தர தூரம் சென்று இலக்கை தாக்கும் புதிய ஏவுகணையை ஈரான் வெற்றிகமாகப் பரிசோதித்துள்ளது.

அணு ஆயுதங்கள் தயாரிப்பு, ஏவுகணை பரிசோதனை போன்றவற்றில் ஈடுபட்டு வந்த பாரசீக வளைகுடா நாடுகளில் ஒன்றான ஈரான், சர்வதேச நாடுகளின் தடையை மீறி ஏவுகணைப் பரிசோதனை செய்யப் போவதாக அறிவித்திருந்தது.

அதைத்தொடர்ந்து நேற்று முன்தினம் நடைபெற்ற இராணுவ அணிவரிசையில் ஈரான் தயாரித்த புதிய ஏவுகணையான கோராம்ஷர் ஏவுகணை இடம் பெற்றிருந்தது.

இந்நிலையில், நடுத்தர தூரம் சென்று இலக்கை தாக்கி அழிக்கும் அந்த புதிய ஏவுகணையை வெற்றிகரமாக சோதனை செய்து விட்டதாக ஈரான் அரசு நேற்று



அறிவித்துள்ளது.

இது போன்ற அணு ஆயுத சோதனை நடத்துவது 2015ஆம் ஆண்டில் போடப்பட்ட அணு ஆயுத பரவல் தடை ஒப்பந்தத்தை மீறுவதாகும் என அமெரிக்க அதிபர் ட்ரம்ப் எச்சரிக்கை விடுத்தார். அவரது எச்சரிக்கையை மீறி ஈரான் சோதனை நடத்தியது குறிப்பிடத்தக்கது.

இந்த ஏவுகணை பல ஆயுதங்களை ஏற்றிச் செல்லும் திறன் வாய்ந்தது. இதன் மூலம் அருகில் உள்ள நாடுகளான இஸ்ரேல் மற்றும் சவுதி அரேபியாவை எளிதில் தாக்கலாம். மேலும், இது நாட்டின் ராணுவ சக்தி மற்றும் பாதுகாப்பை அதிகப்படுத்துவதாக ஈரான் அரசு தெரிவித்துள்ளது.

## கப்பல் எதிர்ப்பு ஏவுகணை வெற்றி பாகிஸ்தான் ராணுவம் பெருமிதம்



பாகிஸ்தானின் வடக்கு அரேபிய கடல் பகுதியில் நடத்தப்பட்ட கப்பல் எதிர்ப்பு ஏவுகணை சோதனை வெற்றியடைந்ததாக அந்நாட்டு ராணுவம் செய்தி வெளியிட்டுள்ளது.

பாகிஸ்தானின் வடக்கு அரேபிய கடல் பகுதியில் அந்நாட்டு இராணுவம், கப்பல் எதிர்ப்பு ஏவுகணை சோதனை நடத்தியுள்ளது. இந்த சோதனை வெற்றியடைந்தது என அந்நாட்டு இராணுவம் தெரிவித்துள்ளது.

இராணுவ ஹெலிக்கொப்டரில் இருந்து ஏவப்பட்ட ஏவுகணை குறித்த இலக்கை வெற்றிகரமாக தாக்கியதாக பாகிஸ்தான் கடற்படையின் செய்தித் தொடர்பாளர் கூறியுள்ளார். இந்த சோதனை பாகிஸ்தான் கடற்படை தளபதி மொஹமது சகவுல்லாவின் மேற்பார்வையில் நடைபெற்றுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

இந்தச் சோதனை வெற்றிக்கு பின்னர் பேசிய மொஹமது சகவுல்லா, இந்த ஏவுகணை சோதனை வெற்றி, எப்போது போர் வந்தாலும் அதை எதிர்கொள்ள பாகிஸ்தான் தயாராக இருக்கிறது என்பதையும் பாகிஸ்தான் கடற்படையினரின் தொழில் திறமை காட்டுகின்றது. பாகிஸ்தான் கடற்படை எந்தவொரு நிலையிலும் தாய்நாட்டையும், அதன் நீர் எல்லைகளையும் பாதுகாக்கும் எனத் தெரிவித்துள்ளார்.

# கமல் – கெஜ்ரிவால் சந்திப்பால் ஆகப்போவது ஒன்றும் இல்லை

## அமைச்சர் ஜெயக்குமார் தெரிவிப்பு



கமலஹாசனை, கெஜ்ரிவால் சந்தித்திருக்கின்றமை இயல்பான ஒன்றுதான் எனவும் இந்தச் சந்திப்பில் ஆகப்போவது ஒன்றும் இல்லை எனவும் அமைச்சர் ஜெயக்குமார் தெரிவித்துள்ளார்.

சென்னை விமான நிலையத்தில் நிதியமைச்சர் டி. ஜெயக்குமார் நிருபர்களுக்கு அளித்தபேட்டியில்கூறியவை வருமாறு:-

பொதுக்குழு கூடி முடிவு எடுத்ததின்படி தொடர் நடவடிக்கையாக டில்லி செல்கிறோம். கழக சட்ட விதிகளின் படி ஐந்தில் ஒரு பங்கு உறுப்பினர்கள் இருந்தால் பொதுக்குழுவை நடத்தலாம். 98 சதவீத உறுப்பினர்கள் பொதுக்குழுவில் பங்கேற்று உள்ளனர். எல்லோரும் ஒற்றுமையாக இருக்கிறோம்.

பொதுக்குழுவில் பல தீர்மானங்களை இயற்றியுள்ளோம். அதில் உறுப்பினர்களிடம் கையெழுத்தைப் பெற்று வீடியோ பதிவு செய்து இருக்கிறோம்.

இப்படி இருக்கும்போது பொதுக்குழு உறுப்பினரே இல்லாதவர்கள், பொதுக் குழுவை கூட்டுவோம் என்று சொல்வது காற்றில் கத்தியை வீசுவது போல் உள்ளது.

அ.தி.மு.கவில் நாங்கள் அனைவரும் ஒன்றுபட்டு இருக்கிறோம். கமலஹாசன்–கெஜ்ரிவால் சந்திப்பு என்பது, ஒருவரை ஒருவர் சந்திப்பது. கமலஹாசனை, கெஜ்ரிவால் சந்தித்திருக்கின்றமை இயல்பான ஒன்றுதான்.

அதில் அவர்கள் அரசியல் பேசி இருந்தால் பெரிய அளவில் இருக்காது. என்னைப் பொறுத்தவரை இந்தச் சந்திப்பில் ஒன்றும் இல்லை என்று தெரிவித்துள்ளார்.

# மோடியின் சொத்து மதிப்பு இவ்வளவா?



பிரதமர் மோடி தன்னிடம், ஒரு கோடியே 13 ஆயிரத்து 403 ரூபா மதிப்பிலான சொத்துகள் இருக்கின்றன எனத் தெரிவித்துள்ளார்.

மத்திய மந்திரிகள்அனைவரும் தங்களது சொத்துப்பட்டியலை ஓகஸ்ட் 31 ஆம் திகதிக்குள் சமர்ப்பிக்க வேண்டும் என பிரதமர் நரேந்திர மோடி அறிவித்தார்.

அதன்படி, மோடிதனது சொத்துப்பட்டியலை வெளியிட்டுள்ளார், அவருக்கு ஒரு கோடியே 13 ஆயிரத்து 403 ரூபா மதிப்பிலான சொத்துகள் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. 2015-16 நிதி ஆண்டில் அவரது ரொக்க கையிருப்பு 89 ஆயிரத்து 700 ரூபா ஆகும். ஆனால்2016-17 நிதி ஆண்டில் ரொக்க கையிருப்பு ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா ஆகும்.

நிதி அமைச்சர் அருண் ஜெட்லி, வெளியுறவு அமைச்சர் சுஷ்மா சுவராஜ், மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சர் பிரகாஷ் ஜவடேகர், சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் முக்தர் அப்பாஸ் நக்வி போன்ற 15 அமைச்சர்கள் மட்டும் தங்களது சொத்து பட்டியலை தாக்கல் செய்துள்ளனர் எனத் தகவல்கள் கூறுகின்றன.

மத்திய உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், சட்ட அமைச்சர் ரவிசங்கர் பிரசாத், ரெயில்வே அமைச்சர் பியூஷ் கோயல், பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை அமைச்சர் மேனகா காந்தி, ஜவுளி மற்றும் தகவல், ஒலிபரப்புத்துறை அமைச்சர் ஸ்மிரிதி இரானி உள்ளிட்டவர்கள் தங்களது சொத்து பட்டியலைத் தாக்கல் செய்யவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# தமிழகத்துக்குத் திரும்ப அனுமதி தாருங்கள்!

## தினகரனிடம் கெஞ்சும் எம்.எல்.ஏக்கள்



தகுதி நீக்கம் செய்யப்பட்ட 18 எம்.எல்.ஏக்கள் அனைவரும் தங்களை தமிழகத்துக்கு திரும்ப அனுமதிக்க வேண்டும் என்று டி.டி.வி. தினகரனிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தகுதி நீக்கம் செய்யப்பட்ட 18 எம்.எல்.ஏக்களில் முன்னாள் அமைச்சர்கள் பழனியப்பன், செந்தில் பாலாஜி தவிர 16 பேர் கர்நாடக மாநிலம் குடகு விடுதியில் தங்கி உள்ளனர்.

அவர்களுடன் எம்.எல்.ஏக்கள் கலைச்செல்வன், ரத்தினசபாபதி ஆகியோரும் தங்கி உள்ளனர். இவர்கள் கடந்த 10 நாளக்ளுக்கும் மேலாக அங்கு தங்கி உள்ளனர். அனைவரும் தங்களை தமிழகம் திரும்ப அனுமதிக்க வேண்டும் என்று நேற்று முன்தினம் குடகு விடுதிக்கு வந்த அ.தி.மு.க. (அம்மா) அணி செயலாளர் தினகரனிடம் கோரிக்கை விடுத்தனர்.

தகுதி நீக்கம் செய்யப்பட்டதை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கு எதிர்வரும் 4ஆம் திகதி விசாரணைக்கு வருகிறது. அதுவரை இங்கு தங்கி இருங்கள் என்று அவர்களிடம் தினகரன் கூறினார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# ஜெயா சிகிச்சை பெற்ற சி.சி.டி.வி. காட்சிகள்; விசாரணை ஆணையகத்தில் ஒப்படைப்போம்!



–டி.டி.வி. தினகரன்

சென்னை,செப்.24

மறைந்த தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதா மருத்துவமனையில் சிசிச்சை பெற்ற சி.சி.டி.வி காட்சிகளை விசாரணை திணைக்களத்திடம் ஒப்படைப் போம் என டி.டி.வி. தினகரன் தெரிவித்துள்ளார்.

ஜெயலலிதாவை பார்த்துப் பேசியதாகப் பொய் சொன்னோம் என பொதுமேடையில் அமைச்சர் திண்டுக்கல் சீனிவாசன் கூறியுள்ள நிலையில், கர்நாடகா மாநிலம் குடகில் செய்தியாளர்களை சந்தித்துப் பேசிய அ.தி.மு.க. (அம்மா) அணித் துணைப் பொதுச்செயலாளர் டி.டி.வி . தினகரன், அமைச்சர் திண்டுக்கல் சீனிவாசன் பதவிக்காகத் தான் இப்படிப் பேசுகிறார்.

ஜெயலலிதா அனுமதிக்கப்பட்ட போது ஆளுநர் வித்யாசாகர் ராவ் வந்து சந்தித்தார்.

நோய் தொற்று ஏற்படும் என்பதால் ஜெயலலிதாவை சந்திக்க யாரை யும் அனுமதிக்கவில்லை. ஒக்ரோபர் முதலாம் திகதிக்குப் பின் ஜெயலலி தாவை சந்திக்க சசிகலாவை கூட மருத்துவர்கள் அனுமதிக்க வில்லை.

ஜெயலலிதாசிகிச்சைபெற்றமை தொடர்பான சி.சி.டி.வி. காட்சிகள் எங்கள் வசம் உள்ளன. கட்சியின் பொதுச்செயலாளர் சசிகலா ஒப்புதல் இல்லாமல் சி.சி.டி.வி. காட்சிகளை வெளியிட முடியாது. விசாரணைத் திணைக்களம் அமைக்கப்பட்டால் சி.சி.டி.வி. காட்சிகள் ஒப்படைக்கப்படும். ஜெயலலிதா மரணம் தொடர்பான விசாரணை திணைக்களத்தைக் கண்டு நாங்கள் அஞ்சவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

(ப)

# எமது வீரர்களின் பாதுகாப்பே மிகவும் முக்கியம்!

## இலங்கை கிரிக்கெட் சபை

பாகிஸ்தானின் லாஹூர் நகரில் அடுத்த மாதம் இடம்பெறவுள்ள இலங்கை - பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான தொடரின் மூன்றாவதும் இறுதியுமான ரி-20 போட்டியில் பங்கேற்க இலங்கை வீரர்களை அந்நாட்டுக்கு அனுப்ப முன்னர் அணியின் பாதுகாப்பு தொடர்பில் அனைத்து விடயங்களும் முழுமையாக ஆய்வு செய்யப்படும் என இலங்கை கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

2009 ஆம் ஆண்டு பாகிஸ்தானுக்கான சுற்றுப் பயணத்தின் போது லாஹூர் நகரில் உள்ள கடாபி மைதானத்தினை நோக்கிச் சென்ற இலங்கை கிரிக்கெட் அணியின் பஸ் மீது தீவி ரவாதிகள் தாக்குதல் நடாத்தியிருந்தனர். இந்தக் கோர சம்பவத்தில் இலங்கை வீரர்கள் பலரும் காயமடைந்திருந்தமைகுறிப்பிடத்தக்கது.

இந்தச் சம்பவத்தைஅடுத்து முதற்தடவையாக இலங்கை அணி ரி-20 போட்டியொன்றில் விளையாடபாகிஸ்தான்பயணமாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையில், வியாழக்கிழமை நடைபெற்ற ஊடக வியலாளர் மாநாட்டில் பாகிஸ்தானில் இலங்கை அணியின் பாதுகாப்பு தொடர்பான விடயங்களை கலந்துரையாடும் போது இலங்கை கிரிக்கெட் சபையின் நிறைவேற்று அதிகாரி அஷ்லி டி சில்வா கூறியவை வருமாறு:-

நாங்கள் தொடரின் இறுதிப் போட்டியை பாகிஸ்தானில் நடத்த ஏற்பாடு செய்துள்ளோம். இரண்டு அணிகளுக்குமிடை யிலான டெஸ்ட் தொடர் நிறை வடைந்த உடனேயே, பாகிஸ்தானில் பாதுகாப்பு நிலைமைகள் தொடர்பாக ஆராய்ந்து அதற்கு பின்னர் நாம் அது தொடர்பான அழைப்பினை விடுக்க எத்தனித்துள்ளோம். மேலும், நிலைமைகளை ஆராய பாதுகாப்புத் துறையில் கைதேர்ந்த சில நிபுணர்களை யும் பாகிஸ்தான் அனுப்பநாம் உத்தேசித்துள்ளோம். குறிப்பிட்ட நிபுணர்கள் இறுதி ரி-20 போட்டி நடைபெற இரண்டு வாரங்களுக்கு முன்னர், அந்நாட்டின் களநிலவரங் கள் எவ்வாறு உள்ளன என்பது பற்றிய அறிக்கையை எம்மிடம் சமர்ப்பிப்பர்.

இலங்கை அணி, அண்மைய இந்தியாவுடனான தொடரில் மூன்று வகையான கிரிக்கெட் ஆட்டங்களின் 9 போட்டிகளிலும் தோல்வியைத் தழுவி மோசமாக செயற்பட்டி ருந்தது. இத்தொடர் தோல்வி களிலிருந்து மீள பாகிஸ்தான் அணியுடனான சுற்றுப் பயணத்தை இலங்கை அணி பயன்படுத்தும் என அனைவராலும் எதிர்பார்க்கப்பட்டு வரும் இந்த நிலையில், தினேஷ் சந்திமால் தலைமையிலான இலங்கை டெஸ்ட் அணி இன்று ஐக்கிய அரபு இராச்சியம் பயணமா கின்றது.

இலங்கை அங்கு பங்குபெறும் 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரினை அடுத்து பாகிஸ்தானுடன் 5 ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடர், 3 ரி-20 போட்டிகள் கொண்ட தொடர் (மூன்றாவது ரி-20 போட்டி பாதுகாப்பு விடயங்கள் உறுதிப்படுத்தப்படும் நிலையில்) ஆகியவற்றில் மோதுகின்றது.



இலங்கை அணியின் தலைமை பயிற்சியாளர் நிக் போத்தஸ் பாகிஸ்தானுக்கான தொடரின் முன்பாக கருத்து தெரிவித்திருந்த போது, இந்திய அணியுடனான தொடரில் பெரியதொரு தோல்வியை நமது வீரர்கள் சந்திருந்த போதிலும், அத்தோல்வியானது எமது வீரர்கள் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட ஒரு காரணியாக மாறியுள்ளது. நீங்கள் மத்தியூஸிசை எடுத்துப் பார்த்தீர்கள் என்றால், அவர் இலங்கை அணியின் இளம் வீரர் ஒருவருக்கு (விஷ்வ பெர்னாந்து) உதவி செய்துகொண்டிருந்த நிலையிலேயே உபாதைக்கு ஆளாகியிருந்தார்.

இவ்வாறாக மூத்த வீரர்கள் இளம் வீரர்களுடன் இணைந்து செயற்படும் விடயம் எமது அணி எந்தளவு தற்போது ஒருங்கிணைந்து செயற்படுகின்றது என்பதை சிறப்பாக எடுத்துக்காட்டு கின்றது என்று தெரிவித்துள்ளார்.

இலங்கை அணியின் முன்னாள் தலைவரான அஞ்செலோ மத்தியூஸ் நேற்று' முன்தினம் பயிற்சி ஆட்ட வேளையின்போது தொடைத் தசையில் ஏற்பட்ட உபாதை ஒன்றின் காரணமாக பாகிஸ்தான் அணிக்கெதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் விளையாடும் சந்தர்ப்பத்தை இழந்திருந்தார்.


சிறப்பான ஆட்டத்தை அண்மைய போட்டிகள் மூலம் காட்டி வந்த மத்தியூஸின் இழப்பு இலங்கை அணிக்கு பெரிய பின்னடைவாகும். இன்னும், மத்தியூஸ் இலங்கை முதற்தடவையாக விளையாடவுள்ள பகலிரவு டெஸ்ட் ஆட்டத்திலும் (பாகிஸ்தானுடனான இரண்டாவது டெஸ்ட் போட்டி) பங்கேற்பது சந்தேகம் என்பதை இலங்கை அணியின் முகாமையாளர் அசங்க குருசிங்க பின்வருமாறு கூறியுள்ளார்.

மத்தியூஸ் இலங்கை அணிக் குழாத்துடன் (ஐக்கிய அரபு இராச்சியம்) பயணிக்கவில்லை. அவர் கொழும்பிலிருந்து இரண்டாவது டெஸ்ட் போட்டியின் முன்னதாக உடற்தகுதி சோதனைகளுக்கு உட்படுத்தப்படவுள்ளார். அச்சோதனையின் முடிவுகள் சரியாக அமையும் எனில் அவர் துபாயில் இலங்கை அணியுடன் இணைந்து போட்டியில் பங்கேற்க முடியும் என்று தெரிவித்துள்ளார்.

(ப)

Sri Lanka Cricket

# தொடர்ந்து சாதனை படைத்து வரும் அனித்தா





வட மாகாணத்தைச் சேர்ந்த அனித்தா ஜெகதீஸ்வரன் கோலூன்றிப் பாய்தலில் 3.48 மீற்றர் உயரத்தைத் தாவி மீண்டும் தேசிய சாதனை படைத்துள்ளார்.

அவர் இந்த வருடத்தில் மாத்திரம் தொடர்ச்சியாக 4 ஆவது முறையாகவும் தேசிய சாதனையை முறியடித்த வீராங்கனையாக வரலாற்றில் இடம்பிடித்தார்.

விளையாட்டுத்துறை அமைச்சுடன் இணைந்து விளையாட்டுத்துறைத் திணைக்களம் ஏற்பாடு செய்துள்ள 43 ஆவது தேசிய விளையாட்டு பெருவிழாவின் மெய்வன்மைப் போட்டிகள், கொடவில விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமாகின.

போட்டிகளின் முதல் நாளான நேற்று முன்தினம் காலை நடைபெற்ற பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் வட மாகாணத்தைச் சேர்ந்த அனித்தா ஜெகதீஸ்வரன் 3.48 மீற்றர் உயரத்தைத் தாவி மீண்டும் தேசிய சாதனை படைத்தார்.

இதேவேளை, இந்தப் போட்டியில், கிழக்கு மகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி கலந்துகொண்ட ஏ.ஏ. கருணாவன்ஸ, 3.10 மீற்றர் உயரம் தாவி 2 ஆவது இடத்தையும், மேல் மாகாணத்தைச் சேர்ந்த கே.எஸ். பேரேரா 3.00 மீற்றர் உயரம் தாவி 3 ஆவது இடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

இந்த நிலையில், கோலூன்றிப் பாய்தலில் வட மாகாணத்தைச் சேர்ந்த மேலும் 2 வீராங்கனைகள் கலந்துகொண்டனர். அவர்களில், சீ. ஹெரீனா 5 ஆவது இடத்தையும், வி. சத்விகா 6ஆவது இடத்தையும் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## முன்னேற்றத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும், ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளருக்குமிடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் இரவு அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் இடம்பெற்றது.

ஐ.நா. பொதுச்சபைக் கூட்டத்தில் பங்குபற்றுவதற்காக நியூயோர்க் சென்றுள்ள ஜனாதிபதி அங்கு பல நாடுகளின் தலைவர்களையும் சந்தித்துப் பேசிவருகிறார். அவற்றுக்கு மத்தியிலேயே இந்தச் சந்திப்பும் நடந்தது.அப்போதே இந்த அழைப்பு விடுக்கப்பட்டது.

இச்சந்திப்புக் குறித்து ஜனாதிபதி செயலகம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் கூறப்பட்டவை வருமாறு:-

இலங்கை, ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்பு நாடு என்ற வகையில் அதன் உடன்படிக்கைகளுக்கு ஏற்ப, மக்களின் நலனுக்காக மிகவும் பொறுப்புடன் செயற்பட்டுவருவதாகவும், மனித உரிமைகள் மற்றும் நல்லிணக்கத்தை உறுதிப்படுத்துவதற்கான செயற்பாடுகள் படிப்படியாக முன் னேற்றமடைந்து வருகின்றன எனவும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரிடம் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இந்தச் செயற்பாடுகளை முன்னெடுக்கும் போது அவசரப்பட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் கடும்போக்காளர்களே இலாபமடைவர் எனக் குறிப்பிட்ட ஜனாதிபதி மனித உரிமைகள் கவுன்சிலில் நிறைவேற் றிய முன்மொழிவில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களை முழுமைப்படுத்துவதற்கு இரண்டு வருட காலம் தமது நாட்டுக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும், இலங்கை அடைந்துள்ள முன் னேற்றங்களை நேரில் கண்டறிவதற்காக அடுத்த வருடம் இலங் கைக்கு நேரில் விஜயம் செய்யுமாறும் ஆணையாளருக்கு அழைப்பு விடுத்தார்.



மனித உரிமைகள் மற்றும் நல்லிணக்கத்தை உறுதிப்படுத்துவதற்காக இலங்கை அரசாங்கம் முன்னெடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்து ஆணையாளருக்கு விளக்கிய ஜனாதிபதி, இந்த அனைத்து நடவடிக்கைகளையும் நாட்டின் உள்ளக அரசியல் நிலைவரங்களையும் சர்வதேச அரசியல் சூழ்நிலைகளையும் கருத்திற் கொண்டே முன்னெடுக்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

காணாமல்போனோர் அலுவலகத்தை ஸ்தாபிப்பதற்கான வர்த்தமானி அறிவித்தலில் இந்த விஜயத்திற்கு முன்னர் தான் கையொப்பமிட்டார் எனவும், அதன் நடவடிக்கைகள் செயற்திறனாக முன்னெடுக்கப்படும் என்றும் குறிப்பிட்ட ஜனாதிபதி புதிய அரசமைப்பு தொடர்பான உத்தேச வரைவை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுத்துள்ளார் எனவும் தெரிவித்தார்.

பாதுகாப்பு படையினர் வசமுள்ள கிழக்கு மாகாணத்தின் அனைத்துக் காணிகளும் விடுவிக்கப்பட்டுள்ளன எனக் குறிப்பிட்ட ஜனாதிபதி வடக்கில் உள்ள காணிகளில் குறிப்பிடத்தக்களவு விடுவிக்கப்பட்டுள்ளன எனவும், எஞ்சியவை நிர்வாக ரீதியான பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு முறையாக மக்களிடம் கையளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் குறிப்பிட்டார்.

இந்த விடயங்களில் இலங்கை அடைந்துள்ள முன்னேற்றத்தை பாராட்டுகிறார் எனக் குறிப்பிட்ட மனித உரிமைகள் ஆணையாளர் ஹுசைன் முன்னேற்றத்தை அடைந்து கொள்வதற்கான பயணம் மேலும் விரைவுபடுத்தப்படுமாயின் மகிழ்ச்சியடைய முடியும் என்றும் தெரிவித்தார்.

காணாமல்போனோர் அலுவலகத்தை ஸ்தாபிப்பதற்கு எடுத்த நடவடிக்கைகளைப் பாராட்டிய ஆணையாளர் ஹுசைன், அந்த அலுவலகத்திற்கான நியமனங்களை மேற்கொள்ளும்போது அனைத்து இனங்களும் ஏற்றுக் கொள்ளக் கூடிய விதத்தில் நியமனங்களை செய்யுமாறு கேட்டுக் கொண்டார்.

இந்த விடயங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் போது இலங்கைக்கு முழுமையான உதவிகளை வழங்க ஐ. நா.மனித உரிமைகள் கவுன்சில் தயாராக வுள்ளதாகவும் ஆணையாளர் மேலும் தெரிவித்தார்.- என்றுள்ளது.

# மணல் ஏற்றி வந்த டிப்பர்கள் பரந்தன் பகுதியில் மோதின

### விடிகாலை விபத்தில் சாரதி ஒருவர் படுகாயம்



கிளிநொச்சி,செப்.24

ஏ-35 வீதியில் மணல் ஏற்றிச் சென்ற இரண்டு டிப்பர் வாகனங்கள் பரந்தன் பகுதியில் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் டிப்பர் வாகனத்தின் சாரதி ஒருவர் படுகாயமடைந்துள்ளார். நேற்று முன்தினம் விடிகாலை 4.20மணிக்கு இடம்பெற்ற விபத்தில் டிப்பர் வாகனத்தைச் செலுத்திச்சென்ற சாரதியொருவர் படுகாயமடைந்துள்ளமையுடன், இரண்டு டிப்பர் வாகனங்களும் சேதமடைந்துள்ளன.

முல்லைத்தீவுப் பகுதியிலிருந்து பரந்தன் நோக்கி விடிகாலை பயணித்துக்கொண்டிருந்த டிப்பர் வாகனங்களை பொலிஸார் பரந்தன் நகருக்கு அண்மித்த பகுதியில் வழிமறித்து சோதனையிட்டனர். இதன்போது, நிறுத்தி வைக்கப்பட்ட டிப்பருடன் பின்னால் வந்த இரண்டு டிப்பர் வாகனங்களும் மோதி விபத்துக்குள்ளாகின எனக் கூறப்பட்டது.

இவ்விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை கிளிநொச்சிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(உ)

## சிறந்த...

(04ஆம் பக்கத் தொடர்ச்சி)

தேனும் ஓட வைப்பேன் என கூறினேன். அது நடைபெறவில்லை. ஆனால் இன்றுவரையுமே பெறமுடியாதுள்ளோம்.

இலங்கை அரசிடம் இருந்து உதவியை பெறவேண்டுமாக இருந்தால் அவர்களுடன் சண்டையிட்டுக்கொண்டிருக்க முடியாது. அவர்களுடன் பேசிப் பெறவேண்டும். அதனைத்தமிழ் தேசியக் கூட்டமைப்பு செய்யவில்லை. இதனாலேயே இன்று காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சினைக்கும் அரசியல் கைதிகளின் பிரச்சினைக்கும் தீர்வைக் காண முடியாதுள்ளது.

சுயலாப அரசியலை செய்யும் அரசியல் தலைமைகளை மக்கள் அதிகளவில் தெரிவுசெய்தமையினால் மக்களுக்கு எதுவும் கிடைக்காத நிலை காணப்படுகின்றது - எனத் தெரிவித்தார். (உ-100)


# மரண அறிவித்தல்



## திருமதி கேசவன் மகேஸ்வரி

மீசாலை வடக்கு, மீசாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கேசவன் மகேஸ்வரி (ஓய்வுபெற்ற ஆசிரியை - விக்கினேஸ்வரா மகா வித்தியாலயம், மீசாலை) நேற்றுமுன்தினம் (2017.09.22) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவப்பிரகாசம் - சின்னாச்சிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான குமாரசுவாமி - பொன்னம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற குமாரசுவாமி கேசவன் (ஓய்வுபெற்ற அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும், சகிலா (முன்னாள் ஆசிரியை, கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி, தற்பொழுது ஆஸ்திரேலியா), சயந்தன் (சட்டத்தரணி, வடக்கு மாகாணசபை உறுப்பினர்), பிரதீபன் (முகாமையாளர் - இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் சாவகச்சேரிக் கிளை) ஆகியோரின் பாசமிகு தாயாரும், பாஸ்கரன் (பொறியியலாளர் - ஆஸ்திரேலியா), தாரணி (முன்னாள் காப்புறுதி ஆலோசகர் - இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம், சாவகச்சேரிக் கிளை) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற அன்னலட்சுமி மற்றும் தனலட்சுமி (ஓய்வுபெற்ற ஆசிரியை), திருச்செல்வம் (ஐக்கிய ராச்சியம்), ஜெயலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான வாமதேவன், ஜெயதேவன், மகாதேவன் மற்றும் சாரதா, ராதா, மாதவன், ஜானகி, அருணாசலம், காலஞ்சென்ற பேரம்பலம் மற்றும் மஞ்சுளா ஆகியோரின் அன்பு மைத்துனியும், சாகித்தியன், சாகித்தியா, தரிணி, தர்மீகன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (2017.09.24) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக முற்பகல் 11.00 மணியளவில் வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:

A9வீதி, 299 ஆம் மைல்கல் அருகாமை,
புத்தூர்ச் சந்தி, மீசாலை வடக்கு, மீசாலை.

கேசவன் சயந்தன் (சட்டத்தரணி, வடக்கு மாகாண சபை உறுப்பினர்) 077 260 2605
பிரதீபன் (முகாமையாளர் – இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம், சாவகச்சேரிக்கிளை) 077 327 6500

# சமூக வாழ்க்கையில் ஆழ ஊடுருவியுள்ள இராணுவம்



- பி.மாணிக்கவாசகம்

முன்னாள் போராளிகள் என்பதற்காக தொடர்ந்து விளக்கமறியலில் வைத்திருக்க முடியாது எனக் கூறிய யாழ் மேல் நீதிமன்றம் ஐந்து சந்தேக நபர்களுக்கு நிபந்தனைகளுடன் பிணை வழங்கியிருக்கின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனைக்கொலை செய்ய சதித் திட்டம் தீட்டினார்கள் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இந்த ஐந்து பேரையும் கிளிநொச்சி நீதிமன்றம் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டிருந்தது. ஒன்பது மாதங்களாக விளக்கமறியலில் இருந்து வரும் இவர்களைப் பிணையில் விட வேண்டும் எனக் கோரி யாழ் மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட பிணை மனுவைப் பரிசீலனை செய்து, இரு தரப்பு வாதங்களைக் கேட்டதன் பின்னர் நீதிபதி இளஞ்செழியன் இவர்களுக்குப் பிணை வழங்கியுள்ளார்.

யாழ்.மேல் நீதிமன்றம் பிணை வழங்கியுள்ள இந்த வழக்கு தொடர்பாக ஆராய்வதற்காக போராளிகள் என்பதற்காக சந்தேக நபர்களைத் தொடர்ந்து விளக்கமறியலில் வைத்திருக்க முடியாது என்ற கூற்று இங்கு கையாளப்படவில்லை. அதையும்விட மிக முக்கியமான ஒரு விடயத்திற்காகவே இந்தக் கூற்று இங்கு குறிப்பிடப்படுகின்றது.

விடுதலைப்புலிகளுக்கு எதிரான யுத்தம் முடிவடைந்து எட்டு வருடங்கள் கடந்துவிட்டன.இரண்டாவது அரசாங்கம் ஆட்சி நடத்திக் கொண்டிருக்கின்றது. ஆனால் யுத்தத்திற்குக் காரணமாகிய இனப்பிரச்சினைக்கு ஓர் அரசியல் தீர்வு காண்பதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எவையும் மேற்கொள்ளப்படவில்லை. அது மட்டுமல்லாமல், யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கையில் மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளும் மந்த கதியிலேயே இடம்பெற்று வருகின்றன. இறுதிக்கட்டயுத்த மோதல்கள் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களிலேயே மிக மோசமாக இடம் பெற்றிருந்தன. இதனால் இந்த மாவட்டங்களைச் சேர்ந்த மக்கள் ஒப்பீட்டளவில் மிக மோசமான பாதிப்புகளுக்கு முகம் கொடுத்திருந்தார்கள்.



**ஆக்கிரமிப்பல்ல மக்களுக்கு உதவுவதே நோக்கம்**

யுத்தம் முடிவடைந்ததன் பின்னர் அதிகூடிய இராணுவ பிரசன்னம் காரணமாக வடமாகாணத்தில் உள்ள மக்கள் தமது சிவில், பொருளாதார, அரசியல், கலை, கலாசார, வாழ்க்கை முறைகளில் பல்வேறு இடையூறுகளையும், கஷ்டங்க ளையும் துன்பங்களையும்அனுபவித்துவருகின்றார்கள். இதன் காரணமாகவே வடமாகாணத்தில் இராணுவத்தைப் பாதுகாப்புக்கான இராணுவமாக அல்லாமல்ஆக்கிரமிப்புப் படையாக மக்கள் நோக்குகின்றார்கள்.இந்தவகையிலேயே இராணுவத்தை அங்கிருந்து வெளியேற்றவேண்டும் என்ற கோரிக்கை பாதிக்கப்பட்ட மக்கள் மத்தியில் இருந்து எழுந்தது. அந்தக் கோரிக்கை இப்போது பல்வேறு வடிவங்களிலான இராணுவ அடக்குமுறைக்குஎதிரான போராட்டமாகவும் பரிணமித்திருக்கின்றது. ஆனால், இந்தக் கோரிக்கையும் போராட்டங்களும் இராணுவத்தினாலும், அரசாங்கத்தினாலும் உரிய முறையில் கவனத்தில் எடுக்கப்படவில்லை. மாறாக தேசிய பாதுகாப்புக்காகவே வடக்கில் இராணுவத்தினர் வைக்கப்பட்டிருக்கின்றார்கள். மீண்டும் ஒரு யுத்த மோதல் அல்லது ஆயுதக் கிளர்ச்சி ஏற்பட்டு விடக் கூடாது என்ற முக்கிய காரணத்திற்காகவே அவர்கள் வடக்கில் நிலைகொண்டிருக்கின்றார்கள். அவர்கள் வெறும் தேசிய பாதுகாப்புக்காக அங்கு இருக்கவில்லை. அவர்கள் யத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் மறுவாழ்வுக்கான செயற்பாடுகளான புனர்வாழ்வுச் செயற்பாடுகளிலும் பெரும் பங்காற்றி வருகின்றார்கள். இந்த அடிப்படையில் அவர்கள் பல மக்கள் நலத்திட்டங்களை முன்னெடுத்திருக்கின்றார்கள்.

பெருமளவிலான பொதுமக்களுடைய காணிகளை அவர்கள் கைப்பற்றியிருந்தாலும், இராணுவமுகாம்களைச் சூழ்ந்துள்ள பிரதேசங்களில் வாழ்கின்ற மக்களும், ஏனைய பொது மக்களுக்கும் இராணுவத்திற்கும் இடையே நல்லுறவு நிலவுகின்றது. யுத்தத்திற்குப் பின்னரான காலத்தில் வடபகுதி மக்களை மகிழ்ச்சியாகவும் நிறைவு கொண்டவர்களாகவும் வைத்திருப்பதற்கு, சமூக வாழ்க்கைச் செயற்பாடுகளில் இராணுவத்தினர் கொண்டுள்ள வகிபாகமானது பெருமளவில் பங்களிப்புச் செய்து வருகின்றது என்று இராணுவமும், அரசாங்கமும் கூறி வருகின்றன. ஆனால், இது முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைக்கின்ற ஒரு நடவடிக்கை என்பதே யதார்த்தம்.

**இராணுவ மயப்படுத்தப்பட்ட சமூக வாழ்க்கை**

மேலோட்டமான பார்வையில் இராணுவத்தினருடைய பிரசன்னம் யுத்த காலத்தைப் போன்று மிகவும் வெளிப்படையாகக் காணப்படவில்லை என்பது உண்மைதான். அதே வேளை முன்னைய ஆட்சிக் காலத்தின்போது இராணுவத்தினர் பொது மக்கள் மத்தியில் நடமாடி அவர்களுடைய நாளாந்த வாழ்க்கை நடவடிக்கைகளில் அத்துமீறி மூக்கை நுழைத்திருந்த நிலைமையும் இப்போது இல்லை என்பதும் உண்மைதான். ஆனால், வன்னிப் பிரதேசத்தில் குறிப்பாக கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் இராணுவம் சிவில் வாழ்க்கையில் ஆழ ஊடுருவியிருக்கின்றது. இந்தப் பணியை சிவில் பாதுகாப்புத் திணைக்களம், இந்த மாவட்டங்களில் சந்தடியின்றி சாதாரணமாக முன்னெடுத்திருக்கின்றது.

இராணுவத்தினரால் வழங்கப்பட்ட புனர்வாழ்வுப் பயிற்சியின் பின்னர் சிவில் வாழ்க்கைக்குத் திரும்பியுள்ள ஆண், பெண் இருபாலாரான முன்னாள் போராளிகளையும், யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு, குடும்பப் பொறுப்புக்களை ஏற்பதற்கு நிர்ப்பந்திக்கப் பட்டுள்ள இளம்பெண்களையும் மற்றும் இத்தகைய குடும்பங்களைச் சேர்ந்த இளம் பெண்களையும் வேலைக்கு அமர்த்தியுள்ளதன் மூலம் சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் ஊடாக இங்கு சமூக வாழ்க்கை இராணுவ மயப்படுத்தப்பட்டிருக்கின்றது.

இந்த இராணுவ மயப்படுத்தல் நடவடிக்கை அரசியல்வாதிகள், சமூகச் செயற்பாட்டாளர்கள்,மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் மற்றும் மனித உரிமை ஆர்வலர்கள், பெண் உரிமைச் செயற்பாட்டாளர்கள் என எந்தத் தரப்பினராலும் கண்டு கொள்ளப்படாத ஒரு விடயமாகக் காணப்படுகின்றது. அவர்கள் இதனை அறிந்திருந்தும் அதுகுறித்து எதையும் செய்யமுடியாதவர்களாக இருக்கின்றார்களோ என்னவோ தெரியவில்லை. ஆனால், இந்த விடயத்தை ‘அடையாளம் கொள்கை ஆய்வுக்கான நிலையம்’ ஓர் ஆய்வறிக்கையின் மூலம் வெளிச்சத்திற்குக் கொண்டு வந்துள்ளது. குடும்பப் பொருளாதாரத்துக்கான தொழில் வாய்ப்பு, முன்பள்ளிக் கல்வி, என்பவற்றின் ஊடாக மக்களுடைய வாழ்க்கையில் ஊடுருவியுள்ள பாதுகாப்புத் திணைக் களம் அவர்களுடைய சமூக வாழ்க்கையை என்னென்ன வழிகளில், எந்த அளவுக்குப் பாதித்திருக்கின்றது என்பதை அந்த அறிக்கை வெளிப்படுத்தியிருக்கின்றது.

**பொருளாதாரத்துக்காக இராணுவத்தில் தங்கியிருக்கும் நிலை**

இராணுவத்தினரிடம் சரணடைந்தனர் எனத் தெரிவிக்கப்படுபவர்கள், படையினரால் கைதுசெய்யப்பட்டு தடுப்புக்காவலின் பின்னர் இராணுவத்தினரால் புனர்வாழ்வுப் பயிற்சி வழங்கி சமூகத்தில் இணைக்கப் பட்டவர்களுக்குசிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் ஊடாக கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் உள்ள பண்ணைகளில்அரசாங்கம் வேலைவாய்ப்பை வழங்கியிருக்கின்றது.

அதேபோன்று யுத்தத்தால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்து பின்னர் மீள்குடியேற்றம் நடைபெற்றுள்ள கிராமங்களில் உள்ள குழந்தைகளுக்கான முன்பள்ளிகளில் பணியாற்றுவதற்கான ஆசிரிய நியமனங்களும் சிவில் பாதுகாப்புத் திணைக் களத்தால் வழங்கப்பட் டுள்ளன.

பண்ணைகளில் தொழில்செய்பவர்களுக்கும் முன்பள்ளி ஆசிரியைகளுக்கும் மாதம் 30 ஆயிரம் ரூபா சம்பளம் இராணுவத்தால் வழங்கப்படுகின்றது.யுத்தம் முடிந்த கையோடு இடம்பெயர்ந்தோருக்கான மனிக்பாம் இடைத்தங்கல் முகாமில் அபயமளிக்கப்பட்டிருந்த இடம்பெயர்ந்த மக்களுக்கான மீள்குடியேற்ற நடவடிக்கைகள் 2010 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் அரசாங்கத்தால் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. மீள்குடியேற்றத்துக்கான இடங்களைத்தெரிவுசெய்வது, மீள்குடியேறும் குடும்பங்களைத் தெரிவு செய்வது, அந்தக் குடும்பங்களை அந்தந்த இடங்களுக்கு வாகனங்களில் கொண்டுசெல்வது போன்ற அனைத்து விடயங்களிலும் சிவில் அதிகாரிகளிலும் பார்க்க, இராணுவத்தினரே முதன்மை இடம்பெற்றிருந்தனர்.

மீள்குடியேற்றப் பிரதேசங்களில் இராணுவத்தினருடைய பாதுகாப்பு மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகளும் மிகவும் இறுக்கமாக இருந்தன. இதனால் மீள்குடியேறிய மக்கள் பொது அமைப்புக்களினதும், நிறுவன ரீதியான தனியாரினதும் உதவிகளைப் பெற முடியாத நிலைமை ஏற்பட்டிருந்தது. அரசாங்கம் வழங்கிய நிவாரண உதவிகளுக்கு அப்பால் ஒருசில அரச சார்பற்ற நிறுவனங்களின் வாழ்வாதார உதவிகளைத் தவிர பிறருடைய வாழ்வாதாரத்துக்கான தொழில்வாய்ப்புக்கள் அந்த மக்களை அணுக முடியாத சூழலும் ஏற்படுத்தப்பட்டிருந்தது.

(மிகுதி நாளை...)

# முதலாவது வருட நினைவலைகள்





## இராசதுரை கோகுலதாசன் (லவன்)

**மண்ணில் 06.05.1966**

**விண்ணில் 05.10.2016**



### வஞ்சகத்தால் பிரித்தான் காலனவன்!

அன்பு பூண்டு சந்நிதியான் தவத்தவமிருந்து
எம்குலங் காத்திட வந்துதித்த தவப்புதல்வா!
அன்னமிட் டமுகுபுடைவை யனைத்தும் உடுத்து – நீவீர்
எண்ணம்போல் வரும் மாட்சிமை கண்டுநாம் மகிழ்ந்தோமே!

தம்பி தம்பி யென்று தம்பட்ட மடித்துநின்றோம்
நம்பி நம்பி யுமைப் பார்த்து நாம் காத்துக்கிடந்தோமே!
வெம்பி வெம்பி நாமும் செல்லப்பிராணிகளும் கதறிடவே
தெம்புதர யாருமற்று சோகத்தால் வாடிநின்றோம்!

வண்ணமிகு திருத்தலங்கள் வரும்வழி காத்திருக்க
எண்ணமிகு வுமைநோக்கி யேங்கியேநாம் தவித்திருக்க
பண்புமிகு பாசத்தை யும்மிடம்நான் பெற்று நிற்க
வஞ்சகங்கொண்டு காலனவ னுமைப்பிரித்தான் பாதிலியே!





**எமது குடும்பத்தின் தீபத்தின் முதலாம் வருட சிரார்த்த தினம் இன்று (24.09.2017) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெற உள்ளது. அத்தருணம் தாங்கள் வருகை தந்து முற்பகல் 11 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறவுள்ள ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெற உள்ள மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டிக் கொள்கின்றோம்.**



**இந்துக் கல்லூரி வீதி,
வடலியடைப்பு,
பண்டத்தரிப்பு.**

**இங்ஙனம்
சகோதரிகள்
ரதி, ரஞ்சி.**

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.09.2017 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.